


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 அக்டோபர் 04, 2007 புரட்சி 5 முழக்கம் 40 விலை : ரூ.2.50


# இரட்டைக் குவளை உடைப்பு: கழகம் போர்க்கொடி

ஈரோடு, சேலம், கோவை, திண்டுக்கல் மாவட்டங்களில் இரட்டைக் குவளையை எதிர்த்து கழகம் போர்க்கொடி உயர்த்தியுள்ளது. இப்பகுதிகளில் இரட்டை பெஞ்சுகள் உடைத்து நொறுக்கப்பட்டன. இரட்டைக் குவளை ஒழிக்கப்பட்ட பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

தமிழ்நாட்டில் தேநீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு 'தனிக் குவளை - தனி இருக்கை'யைப் பின்பற்றும் தீண்டாமைக்கு எதிரான போராட்டக் களத்தில் பெரியார் திராவிடர் கழகம், தீவிரமாக இறங்கியுள்ளது. திண்டுக்கல், சேலம், கோவை மாவட்டங்களில், இத்தகைய 'தீண்டாமை' பின்பற்றப்படும். தேனீர்க் கடைகளின் பட்டியலை கழகத் தோழர்கள் தயாரித்தனர். கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டில் அது வெளியிடப் பட்டது. அதற்குப் பிறகு தான் காவல்துறை விழித்துக் கொண்டது. கழகப் பொறுப்பாளர்களிடம் பட்டியலைப் பெற்றுக் கொண்டு காவல்துறை அதிகாரிகள், அந்தக் கடைகளுக்குச் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சில இடங்களில் தேனீர்க்கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர். பெரும்பாலான கடைகளில் இரட்டைக் குவளை முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் இந்தப் பகுதிகளில் இரட்டைக் குவளை எதிர்ப்புப் பிரச்சாரப் பயணமும் நடத்தப்பட்டது. இரட்டைக் குவளை முறையைத் தொடர்ந்து பின்பற்றும் தேனீர்க் கடைகளில் 'இரட்டைக் குவளை' உடைப்புப் போராட்டம் அக்டோபர் 2 இல் நடத்தப் படும் என்று பெரியார் திராவிடர் கழகம் அறிவித்திருந்தது.

இரட்டைக் குவளை முறை நீக்கப்பட்ட பகுதிகளில் தீண்டாமைக்கு எதிராக கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் என்றும், இரட்டைக் குவளை தொடர்ந்து நீட்டிக்கப்படும் தேனீர்க் கடைகள் முன் திட்டமிட்டபடி உடைப்புப் போராட்டம் நடக்கும் என்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்திருந்தார். திட்டமிட்டபடி அக்டோபர் 2 ஆம் தேதி ஆர்ப்பாட்டங்களும், குவளை உடைப்புப் போராட்டங்களும் கழகத் தோழர்களால் நடத்தப்பட்டுள்ள செய்திகள் கிடைத்துள்ளன. செய்திகள் விவரம்:

## இரட்டை பெஞ்ச் உடைப்பு: 60 கழகத்தினர் கைது

தொடர்ந்து பல்லடத்திலிருந்து மாவட்டத் தலைவர் சு.துரைசாமி தலைமையில் புறப்பட்ட கழகப் போராட்டக் குழுவினர் முதலில் செம்மிபாளையம் நோக்கிப் புறப்பட்டனர். அங்கு இரட்டைக் குவளை வைத்துள்ள தேனீர்க் கடைக்கு சென்றபோது கடைக்காரர் இரட்டைக் குவளைகளை அப்புறப்படுத்தி விட்டேன், இனிமேல் வைக்க மாட்டேன் என்று உறுதியளித்தார். சூலூர் ஒன்றியத்தில் உள்ள மேற்கு இராசாகவுண்டம் பாளையம் என்ற கிராமத்துக்கு வந்த தோழர்கள் தீண்டாமையை பின்பற்றும் தேனீர்க் கடை நோக்கி சென்றனர். அங்கு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். அங்கே தலித் மக்கள் அமருவதற்காக, உயரம் குறைவான ஒரு சிறிய அமரும் பலகையும் பிறசாதியினருக்கு உயரமான பெரிய அமரும் பலகையும் இருந்தது. தலித் மக்களுக்கு தனியாக வைக்கப்பட்டிருந்த அமரும் பலகையைத் தூக்கி வீசி, கழகத் தோழர்கள் அடித்து நொறுக்கினர். "தீண்டாமை ஒழிக, சாதி ஒழிக" என்ற முழக்கங்கள் உணர்ச்சிகரமாக எழுப்பப்பட்டன. தீண்டாமை ஒழிப்புக்கான காவல்துறை பிரிவினர் ஏராளமாக குவிந்தனர். காவல்துறையினர் 'தீண்டாமை'யைத் தடுக்காமல், அதைத் தட்டிக் கேட்ட தோழர்களைத் தடுக்க முயன்றனர். தோழர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. அங்கிருந்து இரட்டைக் குவளை பின்பற்றப்பட்டு வரும் செங்கத்துறை எனும் கிராமத்தை நோக்கி, கழகத் தோழர்கள் புறப்பட்டனர். இது ஜெயலலிதா அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த செ.ம. வேலுச்சாமியின் சொந்த ஊராகும். ஊர் எல்லையிலேயே ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். "ஊருக்குள் நுழைய கூடாது கைது செய்கிறோம்" என்று காவல்துறை அதிகாரிகள் தடுத்தனர். "தீண்டாமையைத் தடுக்க வேண்டிய காவல்துறை - எங்களைத் தடுப்பதுதான் நீங்கள் செய்யும் சட்டக் கடமையா?" என்று தோழர்கள் கேட்டனர். ஆனால், ஊருக்குள்ளே நுழைய விடமாட்டோம் என்று அறிவித்து, காவல்துறையினர் கழகத் தோழர்களைக் கைது செய்தனர். 60 கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட கழகத் தோழர்கள் - அஞ்ச மாட்டோம், அஞ்ச மாட்டோம், கருப்புச் சட்டைகள் அஞ்ச மாட்டோம். துணை போகாதே, துணை போகாதே, தீண்டாமைக்கு துணை போகாதே. உடைப்போம், உடைப்போம் இரட்டைக் குவளைகளை உடைப்போம் என முழக்கமிட்டனர். கைது செய்யப்பட்ட தோழர்கள் சூலூர் காவல்நிலையம் கொண்டு போகப்பட்டனர். அங்கு மேற்கு ராசாக்கவுண்டம் பாளையத்தில் இரட்டை இருக்கைகளை உடைத்ததற்காக பொங்கலூர் கார்த்திக், சுக்கம்பாளையம் ஆறுமுகம் ஆகிய இரண்டு தோழர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, மற்ற தோழர்களை விடுதலை செய்தனர். களப்பணி ஒருங்கிளைப்பாளர் அங்ககுமார், சூலூர் பன்னீர்செல்வம், பல்லடம் திருமூர்த்தி, ஒன்றியச் செயலாளர் விஜயன், பொங்கலூர் மயில்சாமி, திருப்பூர் சண்முகம், மாணவரணி அமைப்பாளர்கள் கார்த்திகேயன், பனிமலர், தமிழ்ச்செல்வி, அ.ப.சிவா, அனுப்பட்டி பிரகாஷ், முகில் ராசு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### வெள்ளி மலைப் பட்டினம்

கோவை தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் உள்ளது வெள்ளிமலைப்பட்டினம் எனும் கிராமம். கோவையிலிருந்து

4 ஆம் பக்கம்



## புகார் தந்த 11 வயது சிறுவன்

*வெள்ளிமலைப் பட்டினத்தில் – தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறை உள்ளது. பஞ்சாயத்துத் தலைவராக உள்ள தி.மு.க.வைச் சார்ந்த சுகன்யா ராஜரத்தினம் முதலில் மறுத்தார். பிறகு ஒப்புக் கொண்டார். ஆனாலும் காவல் நிலையத்தில் – புகார் தர அக்கிராமத்தில் வாழும் தலித் மக்கள் முன் வர அஞ்சினர். கழகத் தோழர்கள் போராட்டம் நடத்தியபோது, தலித் பெரியவர்கள் அஞ்சி ஒதுங்கி நின்ற போது, அஜித் என்ற 11 வயது சிறுவன் (தந்தை பெயர் பட்டி) துணிந்து முன் வந்து இரட்டைக் குவளை இருப்பதாக புகார் கொடுத்தான். ஆபாந்துரை காவல் ஆய்வாளர் புகாரைப் பதிவு செய்து கொண்டார்.*

**தலையங்கம்**

# தீண்டாமையின் வலி!

‘தீண்டாமை சட்டப்படி குற்றம்’ என்ற முழக்கங்கள் அரசுகளால் விளம்பரம் செய்யப்படுகின்றன. அந்தத் தீண்டாமை தேனீர்க் கடைகளில், முடிதிருத்தகங்களில், பொதுக் கோயில்களில், சுடுகாட்டில், இன்றும் தலைவிரித்தாடிக் கொண்டிருப்பதை மட்டும், அரசுகள் பார்க்க மறுக்கின்றன. குறிப்பாக, பெரியாரியத்தின் கொள்கைத் தாக்கம் நிறைந்த தமிழ்நாட்டில், இந்த அநீதி உயிர்த் துடிப்புடன் இருப்பது, மிகப் பெரும் அவலம்!

காவல்துறையில் தீண்டாமைக் குற்றங்களுக்காக தனிப்பிரிவுகள் இருக்கின்றன. கிராமங்களில் தீண்டாமையைத் திணிப்போர் மீது கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய இந்தத் துறை, இதில் ‘கண்டும் காணாத’ போக்கை பின்பற்றுவதற்கு என்ன காரணம்? இந்தத் துறையில் உள்ள பல காவல்துறையினரே - சாதிய உணர்வுடன் இருப்பதும், ஆட்சியாளர்களும் இதில் தீவிர கவனம் செலுத்தாமையும் தான்!

‘இரட்டைக் குவளையை’ வைத்துக் கொண்டிருக்கும் தேனீர்க் கடைகளின் பட்டியலை, கிராமம் கிராமமாகச் சென்று பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள்தான் தயாரித்தனர். அதை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிட்ட பிறகுதான், காவல்துறை, பட்டியலைப் பெற்று நடவடிக்கைகளில் இறங்கியது. அதற்குப் பிறகும், ‘இரட்டைக் குவளை’யை ஒழிக்க மாட்டோம் என்று சட்டத்துக்கு சவால் விடுவோர் மீது நடவடிக்கை எடுக்காத காவல் துறை, சட்டத்தை அமுல்படுத்தக்கோரும், கழகத்தினரைக் கைது செய்கிறது. இதன் மூலம் காவல்துறையின், “தீண்டாமை ஒழிப்புப் பிரிவு”, ‘தீண்டாமை பாதுகாப்புப் பிரிவாக’ தன்னை வெட்கமின்றி அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தீண்டாமையை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, இந்தியாவுக்கே, தமிழ்நாடு வழிகாட்டுகிறது என்ற நிலையை உருவாக்குவதுதான் தமிழ்நாட்டில் பெரியார் - அண்ணா வழி ஆட்சி நடக்கிறது என்பதற்கான சரியான அடையாளமாக இருக்க முடியும்.

சேலம் கந்தம்பட்டி திரவுபதி அம்மன் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டோர் நுழைவுப் போராட்டம் நடக்க இருந்ததையொட்டி, இப்போது கோயிலை பூட்டி, ‘சீல்’ வைத்துவிட்டார்கள். கோயில் பூட்டப்பட்டுக் கிடக்கும் ஒவ்வொரு நாளும் தீண்டாமையைப் பறைசாற்றும் நாள்தான்! இதற்காக, அரசு வெட்கப்பட வேண்டாமா?

திருவண்ணாமலையில் - தாமரைப்பாக்கம் அக்னீசுவரன் கோயில், பழனி வட்டம் ஆயக்குடியிலுள்ள காளியம்மன் கோயில், விருதுநகர் மாவட்டம் பவாலி கிராமத்திலுள்ள காமாட்சியம்மன் கோயில் ஆகிய கோயில்களில், தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவுப் போராட்டத்தை தமிழ்நாடு மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி நடத்துகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த மனித உரிமைப் போராட்டங்களை பெரியார் திராவிடர் கழகம் பாராட்டி வரவேற்கிறது!

இது ஏதோ தலித் மக்களுக்கான பிரச்சினையாகக் கருதி பிற இயக்கங்கள் ஒதுங்கி நிற்கக் கூடாது. இது சமூகத்தின் பிரச்சினை. குறிப்பாக தலித் அல்லாத, முற்போக்கு சிந்தனை கொண்ட ஒவ்வொருவருக்கும் இதில் முக்கிய பங்கும், கடமையும் இருக்கிறது என்பதை அழுத்தமாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஒரு சில கிராமங்களில் கழகத்தின் போராட்டத்துக்கு எதிராக, ம.தி.மு.க., அ.தி.மு.க., தி.மு.க. போன்ற கட்சிகளைச் சார்ந்தவர்களே சாதி வெறி சக்திகளுடன் கைகோர்த்து நிற்பதையும் நாம் வெட்கத்துடனும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

தீண்டாமைக்கு எதிராக களம் புகுந்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்து கைது செய்துள்ளது. பெரியார் திராவிடர் கழகம், இதற்காக விலை கொடுக்கத் தயாராகவே இருக்கிறது. ஆனால், தீண்டாமைக்கு உள்ளாகும் மக்கள் தரும் புகார்கள் மீது, வழக்குப் பதிவு செய்ய கடும் போராட்டமே நடத்த வேண்டியிருக்கிறது. பெரும்பாலான புகார்கள் பதிவுசெய்யப்படுவதே இல்லை. இதுதான் உண்மை நிலை. திண்டுக்கல் அருகே வாகரையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களே இந்த கசப்பான அனுபவத்தை சந்தித்தார்கள்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் அரசு நிதியிலிருந்து கட்டப்படும் சுடுகாடுகூட ‘தலித்’ சுடுகாடு - தலித் அல்லாதவர் சுடுகாடு என்று கட்டப்படுகிறது. ஆனைமலை ஒன்றியத்தில் பில்சின்னாம்பாளையம் பஞ்சாயத்தில் இப்படிக் கட்டப்பட்டிருக்கிறது. தீண்டாமைக்கு அரசே இப்படி துணை போகலாமா?

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஏன் இந்தத் தீண்டாமையை எதிர்க்கவில்லை? தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ‘தீண்டாமை’ எதிர்ப்பில் உண்மையான ஈடுபாடு இருந்தால், தங்களது தொகுதிக்குள் நடக்கும் இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்தியிருக்க மாட்டார்களா? ‘ஜனநாயகம்’ என்ற பெயரில் ‘ஜாதி நாயகம்’ நடப்பதாகத் தானே இதற்கு அர்த்தம்?

தமிழ்நாட்டில் ‘பெரியார் ஆட்சி’யே நடக்கிறது என்று அரசுக்கு பாராட்டு பத்திரங்களை வழங்கிக் கொண்டு ‘தமிழர் தலைவர்’ தகுதி தனக்கு மட்டுமே உரியது என்று உரிமை கோரும் ‘வீரமணியார்கள்’ கண்களுக்கு - இந்த தலித் தமிழர்கள் பிரச்சனை தெரியாமல் போய்விட்டதா? ஆட்சிக்கு அவர்கள் அழுத்தம் தரக் கூடாதா? முதல்வருக்கு பாராட்டுகளைக் குவிப்பதற்கு மட்டும்தான் தெரியுமா?

தீண்டாமை வலியின் கொடுமை பாதிக்கப்பட்டவனுக்கு மட்டுமே புரியும்! தீண்டாமைக்கு எதிராக உறுதியாகக் களத்தில் நிற்கிறவர்கள்தான் - பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் தார்மீக உரிமை பெற்றவர்கள்! ‘தீண்டாமையை’ எதிர்த்துப் போராடாமல், பார்ப்பன எதிர்ப்பை மட்டும் பேசுவது மற்றொரு ‘பார்ப்பனிய’மேயாகும். பெரியார் திராவிடர் கழகம் - இந்தப் பார்வையில் தனது போராட்டத்தைத் தொடருகிறது, தொடரும் மனித உரிமைப் போராட்டத்தில் களத்தில் இறங்கியிருக்கும் பெரியார் திராவிடர் கழகம் செயல் வீரர்களை பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

# சேலம் மாவட்டத்தில் நடந்த ஆர்ப்பாட்டங்கள்



பல்லடம்



மேச்சேரி



ஓமலூர்



சேலம்

# ‘அவாள்கள்’ போட்ட அணுசக்தி ஒப்பந்தம் (4)

இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை உருவாக்க பின்னணியில் இருந்து செயல்பட்டவர்கள் யார்? யார்? - இது ஒரு முக்கியமான கேள்வி. உயர்மட்ட பார்ப்பன அதிகாரிகள், அமெரிக்காவின் தீவிர ஆதரவாளர்களாக இந்தியாவுக்குள் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்களே. இந்த ஒப்பந்தத்தின் பின்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் யார்?

1. **எம்.கே. நாராயணன் :** இவர் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற அதிகார மிக்க பதவியில் இருப்பவர். ராஜீவ் காந்தி ஆட்சியில் உளவுத் துறை இயக்குனராக இருந்தவர். ஈழத் தமிழர் பிரச்சினையில் போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக திரை மறைவில் இந்திய அரசு அதிகாரத்தையும், ராணுவத்தையும், இயங்க வைத்துக் கொண்டிருப்பவர். இந்திய கடற்பரப்பில், சிங்கள-இந்திய கப்பல் படைகளின் கூட்டு ரோந்து திட்டத்தை வலியுறுத்தியவர். அந்த முயற்சி, தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பால் தோல்வி அடைந்துவிட்டதால், இப்போது அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளோடு இந்திய கப்பல் படை கூட்டுப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்து விட்டார். அணுசக்தி ஒப்பந்தம் உருவாவதற்கு முன்பு - அமெரிக்கா இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று உருவானது. அதுவே இந்த கூட்டுப் பயிற்சிக்கு வழிவகுத்துள்ளது.
2. **ரோனென் சென் :** வங்காளப் பார்ப்பனரான இவர் அமெரிக்காவில் இப்போது இந்தியத் தூதராக இருக்கிறார். இந்த ஒப்பந்தம் தொடர்பாக அனைத்து சந்திப்புகளையும் ஒருங்கிணைத்தவர் இவர்தான். இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் தலைவெட்டப்பட்ட கோழிகளைப் போல் துடிக்கிறார்கள் என்று வாய்க் கொழுப்போடு இவர் பேசினார். அது இந்திய நாடாளு மன்றத்தில் கடும் புயலை உருவாக்கியது. பிறகு அவ்வாறு பேசவில்லை என்று மறுத்தார். எதிர்ப்பு கடுமையாகவே மன்னிப்புக் கேட்டார்.
3. **ஷியாம் சரண் :** பிரதமரின் சிறப்பு தூதர் என்ற பொறுப்பில் இருக்கும் இவரும் ஒரு பார்ப்பனர். அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ள நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து, இந்த ஒப்பந்தத்துக்கு இவர் தான் ஆதரவு திரட்டியவர்.
4. **அனில்கோட்கர் :** இவர் அணுசக்தித் துறையில் தலைவராக இருக்கிறார். இவரது சம்மதம் இல்லாமல் எந்த அணுசக்தி ஒப்பந்தமும் நிறைவேற முடியாது என்று கூறப்படுகிறது. ஒப்பந்தத்தில் - அவ்வப்போது பல சந்தேகங்களை இவர் எழுப்பியது உண்மைதான் என்றாலும், ஒப்பந்தம் உருவாக பச்சைக்கொடி காட்டி விட்டார். அணுசக்தித் துறையில் பணியாற்றிய பல விஞ்ஞானிகள், இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கருத்துகளை வெளியிட்டது அனில் ககோட்கருக்கு கடும் நெருக்கடியை உருவாக்கியது. குறிப்பாக பாபா அணுசக்தி மய்யத்தின் முன்னாள் இயக்குனர் மற்றும் அணு உலைப் பாதுகாப்பு ஆலோசகரான ஏ.என். பிரசாத், அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ஏ. கோபாலகிருட்டிணன் உட்பட பல விஞ்ஞானிகள், இந்த ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
5. **சிவ சங்கர் மேனன் :** வெளியுறவுத் துறை செயலாளராக இருக்கும் இவர் - இந்த ஒப்பந்தம் உருவாவதில் சில தடைகள் நேர்ந்தபோது கடைசி நேரத்தில் போய் கலந்து கொண்டு, சிக்கல்களைத் தீர்த்து வைத்தார். இவர் ஏற்கனவே அணுசக்தித் துறையில் பணிபுரிந்த அதிகாரி.
6. **எஸ். ஜெய்சங்கர் :** இவர் தற்போது சிங்கப்பூரில் இந்தியத் தூதராக இருப்பவர். தீவிர அமெரிக்க ஆதரவாளர். இவரது தலைமையில் தனி அணியே ஒப்பந்தம் உருவாக்குவதில் மூளையாக செயல்பட்டது. ஒப்பந்தத்துக்கு எழுத்து வடிவம் தந்தது, இவரும் இவரது அணியுமேயாகும்.

இப்படி - இந்தியாவின் தரப்பில் பார்ப்பன அதிகாரிகளும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யத் துடிக்கும் அதிகாரிகளும், ஒப்பந்தத்தை உருவாக்கி விட்டார்கள்.

இந்தியா - இதுவரை பின்பற்றி வந்ததாகக் கூறப்பட்ட அணிசேராக் கொள்கைகளை புதைகுழிக்கு அனுப்பிவிட்டு, அமெரிக்க ஆதரவு நாடாக இந்தியாவை மாற்றும், இந்த ஒப்பந்தத்தில், மக்கள் பிரதிநிதிகள் பங்களிப்பே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் பிரதிநிதிகளுக்கு சட்டங்கள், கொள்கைகளை வகுக்கும் உரிமைகளை பார்ப்பன அதிகார வர்க்கமும் நிர்வாகமும், தங்களது கைகளில் எடுத்துக் கொண்டு விட்டன. மற்றொரு பக்கம் மக்கள் மன்றங்கள் இயற்றக் கூடிய மக்கள் உரிமைக்கான சட்டங்களை முடக்கிப் போடும் உரிமைகளை உயர்நீதிமன்றங்களும், உச்ச நீதி மன்றங்களும், கைப்பற்றிக் கொண்டு விட்டன. பார்ப்பன உயர்சாதி நீதிபதிகள் தான் - இந்த நீதிமன்றங்களில் கோலோச்சுகிறவர்கள்.

சர்வதேச ஒப்பந்தம் ஒன்றை பார்ப்பன அதிகாரிகளே உருவாக்குவதற்கு, இந்திய அரசியல் சட்டத்தில், விதிகளே இல்லை என்றும், அப்படி உருவாக்கப்படுகிற ஒப்பந்தங்கள், அரசியல் சட்டப்படி செல்லத் தக்கவையே அல்ல என்றும், உச்சநீதிமன்றத்தின் மூன்று மூத்த நீதிபதிகள் இணைந்து அறிவித்துள்ளனர். உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகளான வி.ஆர்.கிருஷ்ணய்யர், பி.பி.சாவந்த், எச். சுரேஷ் ஆகிய மூவரும் இணைந்து வெளியிட்டுள்ள விரிவான அதிர்ச்சியான அறிக்கை 'இந்து' நாளேட்டில் (செப்.13, 2007) வெளிவந்துள்ளது.

“வெளிநாட்டுடனோ அல்லது வெளிநாட்டிலுள்ள ஒரு அமைப்பிடமோ, நாட்டைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்த ஒரு ஒப்பந்தத்தையும் செய்து கொள்வதற்கு, நிர்வாக அமைப்புக்கு சட்டரீதியாக அதிகாரம் கிடையாது. அப்படி உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் - நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் அது சட்டப்படி செல்லத்தக்கதாகும். நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளுக்கு, இப்படிப்பட்ட ஒப்பந்தங்களை உருவாக்கும் உரிமைகளை அரசுகள் வழங்குவதற்கும் இந்திய அரசியலமைப்பில், உரிமை வழங்கப்படவில்லை” என்று நீதிபதிகள், அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளதோடு, சட்டப் பிரிவுகளையும், அதற்கான விளக்கங்களையும், எடுத்துக்காட்டியுள்ளனர். நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய கருத்துகள் :

அரசியல் சட்டத்தின் 253 ஆவது பிரிவு வெளிநாடு களுடன், ஒப்பந்தம், உடன்பாடுகளை உருவாக்கும் உரிமையை நாடாளுமன்றத்துக்கு மட்டுமே, குறிப்பாக வழங்கியிருக்கிறது. எனவே சர்வதேச அளவில் இந்தியா செய்து கொள்ளும் உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் போதுதான் சட்டமாக முடியும்.

மத்திய அரசுக்கான அதிகாரங்கள் பற்றிய பட்டியல் தொகுப்பில் - 6 ஆவது பிரிவு, அணுசக்தி மற்றும் கனிம வளங்கள் உற்பத்தித் தொடர்பான பிரச்சினைகள், நாடாளுமன்றச் சட்டத்தின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறுகிறது. அதே பட்டியலில் இடம் பெற்றுள்ள 14 ஆவது பிரிவு வெளிநாடுகளுடன் ஒப்பந்தம், உடன்படிக்கை செய்து கொண்டாலும், அதன் பிறகு நாடாளு மன்றத்தின் வழியாக சட்டமாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது” என்று நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அமெரிக்காவில் ஏற்கனவே அமுலிலுள்ள அணுசக்தி தொடர்பான சட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் அமெரிக்கா, இந்தச் சட்டங்களில் கொண்டு வரும் திருத்தங்கள் அடிப்படையில்தான், அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியும் என்று, அணுசக்தி ஒப்பந்தத்தின் பிரிவுகள் கூறுகின்றன. இதை நீதிபதிகள் எடுத்துக்காட்டி ஒரு கேள்வியை முன் வைத்துள்ளனர்.

அமெரிக்கா, அண்மையில் தனது நாடாளுமன்றத்தில் (அமெரிக்கன் காங்கிரஸ்) கொண்டு வந்துள்ள ஹைடு சட்டம் உட்பட தனது உள்நாட்டு அணுசக்தி தொடர்பான சட்டங்களில் என்ன திருத்தங்கள் கொண்டு வரப்போகிறது என்பது பற்றி தெரிவதற்கு முன்பாகவே, இந்த ஒப்பந்தத்தை இந்தியா ஏற்கலாமா, என்பதே நீதிபதிகள் எழுப்பியுள்ள கேள்வி.

இந்திய அரசியல் சட்டத்திலேயே வழங்கப்படாத உரிமைகளை - பார்ப்பன அதிகார வர்க்கம் தனது கைகளில் எடுத்துக் கொண்டு செயல்படுகிறது. ஆட்சியிலே அமர்ந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகள் இதற்கு ஒப்புதல் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இங்கே 'ஜன நாயகம்' என்ற பெயரில் 'பார்ப்பன நாயகம்' தான் நடந்து கொண்டிருக்கிறது என்பதையே இது உறுதிப்படுத்துகிறது.

**மன்னர்கள் சத்திரியர்களாக இருந்தாலும், அவர்களுக்கு தலைமை தாங்கி கட்டளைப் பிறப்பிக்கும் உரிமை பார்ப்பனர்களுக்கே உண்டு என்ற ‘மனுதர்மம்’ தான், இப்போது வேறு வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

தமிழ்நாட்டுக்குரிய கடல்பகுதியில் அமெரிக்காவும், ஜப்பானும், ஆஸ்திரேலியாவும், கூட்டுப் பயிற்சி நடத்தும் என்று முடிவு எடுக்கும் அதிகாரம் இந்தியப் பார்ப்பனர்களுக்கு எப்படி வந்தது?

தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் கருத்துகளை கேட்டு, அவர்கள் விவாதம் செய்யும் உரிமைகள் மறுக்கப் பட்ட ஒரு ஒப்பந்தத்தை தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்கக் கூடிய உரிமை, பார்ப்பனர்களுக்கு உண்டா?

மரபுசாரா மின் உற்பத்திகளில் முன்னணியில் நிற்கும் தமிழ்நாட்டில் அந்த மின்உற்பத்திக்கு மாறாக, சுற்றுச் சூழலைக் கெடுத்து, மனித சமூகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அணுசக்தி மின்சாரத்தையே தயாரிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை தமிழ்நாட்டின் மீது ஏன் திணிக்க வேண்டும்? இதைத் தமிழர்கள் ஏன் ஏற்க வேண்டும்?

தமிழர்களை தனிமைப்படுத்தும் - இந்திய தேசிய ஆட்சியை தமிழர்கள் மட்டும் ஏற்க வேண்டுமா?

ஆட்சி அதிகாரத்தில் உள்ள பார்ப்பன-பனியா கும்பலை நோக்கி தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாத மக்கள் எழுப்ப வேண்டிய கேள்விகள் இவை! **(நிறைவு)**

## குரங்கு பார்ப்பானாக வந்தாலும்...

*இராமாயணத்தில் ஒரு காட்சி. அயோத்தியாபுரி அரசன் ஆயிரம் ஆசை நாயகிகளின் ஆசான். தசரத மகா சக்ரவர்த்தி புத்திரகாமேஷ்டி யாகம் செய்து, புரோகிதன் மூலம் பெற்றெடுத்த இராமச்சந்திர மூர்த்தியின் எதிரே ‘குரங்கு வம்சத்தில்’ பிறந்த அனுமான் ‘பிராமண’ உருவத்தில் வருகிறான்.*

*அந்தப் ‘பிராமண’ உருவத்தைக் கண்டதும், ‘இராம பிரபு’ அப்படியே சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து வணங்குகிறான்.*

*எதிர்பாராது நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சி கண்டு அனுமான் துடிக்கிறான்.*

*“இராம பிரபு... என்ன காரியம் செய்து விட்டீர்கள்? நான் உண்மையான பிராமணன் அல்ல. நானோ வானர வம்சத்தில் பிறந்தவன். மரம், செடி, கொடிகளில் தாவிப் பிழைப்பவன். ‘பிராமண’ உருவெடுத்து வந்தேன். அவ்வளவுதான். என கால்களில் கடவுள் அவதாரமாகிய தாங்கள் வீழ்ந்து நமஷ்கரிப்பது நியாயமா? நீதியா? தருமமா? என்று பதறுகிறான்.*

*அப்பொழுது இராமன் கூறுகிறான்.*

*“அனுமு! நீ அறியாமையிலே பேதலிக்கிறாய். பிராமண உருவத்தில் வருவது எதுவாக இருந்தாலும், அது குரங்காய் இருந்தாலும் சரியே. நமஷ்கரித்து வணங்குவதே சரியான தருமமாகும். பிராமணனே சகலத்திறகும் மேலானவன்” என்று பதில் கூறுகிறான்.*

*இந்தக் காட்சியைப் பக்தி ரசம் சொட்ட தீட்சதர்களும் சாஸ்திரிகளும் பிரசாரம் செய்கிறார்கள் என்றால் காரணம் புரிகிறதா?*

*‘இராம பிரானே’ ‘பிராமணர்’களைத் தெய்வம் என்று கூறி, தொழுது இருக்கிறான் என்ற எண்ணத்தை நம்மவர்கள் நெஞ்சத்திலே நிலைபெறச் செய்து, நாம் என்றும் பார்ப்பன அடி தொழும் ஆழ்வார்களாக இருக்க வேண்டும் என்ற நப்பாசையால் அல்லவா?*

*இராமாயணம் போன்ற ‘இதிகாசங்கள்’ எழுதப் பட்டதும், அதில் இதுபோன்ற காட்சிகள் சித்தரிக்கப் பட்டதும், அந்த நிலையை என்றென்றைக்கும் நிலை நிறுத்தும் நோக்கத்தோடல்லவா?*

*இதுவரை உணராவிட்டாலும், ஏமாளித் தமிழர்கள் இனியேனும் உணர்வார்களாக!*

## மயிலாடுதுறையில் இராமாயண மோசடி விளக்கக் கூட்டம்

மயிலாடுதுறையில், செப்.30 ஆம் தேதியன்று சின்னக்கடை வீதியில் முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுத்த மதவெறி சக்திகளைக் கண்டித்தும் இராமாயணப் புரட்டை விளக்கியும் கழக சார்பில் பொதுக் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் இளையராசா தலைமையில் நடந்த கூட்டத்தில், கழகத் தோழர் சி. இராசராசன், இளந்தமிழன் (விடுதலை சிறுத்தைகள்), தங்க. அய்யாசாமி (பா.ம.க. மாவட்ட செயலாளர்), மா.ஈழவளவன் (விடுதலை சிறுத்தைகள் மாவட்ட அமைப்பாளர்), இரா. முரளிதரன் (தமிழர் உரிமை இயக்கம்), குத்தாலம் பி.கல்யாணம் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் - தி.மு.க.) ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சுமார் ஒன்றரை மணி நேரம் ராமாயணப் புரட்டுகளை விளக்கி உரையாற்றினார்.

பெருந் திரளாக மக்கள் திரண்டிருந்தனர். முன்னதாக - அன்று காலையிலிருந்து மாலை வரை வீதி வீதியாக தோழர் முரளிதரன் மதவெறிச் சக்திகளின் முகத் திரைகளைக் கிழித்து, ஆட்டோவில் பிரச்சாரம் செய்தார்.

# தீண்டாமையை தடுக்காத காவல்துறை கழகத்தினரைக் கைது செய்த கொடுமை!

முதல் பக்கத் தொடர்ச்சி

35 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள இக் கிராமத்திலுள்ள தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறை பின்பற்றப்படுவதாக தகவல்கள் கிடைத்தன. கோவை மாவட்ட கழகத் தோழர்கள் - ஆட்சிக் குழு உறுப்பினர் ஆறுச்சாமி தலைமையில், வெள்ளிமலைப்பட்டினம் கிராமத்துக்குத் திரண்டு வந்தனர். தீண்டாமை, சாதி,



எதிர்ப்பு முழக்கங்களோடு, தேனீர்க் கடைகளை நோக்கி புறப்பட்டுச் சென்றபோது, பஞ்சாயத்து தலைவர் சுகன்யா ராஜரத்தினம், கழகத் தோழர்களை வந்து சந்தித்தார். இவர் தி.மு.க.வைச் சார்ந்தவர்.

“இரட்டைக்குவளை முறையை உடனே நிறுத்தக் கோரி, பஞ்சாயத்தில் நாங்களே தீர்மானம் போடப் போகிறோம். இரட்டைக் குவளையை எடுக்காவிட்டால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றி, எங்கள் கிராமத்தில் உள்ள 144 தேனீர்க் கடைகளுக்கும் தீர்மானத்தை அனுப்ப முடிவு செய்துள்ளோம். இதையே நீங்கள் வாக்குறுதியாக ஏற்று, போராட்டத்தைக் கைவிடுங்கள்” என்று வேண்டுகோள் விடுத்தார். “நீங்கள் வாக்குறுதி தந்ததுபோல் இரண்டைக் குவளை நீக்கப் படாவிட்டால், மீண்டும் நாங்கள் உடைப்புப் போராட்டத்தை நடத்துவோம்” என்று தோழர்கள் கூறி, சாதி தீண்டாமைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

காந்தி பிறந்த நாளுக்கு கூடிய கிராம சபை கூட்டத்தில் கிராம மக்களே அப்பகுதியிலுள்ள தேனீர்க்கடைகள், பேக்கரி கடைகளில் ஒரே குவளை வைக்க வேண்டும், இரட்டைக் குவளை வைத்தால், கிராம சபை நடவடிக்கை எடுக்கும் என்று தீர்மானம் நிறைவேற்றினர். ஆர்ப்பாட்டத்தில் கழகத்தின் பொறுப்பாளர்கள் இராசக்குமார், வே. கோபால், சா. கதிரவன், பொள்ளாச்சி பிரகாசு, பன்னீர்செல்வம், சிங்கை மனோகரன் உட்பட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

### காரத் தொழுவு

உடுமலை ஒன்றியம் காரத்தொழுவில் அக்.2 ஆம் தேதி காலை கழகத்தின் மாவட்ட செயலாளர் கருமலையப்பன் தலைமையில், சீவானந்தம் (மடத்துக்குளம் ஒன்றிய கழக செயலாளர்) முன்னிலையில் கழகத்தின் சார்பில், எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆதித் தமிழர் பேரவை, விடுதலை சிறுத்தைகள் அமைப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். கழகத்தின் போராட்ட அறிவிப்பைத் தொடர்ந்து காரத்தொழுவு காவல் நிலையத்தில் காவல் துறையினர், தேனீர்க் கடை நடத்துவோரை முதல் நாளே அழைத்து, கூட்டம் ஒன்றை நடத்தினர். ‘இரட்டைக் குவளை’யை வைக்க மாட்டோம் என்று அவர்களிடம் காவல்துறை எழுதி வாங்கியுள்ளது. காவல்துறை அதிகாரிகள் கழகத் தோழர்களிடம், இதைத் தெரிவித்தனர். இதைத் தவிர, அந்தப் பகுதியில் இரட்டைக் குவளை முறை இருந்தால், அந்தப் பட்டியலைத் தந்தால், ஒரு வாரத்துக்குள் நடவடிக்கை எடுப்பதாக கழகத்தினரிடம் உறுதி கூறினர்.

### மசக் கவுண்டனூர்

ஈரோடு மாவட்டம் குமராயனூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மசக் கவுண்டனூர், பாப்பாத்திக்காடு, காளியாக் கோயில் ஆகிய இடங்களில் உள்ள 11 தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறை தொடர்ந்து அமுலில் உள்ளது. அக்டோபர் 2 ஆம் தேதி காலை ஈரோடு மாவட்டக் கழகத் தலைவர் நாத்திகசோதி தலைமையில் கழகத் தோழர்கள் மசக்கவுண்டனூரில் இரட்டைக் குவளை முறையை நடைமுறைப்படுத்தும் குமார் என்பவர் தேனீர்க் கடையை நோக்கிப் புறப்பட்டனர். அங்கே 50-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இரட்டைக் குவளையை சட்டவிரோதமாக செயல்படுத்திக் கொண்டிருப்பதைத் தடுக்காமல், குவளையை உடைக்கச் சென்ற தோழர்களைத் தடுத்தனர்.

கழக மாவட்டத் தலைவர் நாத்திக சோதி - “எங்களை ஏன் தடுக்கிறீர்கள்? ஊருக்குள் எந்தக் கடையிலும் இரட்டைக் குவளை இருக்கக் கூடாது. அதைத் தடுக்காமல் எங்களை ஏன் தடுக்கிறீர்கள்! அப்படியே நீங்கள் எங்களைக் கைது செய்ய முடிவு செய்துவிட்டால், நாங்கள் சிறைக்குப் போகத் தயார். அதற்கு முன், எங்களை ஊருக்குள் அனுமதியுங்கள். நாங்கள் மக்களிடம், தீண்டாமை, சாதிக் கொடுமைகளை விளக்கிப் பேச வேண்டும் என்று கேட்டார். காவல்துறை அதிகாரிகள் அனுமதிக்க முடியாது என்று மறுத்தனர். இதற்கிடையே நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் கழகத் தோழர்களுக்கு ஆதரவாகத் திரண்டு வந்து விட்டனர். இதனைத் தொடர்ந்து, காவல்துறை கழகத் தோழர்களை ஊருக்குள் அனுமதித்தது. நாத்திகஜோதி திரண்டிருந்த மக்களிடையே ‘தீண்டாமை’க் கொடுமைகளை விளக்கிப் பேசினார். இரட்டைக்குவளையை பின்பற்றும் கடைகளுக்கு எச்சரிக்கை செய்தார். கழகத் தோழர்களை காவல்துறை தடுத்து நிறுத்திய செய்தி அருகில் இருந்த கொளத்தூர் பகுதி கழகத் தோழர்களுக்கு தெரிந்து, சம்பவ இடத்துக்கு விரைந்தனர். கழகம் தீண்டாமைக்கு எதிராக வெளியிட்ட துண்டறிக்கைகளை அப்பகுதி முழுதும் வீடு வீடாகச் சென்று வழங்கினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கழகத்தோழர்கள் நாத்திகசோதி (மாவட்டத் தலைவர்), விஜயகுமர் (ஈரோடு நகரக் கழகத் தலைவர்), அழகேசன், செந்தில், உத்திரசாமி, சுந்தரமூர்த்தி, தம்பி ஆகிய 8 தோழர்களை காவல்துறை கைது செய்தது. அவர்கள் வெள்ளித் திருப்பூர் காவல் நிலையத்துக்கு கொண்டு போகப்பட்டனர்.

### ஈரோட்டில்

2.10.07 செவ்வாய் கிழமைக் காலை 10.30 மணிக்கு ஈரோடு நகராட்சி அலுவலகம் முன்பு கழகத்தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், மாவட்டக் கழகச் செயலாளர் இராம. இளங்கோவன், மாநில நிதிக் குழு உறுப்பினர் பொன்னுச்சாமி, மாவட்ட துணைத் தலைவர் கா.சு.வேலுச்சாமி, மாவட்ட அமைப்பாளர்கள் சதுமுகை. பழனிச்சாமி, வெ. குமரகுருபரன் ஆகியோர் முன்னிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் ஆர்ப்பாட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்று பேசினார். அடுத்து ஆதித் தமிழர் பேரவையின் அமைப்பாளர் பெருமாவளவன் கருத்துரையாற்றினார். ஆதித் தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் வீர. கோபாலன், தமிழ் தேசிய பொதுவுடைமைக் கட்சியின் மாவட்ட செயலாளர் இளங்கோ ஆகியோருக்குப் பின்னர் கழகத் தலைவர் இறுதியுரை யாற்றினார்கள்.

தலைவர் கொளத்தூர்மணி தனது உரையில், பெரியார் பெயரைச் சொல்லி ஆட்சி நடத்தும் ‘கலைஞர்’ அவர்களின் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்படுவதும், ஆதிக்க சாதிகளின் அடாவடிப் போக்கால் இன்னமும் தமிழக கிராமங்களில் தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறை நிலவி வருவதும், அதனைப் போக்க வேண்டிய, களைய வேண்டிய அரசு அதனை விடுத்து, இரட்டைக் குவளையை உடைக்கும் கழகத் தோழர்களை, பெரியாரின் உண்மைத் தொண்டர்களை தொடர்ந்து கைது செய்து நடவடிக்கை எடுப்பதும் மிகுந்த கண்டனத்திற்குரியது.

இரட்டைக் குவளை வைத்துள்ள தேனீர்க் கடை உரிமையாளர்களை கைது செய்து வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, ‘பெரியார்’ ஆட்சி என பிரகடனப்படுத்திக் கொள்ளும் கலைஞரின் அரசு பெரியார் தொண்டர்களை கைது செய்வது என்ன நியாயம்? ஆகவே தயவுசெய்து இனிமேல் ‘கலைஞர்’ அவர்கள் பெரியாரின் பெயரைச் சொல்லாதீர்கள். ‘பெரியார்’ பெயரைச் சொல்வதற்கு உங்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று குறிப்பிட்டார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் சொன்ன தலைவர், சேது சமுத்திரத் திட்டம் பற்றி குறிப்பிடுகையில் இந்தத் திட்டம் உடனே தாமதமின்றி நிறைவேற்றப் பட வேண்டும். ‘கலைஞரின்’ தலைக்கு காவிக் கூட்டம் விலை பேசுவதற்கு காரணம், இராமாயணம், இராமன் குறித்த பெரியாரின் கருத்துக்களை, பகுத்தறிவுக் கொள்கைகளை தி.மு.க. பின்பற்றாமல், பரப்பாமல் விட்டதுதான். தி.மு.க. பெரியாரின் கொள்கைகளை பிரச்சாரம் செய்ய வேண்டும். ‘கலைஞர் பாசறை’ போன்ற அமைப்புகள் தொடர்ந்து பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். அதுவே இந்த பிரச்சினைக்கு தீர்வாக இருக்க முடியும் என தனது கண்டன உரையில் குறிப்பிட்டார். இறுதியாக ஈரோடு நகரச் செயலாளர் லெமூரியன் நன்றி கூறினார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட அமைப்பாளர் இரகுநாதன், மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் செல்வக்குமார், தாராபுரம் செயலாளர் குமார், முருகேசன், இராசேந்திரன், இராஜாமணி, காங்கேயம் பாண்டியன், ஈரோடு ரவி, சுப்ரமணியன், சிவா, மாது, லக்காபுரம் துரை, கொளப்பலூர் தலைவர் கொ.கி.சுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி தலைவர் தாமோதரன், பிரபாகரன், துரை, கோபி நகர அமைப்பாளர் குணசேகரன், ஜெயராமன், கீழ்வானி சுந்தரம், காசிபாளையம் கருப்பணன், செயக்குமார், பாலு, கடக்கரை தலைவர் அருளானந்தம், கலைச்செல்வன், சிவராஜ், எலத்தூர் அழகிரி, கிளாகுளம் செயலாளர் செந்தில் குமார், செல்வம் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்களும், ஆதித்தமிழர் பேரவைத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

### ஒட்டன்சத்திரத்தில் கழகத் தலைவர் பங்கேற்பு


அக்.2 ஆம் தேதி மாலை 5 மணியளவில் ஒட்டன்சத்திரத்தில் இரட்டைக் குவளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், மாவட்டத் தலைவர் துரை. சம்பத் தலைமையில் நடைபெற்றது. ஆதித் தமிழர் பேரவை மாவட்டத் தலைவர் வெள்ளை பாண்டியன், தமிழக தலித் விடுதலை இயக்க நிறுவனர் தலித் சுப்ரமணி, மதுரை மாவட்ட பெரியார் திராவிடர் கழக பொறுப்பாளர்கள் தமிழ்ப் பித்தன், விடுதலை சேகர், ஸ்டாலின், வெண்மணி, அகராதி, முருகேசன், பெரியார் நம்பி, முருகானந்தம், காந்தி, மருதமுத்து, கதிரவன், நல்லதம்பி உட்பட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஆர்ப்பாட்ட இறுதியில் கண்டன உரையாற்றினார். ●

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on : 5th October 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 அக்டோபர் 11, 2007 புரட்சி 5 முழக்கம் 41 விலை : ரூ.2.50

## இரட்டைக்குவளை அவலம் தொடருகிறது, இதோ பட்டியல்

# நவ.26 வரை அரசுக்கு கெடு!

*காவல்துறை மறுத்தாலும் தமிழ் நாட்டின் பல பகுதி களிலும் இரட்டைக் குவளை முறை நீடிக்கிறது.*

திண்டுக்கல் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

பெரியார் திராவிடர் கழகம் இரட்டைக் குவளையை ஒழிப்பதற்காக கடந்த செப்டம்பர் மாதம் 7,8,9 ஆகிய நாட்களில் மேற்கண்ட பண்டு கிராமங்களில் பிரச்சாரப் பயணம் நடத்தியது.

அப்பகுதி மக்களுக்கும் காவல்துறையினரின் கவனத்திற் கும் இப்பிரச்சனையைக் கொண்டு சென்றது. ஆனால் அக்டோபர் 2 வரை தேவையான அளவிற்கு காவல்துறை நடவடிக்கை எடுக் காததால் கண்டன ஆர்ப் பாட்டத்தை நடத்தியது.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளர் ஆகியோரின் அலட்சியப் போக்கு தொடர்ந்தால் வரும் நவம்பர் 26 அன்று மேற்கண்ட அனைத்துக் கடைகளிலும் இரட்டைக் குவளைகள் உடைக்கப்படும் என திண்டுக்கல் மாவட்ட கழகம் அறிவித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் இரட்டைக் குவளை முறை கடைபிடிக்கப்பட்டு வரும் தேனீர் கடைகள்:

**ஒட்டன்ச்சத்திரம் தொகுதி**

1. பஞ்சலிங்கம் டீக்கடை பெரிய கோட்டை
2. செந்தப்பத்தேவர் டீக்கடை பெரிய கோட்டை
3. துரைராசு டீக்கடை பெரியகோட்டை
4. இராசம்மாள் டீக்கடை பெரியகோட்டை
5. நாகராஜ் டீக்கடை பெரியகோட்டை
6. சின்னத்தம்பி டீக்கடை பெரியகோட்டை
7. சங்கரய்யர் (எ) இராமசாமி டீக்கடை, பெரியகோட்டை
8. நாச்சம்மாள் டீக்கடை பெரியகோட்டை
9. சோழராஜ் டீக்கடை ரெட்டியபட்டி
10. திருநீர் இராமசாமி டீக்கடை ரெட்டியபட்டி
11. மணி ஆசாரி டீக்கடை சின்னக்கரட்டுப்பட்டி
12. பசுங்கிளி டீக்கடை கந்தப்பக்கவுண்டன் வலசு
13. குட்டி (எ) பழனிச்சாமி டீக்கடை

**கந்தப்பக்கவுண்டன் வலசு**

14. அண்ணாச்சி டீக்கடை பால்கடை, வடகாடு
15. மணி டீக்கடை பால்கடை, வடகாடு
16. ஆறுமுகம் டீக்கடை பள்ளிக்கூடம் , வடகாடு
17. பெரியசாமி டீக்கடை வண்டிப்பாதை, வடகாடு
18. சவடமுத்து டீக்கடை புது அத்திக்கோம்பை
19. சின்ராசு டீக்கடை சக்கம்பட்டி, அம்பிளிக்கை
20. செல்லம்மாள் டீக்கடை சக்கம்பட்டி, அம்பிளிக்கை
21. தங்கவேல் டீக்கடை சக்கம்பட்டி, அம்பிளிக்கை
22. நடராஜ் டீக்கடை சக்கம்பட்டி, அம்பிளிக்கை
23. குபேந்திரன் டீக்கடை பெத்தேல்புரம், வடகாடு

**ஒட்டன்சத்திரம்**

24. குணசேகரன் டீக்கடை பெத்தேல்புரம், வடகாடு
25. கோபால் டீக்கடை முத்து நாயக்கன் பட்டி
26. வைரமுத்து டீக்கடை முத்துநாயக்கன் பட்டி
27. இலட்சுமி டீக்கடை முத்துநாயக்கன்பட்டி

**கள்ளிமந்தையம்**

28. கருப்புச்சாமி டீக்கடை அம்மாபட்டி
29. முத்துச்சாமி டீக்கடை அம்மாபட்டி
30. மயிலாத்தாள் டீக்கடை அம்மாபட்டி
31. வீராச்சாமி டீக்கடை கரியாம்பட்டி
32. சுரேஷ் டீக்கடை கரியாம்பட்டி
33. சின்னப்பன் டீக்கடை கரியாம்பட்டி
34. பெரியப்பன் கரியாம்பட்டி
35. இராமசாமி டீக்கடை கரியாம்பட்டி
36. பண்ணாடி டீக்கடை அம்பிளிக்கை
37. கவுண்டர் டீக்கடை கழுத்தறுக்கான்பாளையம

**அம்பிளிக்கை**

38. பெரியபொன்னையன் டீக்கடை ஓடைப்பட்டி,
39. செங்கோட்டை டீக்கடை ஓடைப்பட்டி
40. குருசாமி டீக்கடை ஓடைப்பட்டி
41. செல்லி (எ) செல்லம்மாள் டீக்கடை ஓடைப்பட்டி,
42. செல்லமுத்து டீக்கடை ஓடைப்பட்டி
43. தேவர் டீக்கடை பெரிய மண்டவாடி
44. கவுண்டர் டீக்கடை பெரிய மண்டவாடி

6 ஆம் பக்கம்

### *இரட்டைக் குவளை ஒழிந்துவிட்டதா?*

## காவல்துறைக்கு கழகம் மறுப்பு

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் விடுதலை இராசேந்திரன் விடுத்துள்ள அறிக்கை:

தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் இரண்டு கிராமங்களில் மட்டுமே- தேனீர்க் கடைகளில் இரட்டை டம்ளர் முறை இருப்பதாகவும் ஏனைய பல பகுதிகளில் இத்தகைய முறை இருப்பதாகக் கூறுவது உண்மையல்ல என்றும் தமிழ்நாடு காவல்துறையின் மனித உரிமை மற்றும் சமூக நீதிப் பிரிவு தலைமை அதிகாரி அறிவித்துள்ளதை பெரியார் திராவிடர் கழகம் மறுக்கிறது. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், தேனி, பல்லடம், ஈரோடு, கோபி, சேலம், கோவை பகுதிகளில் இரட்டை டம்ளர் முறை பின்பற்றப்படும் தேனீர் கடைகளின் முழுமையான பட்டியலை பெரியார் திராவிடர் கழகம் தயாரித்து முகவரிகளுடன் வெளியிட்டது.

அரசுக்கு உரிய கால அவகாசம் தந்து- அதற்குப் பின்னரும் இரட்டைக் குவளை அகற்றப்படாத கடைகளில் கடந்த அக்டோபர் 2ஆம் தேதி உடைப்பு போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தது. போராட்டத்துக்குச் சென்ற கழகத்தினரை காவல்துறை கைது செய்து வழக்குப் பதிவு செய்ததே தவிர, தீண்டாமையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. உறுதியான- தொடர்ச்சியாக கண்காணிப்பும் நடவடிக்கைகளும் எடுப்பதன் மூலமாகத்தான், காலம் காலமாக ஊறிப் போயுள்ள இந்தத் தீண்டாமைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அதைச் செய்யவேண்டிய காவல்துறையின் மனித உரிமைப் பிரிவு, ஏதோ தி.மு.க. ஆட்சிக்கு எதிரான அரசியல் பிரச்சனையாகப் பார்த்துக் கொண்டு மறுப்பு அறிக்கைகளை விடுவது புண்ணுக்குப் புனுகு பூசும் முயற்சியேயாகும்.

தீண்டாமை ஒழிப்பு என்ற சமூகக் கடமையில் அரசுக்கு மட்டுமல்ல - பெரியார் இயக்கங்களுக்கும் பொறுப்பு உண்டு என்று கடமை உணர்வோடுதான் பெரியார் திராவிடர் கழகம் போராட வந்திருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டிய காவல்துறை, மறுப்பு அறிக்கைகளை வெளியிட்டிருப்பது மக்களை ஏமாற்றுவதாகும். இந்த அறிக்கையைப் படிக்கும், கிராமத்தில் வாழும் மக்கள் நகைக்கவே செய்வார்கள். ஆதாரங்களுடன் இரட்டைக் குவளை பின்பற்றப்படும் தேனீர் கடைகளின் பட்டியலை நாம் தரத் தயார். தமிழ்நாட்டில் பொதுக் கோயில்களில் தாழ்த்தப்பட்டோர் அனுமதிக்கப்படாததை எதிர்த்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோயில் நுழைவுப் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இப்போது தேவை, காவல்துறையின் உறுதியான நடவடிக்கையே தவிர மறுப்பு அறிக்கைகள் அல்ல என்று அந்த அறிக்கையில் விடுதலை இராசேந்திரன் தெரிவித்துள்ளார்.

தலையங்கம்

## வரம்பு மீறும் நீதிமன்றங்கள்!

*பார்ப்பனர்கள் ஆதிக்கத்திலுள்ள உச்சநீதிமன்றம் மக்கள் பிரதநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கே தன்னை 'எஜமான்' என்று, நிலைநிறுத்திக் கொண்டு பூணூலை சாட்டையாக மக்கள் மீது சுழற்றி வீசிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தி, தி.மு.க.வின் தோழமை கட்சிகள் அறிவித்த முழு வேலை நிறுத்தத்தை, தடை செய்தது உச்சநீதிமன்றம்.*

*தி.மு.க. அணி – அதை ஏற்றுக் கொண்டு, முழு அடைப்புப் போராட்டத்தைக் கைவிட்டு, 'உண்ணாவிரதப்' போராட்டத்தை அறிவித்தார்கள். அதைக்கூட உச்சநீதிமன்றத்தால் சகிக்க முடியவில்லை. முதல் தேதி அன்று காலையில் அ.தி.மு.க. சார்பில் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி அகர்வால், அரசு அலுவலகங்கள் தொடங்கப்படாத நேரத்தில் அவை செயல்படுகிறதா, இல்லையா என்பது பற்றிக்கூட பரிசீலிக்காமல், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்றும், தமிழக அரசை கலைப்பதற்கு, உச்சநீதிமன்றம் குடியரசுத் தலைவரிடம் பரிந்துரை செய்யும் என்றும் மிரட்டியுள்ளார். மாநில அரசைக் கலைக்க பரிந்துரைக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு எப்படி வந்தது? 'ராமராஜ்யத்தில்' வழங்கப்பட்ட ஒரு குலத்துக்கு ஒரு நீதியைத்தான் – இப்போது உச்சநீதிமன்றமும் வழங்கிக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்றம் இயற்றும் இடஒதுக்கீடு சட்டங்களை எல்லாம் 'ராமராஜ்ய' நீதிமன்றங்கள் முடக்கிப் போட்டுவிடுகின்றன. 'சம்பூகன்கள்' படிப்பதற்கு எப்படி அனுமதிப்பார்கள்?*

*நீதித் துறை என்ன – விமர்சனத்துக்கே அப்பாற்பட்டதா? தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற ஒய்.கே.சபர்வால் பற்றி 'மிட்டே' நாளிதழ் வெளியிட்ட செய்திக்காக – அது நீதிமன்ற அவமதிப்பு என்று, டெல்லி உயர்நீதிமன்றம் தானாகவே முன்வந்து வழக்கை எடுத்து, அந்தப் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் கார்ட்டூன் ஓவியர் உட்பட நான்கு பேருக்கு நான்கு மாத சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது. சபர்வால் தலைமை நீதிபதியாக இருந்தபோது – பல வணிக வளாகங்களை பூட்டி சீல் வைக்க உத்தரவிட்டார். இந்த நடவடிக்கையால் கட்டிடம் கட்டும் சில ஒப்பந்தக்காரர்கள் பயன் பெற்றனர். அவர்களோடு நீதிபதியின் இரண்டு மகன்களான சேத்தன் சபர்வால், நிதின் சபர்வால் இருவருக்கும் தொடர்பு உண்டு. அத்துடன், தலைமை நீதிபதியின் அதிகாரபூர்வமான இல்லத்தில் தங்கிக் கொண்டே அவரது மகன்கள், இந்த வேலையை செய்திருக்கிறார்கள் என்று, அப்பத்திரிகை ஆவணங்களுடன் செய்தி வெளியிட்டது. இவ்வளவுக்கும், சபர்வால் பதவியில்கூட இல்லை. ஓய்வு பெற்றுவிட்டார். ஓய்வு பெற்ற பிறகும்கூட, நீதிபதி மீது குற்றம் சாட்டினால், அதற்கு நீதிமன்ற அவமதிப்பாகிவிடுமா? சுமத்தப்பட்ட குற்றம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அதற்கு நீதிமன்ற அவமதிப்பு சட்டப் பிரிவைப் பயன்படுத்த முடியாது என்று, அண்மையில் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தைக்கூட நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை.*

*இப்படித்தான் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் பார்ப்பன நீதிபதியான சிறீவத்சவா என்பவர் அண்மையில் ஒரு தீர்ப்பில் கூறும்போது பகவத் கீதையை தேசிய நூலாக்க வேண்டும் என்றார். உ.பி. மாநிலத்தில் வாழும் முஸ்லிம்கள் மைனாரிட்டிகள் அல்ல என்று 'அதிரடியாக' தீர்ப்பு வழங்கியவரும் இதே நீதிபதிதான். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த ஆனந்த் என்ற பார்ப்பனர், அரசு நிலத்தை முறைகேடாக ஆக்கிரமித்தது பற்றிய சர்ச்சைகள் எழுந்தன. அந்தப் பார்ப்பனர் ஓய்வு வயதையும் தாண்டி, முறைகேடாக பதவியில் நீடித்ததை அன்றைய சட்ட அமைச்சராக இருந்த ராம்ஜெத்மாலனி அம்பலப்படுத்தினார். அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்த எஸ்.எஸ்.சோத்தி பதவி ஓய்வுக்குப் பிறகு, 'நீதியின் மறுபக்கம்' என்ற நூலை எழுதினார். நீதிபதிகளாக இருப்பவர்கள் நடுநிலை தவறி சொந்த விருப்பு வெறுப்போடு செயல்படுவதை, துணிவோடு அந்த நூலில் விவரித்திருந்தார். இந்த நூல் நீதிமன்றத்தை அவமதிக்கிறது என்று, அப்போதும் வழக்கு தொடரப்பட்டது.*

*தமிழ்நாட்டில் பக்தவத்சலம் முதல்வராக இருந்த காலத்தில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த இராமச்சந்திரன் என்ற பார்ப்பனர் ஓய்வு வயதையும் தாண்டி, முறைகேடாக பதவியில் நீடித்ததை, பெரியார் சுட்டிக்காட்டிக் கண்டித்தார். இவர் பதவியில் நீடிக்கும்போதே அவரது தம்பி, 60-வது பிறந்த நாளைக் கொண்டாடியதால் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. இப்படி ஏராளம் உண்டு.*

*நீதிபதிகளை நீதிபதிகளே நியமிக்கும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அய்.ஏ.எஸ். அய்.பி.எஸ். அதிகாரிகளைத் தேர்வு செய்வதுபோல் நீதிபதிகளுக்கும், இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு நீதிபதிகள் தேர்வுக்கான தேர்வு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அரசியல் சட்டத்தின் 312வது பிரிவு, இதை வலியுறுத்துகிறது. ஆனாலும், நீதிபதிகள், இந்த சட்டப் பிரிவை அமுல்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை.*

*நாடாளுமன்றத்தின் அதிகாரம் பார்ப்பனரல்லாதாரிடம் வந்துவிட்ட நிலையில், பார்ப்பனர்கள் நீதிமன்றங்களைக் கைப்பற்றிக் கொண்டு, நீதிமன்றங்கள் வழியாக, தங்களது மேலாண்மையை நிலைநாட்டி வருகின்றனர்.*

*இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.*

# அப்போது ஒப்புதல் இப்போது எதிர்ப்பு

பாரதிய ஜனதா கட்சியும் - ஜெயலலிதாவும், இப்போது சேது சமுத்திரத் திட்டத்தை முழு வீச்சில் எதிர்த்து வருவது அவர்களது சந்தர்ப்பவாத அரசியலையே பச்சையாக படம் பிடித்துக் காட்டுகிறது.

சேது சமுத்திரத் திட்டம் கொண்டு வருவதற்கு தான் மட்டுமே காரணம் என்றும், கடலுக்கு அடியில் ஆதம் பாலம் என்று சொல்லப்படுகிற மணல் திட்டுகள் வழியாகக் கால்வாய் அமைப்பதே, இத்திட்டம் என்றும், கடந்த சட்டமன்ற தேர்தலில் தமது கட்சியின் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவர் இதே ஜெயலலிதா தான்! அவர்தான் ராமர் பாலத்தை இடிப்பதா என்று இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் தந்ததே வாஜ்பாய் தலைமையில் நடந்த தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியில் தான்! 6 பாரதிய ஜனதா கட்சி அமைச்சர்கள் ஒப்புதலுடன் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது. அவர்கள் யார்?

இத் திட்டத்துக்கு மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் சில சந்தேகங்களை எழுப்பியது. அப்போது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆய்வு நடத்துமாறு, தேசிய பொறியியல் சுற்றுச்சூழல் ஆய்வு மய்யத் (நீரி-NEERI)துக்கு ஆணையிட்டார் - அன்று தரைவழி போக்குவரத்து அமைச்சராக இருந்த அருண் ஜெட்லி. (ஆணை பிறப்பித்த தேதி மார்ச் 9, 2001)

'நீரி' ஆய்வு மய்யம், இத் திட்டம் பற்றி விரிவாக ஆய்வு நடத்தி தனது அறிக்கையை - அன்றைய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் அளித்தது. அவரது பெயர் கோயல், பா.ஜ.க.வைச் சார்ந்தவர்.

அடுத்து இந்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக ஆய்வுக் கூட்டம் ஒன்றை, அன்றைய கப்பல் போக்குவரத்து இணை அமைச்சராக இருந்த திருநாவுக்கரசு கூட்டினார். ஆய்வுக் கூட்டம் நடந்த தேதி அக்.23, 2002.

எந்த முறையில் இத்திட்டத்தை அமுல்படுத்தலாம் என்று விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. இறுதியில், இப்போது மணல் திட்டுகளைத் தகர்த்து கால்வாய் வெட்டும் முறையே, மிகச் சிறந்த முறை (6வது பாதை) என்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவுக்கு வந்தவரே - இப்போது வேறு வழியில் திட்டத்தை யோசியுங்கள் என்று கூறும், திருநாவுக்கரசுதான்.

- பாம்பன் தீவுக்கு கிழக்கே உள்ள ஆதம் பாலத்தின் வழியாக இத்திட்டம் உருவாக்கப்படும் என்று மாநிலங்களவையில் அறிவித்தவர், கப்பல்போக்குவரத்துத் துறையின் மற்றொரு இணை அமைச்சரான சத்ருகன் சின்கா. அறிவித்த தேதி 2003, செப்டம்பர் 29.
- அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மய்யம், வங்கக் கடலில் பாம்பன் பாலம் அருகே மணல் திட்டு இருப்பதை விண்வெளிக்கோள் வழியாக படம் பிடித்தது. உடனே, அதுதான் ராமர் கட்டிய பாலம் என்று இந்துத்துவாவாதிகள் கூறத் தொடங்கினர். இதை உறுதிப்படுத்திட வேண்டும் என்ற துடிப்பில், அன்று சுரங்கம் மற்றும் கனிமவளத்துறை அமைச்சராக இருந்த உமாபாரதி, தனது துறையின் கட்டுப்பாட்டில் இருந்த புவியியல் ஆய்வு மய்யத்துக்கு, இதுபற்றி ஆராய்ந்து அறிக்கை தர உத்தரவிட்டார்.
- டிசம்பர் 2002-லிருந்து மார்ச் 2003 வரை மணல் திட்டுகளை விஞ்ஞான ரீதியாக சோதனைக்கு உட்படுத்தி, ஆய்வு மய்யம் தனது அறிக்கையை அளித்தது. அதில் மணல் திட்டுகள் இயற்கையாக உருவானவை, மனிதர்களால் கட்டப்பட்டது அல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது.

- ஆக, பா.ஜ.க. அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த பிரதமர் வாஜ்பாய், அருண்ஜெட்லி, வி.பி.கோயல், சத்ருகன் சின்கா, திருநாவுக்கரசு, உமாபாரதி ஆகிய அமைச்சர்களின் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, மணல்திட்டு ராமன் கட்டிய பாலம் அல்ல என்பது நிரூபிக்கப்பட்டு, அதன் பிறகு அவர்களின் ஒப்புதலோடு, பிரதமர் வாஜ்பாயால் அறிவிக்கப்பட்ட திட்டம் தான், சேது சமுத்திரத் திட்டம்.

இவர்கள்தான் அப்படியே அந்தர்பல்டி அடித்து ராமன் கட்டிய பாலத்தை இடிக்கலாமா என்றும் இந்துக்களின் மனத்தைப் புண்படுத்தலாமா என்றும் இப்போது ஒப்பாரி வைக்கிறார்கள்.

ராமரை வைத்து மீண்டும் மீண்டும் அரசியல் நடத்த வேண்டும் என்ற அரசியல் பிழைப்பு வாதம் - இப்படி, இவர்களைப் பேச வைக்கிறது!

# சூலூரில் "வீரத்துறவி" ஓட்டம்

கடந்த செப்டம்பர் 30 ஆம் தேதி சூலூருக்கு வந்த இராமகோபாலனுக்கு கழக சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 'ராமன்' பாலத்தை இடிக்கக்கூடாது என்று இந்து முன்னணி நடத்திய போராட்டத்துக்கு தலைமை தாங்க வருவதாக அறிவிக்கப்பட்டவுடன் 'ராமன் பாலமும் மதவாதிகள் இரட்டை வேடமும்' என்ற தலைப்பில் ஆயிரக் கணக்கில் துண்டறிக்கைகளை அடித்து ஊர் முழுதும் கழகத் தோழர்கள் விநியோகித்தனர். சூலூர் பகுதி தி.மு.க. தோழர்கள் ஏராளமானோர் ராம கோபாலனுக்கு எதிராக கருப்புக் கொடிகளுடன் திரண்டனர். மிரண்டு போன 'வீரத் துறவி' சூலூர் பகுதிக்குள் போராட்டத்தை ரத்து செய்துவிட்டு ஊருக்கு வராமலே ஓடிவிட்டார்.

# திண்ணியம் வழக்கு தீர்ப்பு அதிர்ச்சி தருகிறது

# அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தல்

*திண்ணியம் வழக்கில் பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் கிடைக்க வழக்கை மேல்முறையீடு செய்ய தமிழக அரசை வலியுறுத்தியும், இந்து மதவெறி இயக்கங்களை தடை செய்யக் கோரியும் 3.10.2007 அன்று காலை 10 மணிக்கு சாதி ஒழிப்பு முன்னணி சார்பாக மதுரை தல்லாகுளம் தபால்தந்தி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

புரட்சி வேங்கைகள் இயக்க அமைப்புச் செயலாளர் குருவிஜயன் தலைமையேற்கவும், தியாகி இம்மானுவேல் பேரவை பூ. சந்திரபோசு, சேரிப்புலிகள் க. திலீபன், தமிழ்த் தேசிய முன்னணி அ. ஆனந்தன், ராசு, தேவேந்திரர் மறுமலர்ச்சிப் பேரவை பகத்சிங் பழனிச்சாமி, மக்கள் ஒருமைப்பாட்டு நூலகர் சேலம் மணிமாறன், ஆதித் தமிழர் விடுதலை இயக்கம் அ. வினோத், மக்கள் சனநாயக விடுதலை முன்னணி த. மீ. பாண்டியன், மனித உரிமை ஆர்வலர் வழக்குரைஞர் இன்குலாப் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

நிறைவுரையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டதாவது:

இந்திய துணைக்கண்டம் விடுதலை பெற்றதாகக் கூறி 60 ஆண்டுகள் கடந்த பின்னும், இந்த நாட்டின் உழைப்பாளிகள் சாதி இழிவுகளால் அவமானப்படுவது மறைந்தபாடில்லை. ஏன்? குறைந்ததுகூட இல்லை.

திண்ணியத்தில் அரசின் செலவில் கட்டித்தரப்படும் தொகுப்பு வீட்டைப் பெற ஊராட்சி மன்றத் தலைவர் ரூ.2000 லஞ்ச முன் பணம் பெற்றும், தொகுப்பு வீடு கட்டித் தராத நிலையில், பணத்தையும் திருப்பித் தராத நிலையில் தொடர்ந்து முயற்சிகளும், தோற்றுப்போன நிலையில் அதுவரை அடிமைத் தொழிலுக்கு பயன்படுத்தி வந்த தமுக்கை, போப் பறையாக்கி அநியாயமாய் காசு பறித்த அவலத்தை அம்பலப்படுத்தியதோடு, சாதியின் காரணமாய் தன் மீது சுமத்தப்பட்டிருந்த வெட்டியான் வேலையையும் விடப் போவதாக அறிவிக்கிறார் கருப்பையா. லஞ்சம் வாங்கும்போதும், உறுதியளித்தவாறு தன்னால் உதவ முடியாத போதும் அதற்காக வெட்கப்படாத முன்னாள் ஊராட்சித் தலைவரது கணவர் ஆசிரியர் சுப்பிரமணியத்துக்கு ஆவேசம், கோபமும் கட்டுக் கடங்காமல் வருகிறது. வேறென்ன காரணம், ஆதிக்கச் சாதி என்கிற ஆணவம் தான். அடிமை சாதிக்காரன் தன்னை அவமானப்படுத்திவிட்டானே என்று புத்தி மட்டாகிப் போய் வந்த ஆத்திரம் தான். இழுத்து வந்து உதைத்தார்கள், அடித்தார்கள். மனைவியும் தாயும் காலில் விழுந்து கெஞ்சியும் ஆதிக்கத் திமிர் பிடித்த சாதி வெறியர்களுக்கு ஆத்திரம் தீரவில்லை. காய்ச்சிய இரும்புக் கம்பியால், கருப்பையாவுக்கும் அவரோடு தமுக்கடிக்கும்போது உடன் போன இருவருக்கும் சூடு போட்டும் கோபம் குறையவில்லை. கொந்தளிப்பு அடங்கவில்லை. எப்போது அடங்கியது தெரியுமா? தமுக்கடித்த அந்த கருப்பையா வாயில் மனித மலத்தைத் திணித்தப் பின்னால்தான் ஆத்திரம் குறைந்தது.

தீண்டாமையை எந்த வடிவத்தில் பின்பற்றுவதும் தண்டனைக்குரிய குற்றம் என்று நாமே நமக்கு எழுதி வழங்கிக் கொண்ட அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவு தெளிவாக அறிவித்து அரை நூற்றாண்டுக்கு மேலான நிலையிலும், தீண்டாமை ஒழிப்புச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் என்று பல சட்டங்கள் இயற்றப்பட்ட பின்னும், மேலும் கூர்மைப்படுத்தி வரையப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் உண்ணத்தக்கதல்லாத அல்லது அருவருப்பான பொருள் எதனையும் குடிக்குமாறோ, உண்ணுமாறோ வல்லந்தப்படுத்துவது ஆறுமாதம் முதல் அய்ந்தாண்டுகள் வரை தண்டிக்கத்தக்க குற்றமாக வகைப்படுத்தும் 3ஆவது பிரிவைக் கொண்ட சட்டம் 1989லேயே இயற்றப்பட்டுவிட்ட நிலையிலும் இக்கொடுமையை இழைக்கும் துணிச்சல் ஒரு படித்த, ஆசிரியராகப் பணியாற்றும் ஒருவருக்கு எப்படி வந்தது? என்று மனித உரிமையிலும், சமூக சமத்துவத்திலும் அக்கறையுள்ளவர்களெல்லாம் மலைப்புடன் எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான் திருச்சி மாவட்ட உதவி அமர்வு நீதிமன்றம் மூன்று பேரை இழுத்து வந்து அடித்ததற்கும், மலத்தை வாயில் திணித்ததற்கும் என எல்லா குற்றங்களுக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவருக்கு மட்டும் மூன்று மாத தண்டனையும், இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்திருக்கிறது. இந்த அதிர்ச்சியான தீர்ப்புதான் இந்த ஆர்ப்பாட்டத்துக்கான காரணமாக அமைந்து விட்டது.

நீதிபதி, தீர்ப்பில் கூறியிருப்பதை எல்லாம் படிக்கிறபோது நமக்கு ஆத்திரம்தான் வருகிறது. புகாரை சில நாட்கள் கழித்து கொடுத்ததும், புகார் அளிக்கிறபோது வழக்குரைஞர்கள் உடன் சென்றதும், புகார் மனுவின் அசல் நகல் வழக்குக் கோப்பில் இல்லாததும், சாட்சிகள் அனைவரும் குற்றவாளிகளின் சாதியினராகவே இருப்பதுவும், மருத்துவரிடம் போகும்போது காயம் ஆறி இருந்ததும் எல்லாம் குறைந்த தண்டனை அளிப்பதற்கான காரணங்களாக அடுக்கிக் கொண்டே போகிறார் நீதிபதி. நிகழ்வுக்காக சொல்லப்படும் காரணம் கூட பலவீனமாக, சொல்லப்போனால் நம்ப முடியாததாக இருக்கிறது என்கிறார் நீதிபதி.

குற்றம் சாட்டப்பட்டவரும், நீதிபதியும் ஒரே சாதியினராக இருப்பதுதான் காரணமாகத் தெரிகிறது. அது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்பட்ட குற்றங்கள் மீது தீர்ப்பாகிற நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் இதுபோலத் தான் இருந்திருக்கின்றன.

கீழ வெண்மணி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கோபாலகிருஷ்ண நாயுடுவைப் போன்ற தகுதியிலுள்ள பெரிய மனிதர்கள் குடிசைகளுக்குத் தீ வைப்பது போன்ற தரங்குறைந்த செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்றே அவ்வழக்கின் உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததாம். குஜராத்தில் குழந்தை மணத்துக்கு எதிராகப் போராடிய சமூகப் பணியாளர் 'பன்வாரிதேவி' தாக்கப்பட்டு, வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட வழக்கில் அந்த நாட்டு உயர்நீதி மன்றம், தாழ்த்தப்பட்ட பெண்ணை உயர்சாதிக் காரர்கள் தொட்டு வன்புணர்ச்சி செய்திருக்க மாட்டார்கள் என்ற தங்களது சாதிய உள்ளுணர்வு களைத் தீர்ப்பில் வெளிப்படுத்தியிருந்தார்கள். ஏன், அரசுகள் மட்டும் எப்படி நடந்து கொள்கின்றன? அது பார்ப்பன ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலும் சரி, பெரியாரின் விரல் பிடித்து நடந்த கலைஞரின் ஆட்சியில் ஆனாலும் சரி! அரசுகள் தாழ்த்தப்பட் டோரின் உரிமைக் குரலுக்கு எந்த வகையில் செவி சாய்க்கிறார்கள், என்ன நடவடிக்கைகளை மேற் கொள்கிறார்கள் என்பதைக் கவனிக்கிற போதும் வேதனைதான் ஏற்படுகிறது.

ஒவ்வொரு சாதிச் சங்கங்களும், கட்சிகளும், தங்கள் சாதித் தலைவர் பெயரை மாவட்டங்களுக்கும், போக்கு வரத்துக் கழகங்களுக்கும் சூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோதும், அரசு சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த போதும் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டன. முதலமைச்சர்களே சிலைகளைத் திறந்தார்கள். ஆனால், 'சுந்தரலிங்கம்' என்ற தாழ்த்தப்பட்ட சமுதாய வீரரின் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டபோது, எதிர்க் குரல் எழுப்பிய ஆதிக்கச் சாதியினருக்கு அஞ்சி எல்லா பெயர்களையும் அகற்றிய அவலம் நடந்தேறியது.

தங்கள் ஊர் கோவிலில் நடக்கும் தேரோட்டத்தில் மரபுரிமையாக இருந்த வடம்பிடிக்கும் உரிமை, சட்டம் கூறும் சமத்துவத்தை உயர்த்திப் பிடிக்கும் உரிமை, உயர்நீதிமன்ற தீர்ப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், சட்டத்தை இயற்றும், நடைமுறைப்படுத்தும் பொறுப் பிலுள்ள அரசும், அரசு அதிகாரிகளும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு உதவுவதற்குப் பதிலாக 'கண்டதேவி' தேரோட்டத்தைத் தானே நிறுத்தினார்கள்?

ஏன்? அண்மைக் காலத்தில் எங்கள் மாவட்டத்தில் நடந்தது என்ன? சேலம் மாநகரில் உள்ள கந்தம்பட்டி திரவுபதி அம்மன் கோவிலில், கருவறைக்குள் அல்ல - கோவிலில் நுழைய தாழ்த்தப்பட்ட மக்களை, மக்கள் அனைவரும் கூட அல்ல - அந்தக் கோவிலின் அறங்காவலர் குழு உறுப்பினராக உள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத் தோழரை அனுமதிக்க மறுக்கப்பட்டபோது என்ன செய்தார்கள்?

வருவாய்த் துறை அதிகாரிகளும், மாநகர காவல்துறை ஆணையரும் சமாதானம் பேசியும் கோவிலில் நுழைய அனுமதிக்க முடியாது என்று ஆதிக்கச் சாதியினர் மறுத்த போது வழக்குப் பதிவு செய்தார்களா? கைது செய்தார்களா? இல்லையே! கோவில் நுழைவு உரிமைக்கான குரல் ஓங்கி

4 ஆம் பக்கம்

### நர்மதாவும் சேது சமுத்திரமும்

*450 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த பழங்கால நினைவுச் சின்னமான பாபர் மசூதியை இடித்தக் கூட்டம் தான் இப்போது இல்லாத இராமன் பேரால், தமிழ்நாட்டின் வணிக வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும், துறைமுக வளர்ச்சிக்கும் ஏதுவான புதிய கடல் வழிப்பாதை அமைவதை தடுக்கும் விதத்தில், இடிக்ககூதே என்று போராடுகிறார்கள். போராடுகிற, தடை கேட்டு வழக்குப் போட்டிருக்கிற ஆட்களில் பெரும்பாலோர் தமிழர்களுக்கு எதிரானவர்கள் என்பதோடு - கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் போய்விடுமே என இலங்கையின் நலனுக்காக இலங்கைக்கு ஆதரவாக எப்போதும் பேசுபவர்களாகவே இருக்கிறார்கள்.*

*அவர்கள் தான் இப்போது அறிவியல் அடிப்படையில் நிறுவ முடியாத ஒன்றை நம்பிக்கை அடிப்படையில் என்று பேசுகிறார்கள்.*

*வழக்கம் போல உச்சநீதிமன்றமும், பல்லாயிரம் பழங்குடியினரின் வாழ்வையே குலைக்கும் வண்ணம் கட்டப்படுகிற நர்மதா அணைத் திட்டத்தை வழங்க வேண்டிய நட்ட ஈடுகளையும், உறுதியளித்த மாற்றுக் குடியிருப்புகளையும் ஏற்படுத்தாமல் தொடரக்கூடாது என வழக்காடிய போது பெரும் செலவில், பாதிக்குமேல் நிறைவேற்றிவிட்ட ஒரு வளர்ச்சித் திட்டத்தை நிறுத்துமாறு ஆணையிட மறுத்த உச்சநீதிமன்றம்தான், வெறும் நம்பிக்கை என்பதைத் தவிர எதையும் முன் வைக்க முடியாதவர்களின் கோரிக்கையை ஏற்று பெரும் பொருட் செலவில் பாதியளவு நடந்தேறி விட்ட வளர்ச்சித் திட்டத்தை நிறுத்தச் சொல்லி தடையாணை பிறப்பிக் கிறார்கள்.* **- தோழர் கொளத்தூர் மணி உரையிலிருந்து**

# வீதியில் இறங்கி போராடுவோம்

# சட்டத்தின் அமைதியைவிட உரிமையே முக்கியம்

கொளத்தூர் மணி உரையின் தொடர்ச்சி

ஒலிக்கத் துவங்கியவுடன் அந்தக் கோவிலை இழுத்துப் பூட்டி சீல் தானே வைத்தார்கள்?

சிதம்பரத்தில் நந்தன் தரிசிப்பதற்கு பார்வைத் தடையாய் இருந்த நந்தியைத் தான் "சற்றே விலகியிரும் பிள்ளாய்!" என்று சிவன் சொன்னானே தவிர, நந்தா! உள்ளே வா! என்று அழைக்கவில்லையே என்று பகுத்தறிவு பேசிய கலைஞரின் ஆட்சியில் தானே இது நடக்கிறது?

ஏன்? இதை விடுங்கள், வெறும் பூணூலை அறுத்ததற்குக்கூட கருப்புச் சட்டமான தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி அய்ந்து மாத காலம் எங்கள் தோழர்களை சிறை வைத்த தமிழக அரசு, தூத்துக்குடி வேலாயுதம் பாளையத்தில் சங்கர லிங்கபுரத்தில் தாழ்த்தப்பட்டோர் வீடுகளும், உடைமைகளும் சிதைக்கப்பட்டு எரிக்கப்பட்டபோது என்ன வழக்குகளைப் பதிவு செய்தார்கள்? குற்றவாளிகளை எவ்வளவு காலம் சிறை வைத்திருந்தார்கள்? சொல்லட்டுமே!

எனவேதான் தோழர்களே, பொதுமக்களே! நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்பது இவர்கள் எல்லாம் அடிக்கடி பயன்படுத்தும் ஓர் அடுக்கு மொழி வசனம்!

மேலவளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவரை, துணைத் தலைவரை, உடன் நான்கு பேர்களின் தலையை வெட்டிய கோரக் கொலை குறித்த வழக்கை நடத்திய சிறப்பு நீதிமன்றம் 7 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கி 23 பேரை விடுவித்தது. குற்றவாளிகள் தண்டனைக் குறைப்புக்கு மேல் முறையீடு செய்ததை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சதாசிவம், பால் வசந்தகுமார் ஆகியோர் தண்டனையை உறுதி செய்ததோடு மட்டும் நிற்காமல், மாவட்ட சிறப்பு நீதிமன்றம் இவ்வழக்குக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பொருந்தாது எனக் கூறி விடுதலை செய்த 23 பேரைக் குறித்து கருத்தறிவிக்கும்போது, இவ்வழக்குக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பொருந்தும் எனக் கூறி அரசு மேல் முறையீடு செய்யாத காரணத்தால் வழக்கிலிருந்து விடுதலை அளிக்கப்பட்ட குற்றவாளிகள் 23 பேரும் தண்டனையிலிருந்து தப்பி விட்ட அவலத்தை வேதனையுடன் சுட்டிக் காட்டியிருந்தார்களே! நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் இந்த திண்ணியம் வழக்கிலாவது உடனே மேல்முறையீடு செய்ய வேண்டும். அம் முறையீட்டு வழக்கை நடத்த அக்கறையும் பொறுப்புணர்வும் மிக்க நேர்மையான வழக்கறிஞர் ஒருவரை நியமிக்க தேவண்டும் என்று வற்புறுத்துவது இவ்வார்ப்பாட்டத்தின் முக்கிய நோக்கம்.

மனித உரிமை இயக்கங்களும், தனி மனிதர்களும் மரண தண்டனையை சட்டப் புத்தகத்தில் இருந்தே நீக்க வேண்டு என்று பல்வேறு நியாயமான காரணங்களை முன் வைத்து வலியுறுத்துகிற போதெல்லாம், நீதிபதிகள் சிலரும், போலி சமுதாய அக்கறையாளர்களும் மரண தண்டனை போன்ற கடுமையான தண்டனை தான் குற்றங்களைக் குறைக்கும் என்று ஓயாது சொல்லி மரண தண்டனையை நியாயப்படுத்துகிறீர்களே!

திண்ணியம் வழக்கில் கடுமையான தண்டனை கூட அல்ல - நியாயமான தண்டனைகூட வழங்கப்பட வில்லையே! செப்டம்பர் 10 ஆம் நாளில் வழங்கப்பட்ட குறைந்த தண்டனை தீர்ப்பைத் தொடர்ந்து செப்டம்பர் 26 ஆம் நாளில் சமயநல்லூரில் தாழ்த்தப்பட்ட வழக்கறிஞர் வாயில், திண்ணியம் வழக்கைப் போன்றே, ஊராட்சி மன்றத் தலைவரும் அவரோடு சேர்ந்த கூட்டமும், மலத்தைத் திணித்த அவலம் நடந்துள்ளதே! இதற்கு உங்களிடம் உள்ள பதில் என்ன? சொல்லுங்கள்!

ஏன்? நேற்றுகூட எங்கள் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கடந்த பல மாதங்களாக சட்ட விரோதமாக தேனீர் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு என தனிக் குவளை வைக்கப்பட்டுள்ள கடைகளை பட்டியல் எடுத்து, உரிய அரசு அதிகாரிகளுக்கு அனுப்பியதோடு மட்டுமல்ல, எங்கள் கழக ஏடான, 'புரட்சிப் பெரியார் முழக்கத்'திலும் வெளியிட்டோம். அப்படிப்பட்ட தனிக் குவளை உள்ள கடைகளில் நுழைந்து அவற்றை உடைப்போம் என்று பகிரங்கமாக அறிவித்தோம். அது குறித்து துண்டறிக்கைகளை விநியோகித்துக் கொண்டு, தனிக் குவளை முறை அதிகம் நிலவும் மேற்கு மாவட்டங்களில் பரப்புரைப் பயணத்தை மூன்று வண்டிகளில் நானும், கழகத்தின் பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரனும் மேற்கொண்டோம். அப்பரப்புரைப் பயணங்களில் பேசுகிற போதெல்லாம் நான் தவறாமல் ஒரு செய்தியைத் திரும்பத் திரும்பச் சொன்னேன்.

அக்டோபர் 2 இல் சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருக்கிற தனிக் குவளைகளை நாங்கள் உடைக்கத் தானே போகிறோம்! அப்போதுதான் அம்பலமாகப் போகிறது இந்த அரசும், காவல்துறையும்! சட்ட விரோதமாக தனிக்குவளை வைத்திருக்கிற தேனீர்க் கடைக்காரர்களைக் கைது செய்யப் போகிறீர்களா? அல்லது சட்டவிரோதமான அவற்றை அகற்றி சட்டம் விரும்புகிற சமத்துவத்தை நிலைநாட்ட தனிக்குவளைகளை உடைக்கப் போகிற எங்கள் தோழர்களைக் கைது செய்யப் போகிறார்களா? என்பது அக்டோபர் 2 இல் அம்பலமாகும் என்று பேசி வந்தேன். அம்பலமாகிப் போனது!

பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டத்தில், மசக்கவுண்டனூர் என்ற ஊரைச் சுற்றி தனிக் குவளை வைத்துள்ள 11 கடைகளில் ஒரு கடையான குமார் என்பவரின் கடையில் தனிக்குவளை உடைப்புப் போராட்டம் நடக்கும் என்று காவல்துறைக்கு அறிவித்துவிட்டுத்தான் சென்றார்கள் எங்கள் தோழர்கள். ஈரோடு மாவட்டத் தலைவர் நாத்திக சோதி தலைமையில் எட்டு பேர்! மசக்கவுண்டனூர் குமார் கடை நோக்கி! கடை இருந்தது! தனிக் குவளையும் இருந்தது! ஆனால் கடைக்கு முன்னால்கூட அல்ல, ஊர் எல்லையிலே காவல் படை, சுமார் 50 பேர் கொண்ட காவலர் படை, ஆய்வாளர் இராசேந்திரன் தலைமையில் இரண்டு காவல்துறை வாகனங்களோடு நின்றிருந்து தோழர்களை ஊருக்குள்கூட போகவிடாமல் கைது செய்து வெள்ளித் திருப்பூர் காவல்நிலையம் கொண்டு வந்து வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். அப்போதும் ஈரோடு மாவட்டத் தலைவர் நாத்திக சோதி தனிக் குவளை முறை இருக்கும் 11 கடைகளின் பட்டியலோடு மேலும் ஒரு புகாரை எழுதிக் கொடுத்துள்ளார். புகார் மனுவைப் பெற்றுக் கொண்டு ரசீதும் வழங்கப்பட்டதே தவிர வழக்கென்னவோ எங்கள் தோழர்கள் மீது மட்டும் தான்!

அதுபோலவே பல்லடம் அருகே இராசாக்கவுண்டன் புதூரில் இருந்த தனிக்குவளையை, தனி இருக்கையை எங்கள் தோழர்கள் உடைத்தார்கள். எங்கள் தோழர்கள் 47 பேர் கைது செய்யப்பட்டு, காவல்நிலையம் அழைத்துச் செல்லப்பட்டார்களே தவிர தனிக் குவளை வைத்திருந்த கடைக்காரர் பாதுகாப்புடன் தனிக்குவளையுடன் தொடர்ந்து தேனீர்க் கடை நடத்திக் கொண்டுதான் உள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதிகளிலும் அப்படித்தான். நிருபர்கள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் வாசுகி அவர்களிடம் கேட்டதற்கு பொறுமையாகத்தான் இதற்கு தீர்வு காண வேண்டும். அவசரப்பட்டால் நிலைமை சீர்கெட்டுவிடும், அமைதிக் குலைவு ஏற்பட்டுவிடும் என்கிறார். விடுதலை பெற்று 60 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னாலும்கூட பொறுமையாக, படிப்படியாக செய்யப் போகிறார்களாம். சட்டம் அமைதிதான் முக்கியமாம்! உரிமை முக்கியமில்லையாம்! சமத்துவம் முக்கியம் இல்லையாம்! சுடுகாட்டில்தான் அமைதி இருக்கிறது!

ஆம். தோழர்களே! நாம் அவ்வப்போது சின்ன சின்ன எதிர்ப்புக் குரல்களை எழுப்புவது உரிய கவனத்தை ஈர்க்காது. 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு எதிராக இவ்வளவு காலமும் கேட்பாரற்று அனுபவித்துக் கொண்டிருந்த உயர்சாதிக் கூட்டம், பயிற்சி மருத்துவர்கள், மற்றவர்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய பங்கைக் கூட கொடுக்க மறுத்து செய்த ஆர்ப்பாட்டங்களை, அட்டகாசங்களை, போராட்டங்களை நமது தொலைக்காட்சிகள் பொறுப்போடு காட்டினவே!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உரிய பங்கையும் பெற முடியாமல் ஏமாந்து நிற்கும் நாம் அதைவிட கடுமையாக, அதைவிட வீதிகளில் இறங்கிப் போராட வேண்டாமா?

புரட்சியாளர் அம்பேத்கர் தான் சொல்வார் - நாக்கில் தீக்கங்கை வைத்திருப்பதை போன்ற உணர்வு ஆதிக்கவாதிகளுக்கு ஏற்படாதவரை நமக்கு இந்த நிலைதான் என்பார்.

தொடர்ந்து போராடுவோம்! மேல்முறையீடு செய்ய அரசை வற்புறுத்துவோம். தீண்டாமைக் கொடுமைகள், தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்முறைகள், சமயநல்லூர் போன்ற தொடரும் அவலங்கள் தீர நாம் தொடர்ந்து போராடுவோம்! தீவிரமாக போராடுவோம்! ஆவேசமாக போராடுவோம்! அனைவரின் ஆதரவோடு போராடுவோம்! என்று நிறைவுரையாற்றினார் கழகத் தலைவர். ●

## எப்படி வந்தது இந்த துணிவு?

*பகுத்தறிவு வினா எழுப்பிய முதல்வர் கலைஞரின் தலையை, நாக்கை வடக்கே ஒரு வேதாந்தி, இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர், வெட்ட வேண்டும் என்கிறார். பரிசுகளை அறிவிக்கிறார். பெங்களூரில் ஒருவர் தென்னிந்திய விசுவ இந்து பரிஷத்தின் தலைவர் விஜய்குமார் ரெட்டி என்பவர் கலைஞர் தலையை வெட்டினால், 1 கோடி பரிசு என்ற தொலைக்காட்சி வழியாக அறிவிக்கிறார். தமிழ்நாட்டு பேருந்து எரிக்கப்படுகிறது. இருவர் சாகிறார்கள். கலைஞரின் மகள் வீடு தாக்கப்படுகிறது.*

*ஏன் இவையெல்லாம் நடக்கின்றன? தங்கள் சுயலாபத்துக்காக இவர்களை தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தி, 'ஜென்டில்மென்' என்றெல்லாம் சான்றிதழ் கொடுத்து வளர்த்துவிட்டதன் பலன் தானே இவை?*

*அட, அப்போதுதான் கூட்டு இருந்தது, மந்திரி வேலை போய்விடும்! ஆரியர்கள் தான் இந்த நாட்டு பூர்வக்குடிகள் என்று வரலாறு திருத்தப்பட்ட போதும் மவுனமாக அமைதி காத்து வாய் மூடிக் கிடந்தார்கள், சரி! இப்போதுகூட கிராமக் கோவில் பூசாரி நல வாரியத்துக்கு அரசு முறை அல்லாத உறுப்பினர்களாக வி.எச்.பி.யின் வேதாந்தத்தையும், ஆர்.எஸ்.எஸ்.சின் ஆர்.பி.வி.எஸ். மணியனையும் நியமிக்க வேண்டிய அவசியம் என்ன?*

*1996 ஆட்சியிலும் இவர்கள்தான் உறுப்பினர்கள். அப்போதாவது பி.ஜே.பி. கூட்டு! 2006 ஆம் ஆண்டிலும் ஏன் அதே ஆட்களை நியமிக்க வேண்டும்?*

*பெரிய ராஜதந்திரம் என்று செய்யும் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தானே தலையைக் கேட்கும் துணிச்சலை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது?*

*இனிமேலாவது கொஞ்சம் கொள்கை உணர்வோடு இருங்கள். கலைஞர் பகுத்தறிவு பாசறையை பகுத்தறிவு பிரச்சாரம், புராணப் புரட்டுகளை விளக்கும் பிரச்சாரம் செய்ய முடுக்கி விடுங்கள். அது உங்கள் தலையை மட்டுமல்ல, எதிர்கால உங்கள் வாரிசுகளின் தலைகளையும் காப்பாற்றும்!*

***– தோழர் கொளத்தூர் மணி உரையிலிருந்து***

# கழகப் போராட்டத்தின் நியாயம்: ஏடுகளில் எதிரொலிக்கிறது!

*கழகத் தோழர் பன்னீர்செல்வம் - தனது செல் காமிரா வழியாக எடுத்த புகைப்படங்களை வெளியிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு, அதன் அடிப்படையில் அதே நாளில் (அக்.4, 2007) தலையங்கம் ஒன்றையும் தீட்டியுள்ளது. 'தீண்டாமை தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது. மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவதை, நாம் செயலில் காட்டுவோம்' என்ற தலைப்பில் அந்த ஆங்கில நாளேடு எழுதியுள்ள தலையங்கம் தமிழில் தரப்படுகிறது:*

"நேற்று அய்.நா.வின் பொதுச்சபையில் பேசிய சோனியாகாந்தி, காந்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றுமாறு, உலகுக்கு அழைப்பு விடுத்துள்ளார். காந்தியின் கொள்கையை அமுலாக்குவதில், இந்தியாவே பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. இது மிகப் பெரும் துயரம். காந்தி கூறிய தீண்டாமை ஒழிப்பே இதற்கு உதாரணமாகும். இதே நாளேட்டில், இன்றைக்கும், நேற்றும் நாம் சுட்டிக் காட்டியுள்ள செய்திகளைப் பார்த்தாலே விளங்கும்.



வீரன் அஜீத்குமார்

தேசத் தந்தை மறைந்து 60 ஆண்டுகள் ஓடி விட்ட பிறகும்கூட, அதிர்ச்சியடையக் கூடிய அளவுக்கு தீண்டாமை நாடு முழுதும் பரவி நிற்கிறது. ஏற்றத் தாழ்வுகளை நிலைநிறுத்தும் 'இரட்டைக் குவளை' அமைப்புகள், இன்னும் மறைந்து விடவில்லை. உள்ளூர் தேனீர்க் கடைகளில் தலித் மக்களுக்கு தனிக்குவளையில் தேனீர் தரப்படுகிறது. அல்லது குடித்துவிட்டு தூக்கி வீசப்படும் குவளையில் தரப்படுகிறது. வழக்கமாக எப்போதும் பயன்படுத்தக் கூடிய குவளைகள், உயர்சாதி இந்துக்களுக்கு மட்டுமே ஒதுக்கப்படுகிறது. இந்த அவலத்தை எதிர்த்து வெள்ளிமலைப்பட்டினத்தில் 11 வயது தலித் சிறுவன் அஜீத் குமார் இப்போது குரல் கொடுத்துள்ளான். நாம் செய்தி வெளியிட்டுள்ளபடி, காவல் துறை அஜீத்குமார் தந்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்துள்ளது. தமிழ்நாடு முழுதும் தலித் மக்கள் மீது திணிக்கப்படும் அவமதிப்புகளின் ஒரு சிறு துளிதான் இந்த நிகழ்வு. 'குவளை' அமைப்பு என்பதுபோல் 'செருப்பு' அமைப்பு என்ற ஒன்றும் உள்ளது. இந்த அமைப்பின் கீழ், உயர்சாதி இந்துக்களுக்கான குடியிருப்பு பகுதிக்கு வெகுதூரத்திலேயே, தலித் மக்கள் தங்களின் செருப்புகளை கழற்றிவிட வேண்டும். பல கிராமங்களில் உள்ள கோயில்களில் இப்போதும், தலித்துகள் நுழைய அனுமதி இல்லை. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? தமிழ்நாட்டுக்கு இன்னும் ஏராளமான அஜீத்குமார்கள் தேவை என்பதைத்தான்!

'மனித உரிமை உலகநீதி மற்றும் மனித உரிமை கண்காணிப்பு' என்ற சர்வதேச நிறுவனத்தின் அறிக்கை, இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. இந்தியாவில் 165 மில்லியன் தலித் மக்கள், வாழ்நாள் முழுதும் இழிவுகளைச் சுமந்தே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறது. அவர்கள் ஏதோ, ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்துவிட்டார்கள் என்பதே இதற்கு அடிப்படை. இந்தியாவில் சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக எத்தனையோ சட்டங்களும், கொள்கைகளும் இருந்தும்கூட, தலித் மக்களின் மனித உரிமையைக் காப்பதில், இந்தியா கடுமையான தோல்வியையே சந்தித்து வருகிறது என்று, அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்படி மதிப்புமிக்க சர்வதேச மனித உரிமை அமைப்பு ஒன்று, ஓங்கி முகத்தில் அறைந்த பிறகும்கூட, இந்தியாவின் அரசியல் அமைப்பு, அசைந்து கொடுக்காமலே இருக்கிறது. அய்.நா.வின் பாதுகாப்புக் கவுன்சிலில் இடம்பெறத் துடித்துக் கொண்டு, உலகில், வல்லரசாக உயர்ந்து கொண்டிருக்கிறோம் என்று பெருமை பேசிக் கொண்டு, உள்நாட்டில் தீண்டாமையை செழிக்க வைத்துக் கொண்டிருப்பது வெட்கக் கேடு ஆகும். சொந்த நாடு இந்நிலையில் உள்ளபோது, காந்தி வழியைப் பின்பற்றுங்கள் என்று உலகத்துக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறோம். உண்மையிலே நாம் காந்திக்கு மரியாதை செலுத்துவது என்றால், தீண்டாமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான். வெளிநாடுகளில் நமது தூதரகங்களில் பல நூறு காந்தி சிலைகளைத் திறப்பதைவிட, காந்திக்கு அஞ்சல்தலைகளை வெளியிடுவதைவிட, உள்ளூரில் ஒரு கிராமத்தில் தீண்டாமையை முடிவுக்கு கொண்டு வருவது எவ்வளவோ உயர்ந்த செயலாகும். தீண்டாமை உயிர் வாழ்வதைவிட, இந்து மதம் செத்துவிடுவதே நல்லது என்று காந்தியே கூறவில்லையா?"

**- 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'**

## எப்போ நமக்கு இரண்டாவது சுதந்திரம்?

சத்தியமங்கலம் அருகேயுள்ள தாண்டம்பாளையம் கிராமத்தின் டீக்கடை அது. பாய்லர் அருகே கண்ணாடி தம்ளர்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. சில தம்ளர்கள் மட்டும் தனியாக ஒரு கம்பி வலைக்குள் கிடத்தப்பட்டுள்ளன. டீக்கடையின் மறு ஓரத்தில் இருக்கும் ஒரு பலகைத் தடுப்பு வழியாக உள்ளே வருகிறார் ஒருவர். வலைக்குள் இருக்கும் தம்ளர் ஒன்றை எடுத்து தண்ணீரில் கழுவி டீக்கடைக்காரரிடம் நீட்டுகிறார். அந்த தம்ளரில் நுனி கூட பாத்திரத்தில் பட்டுவிடாமல், சர்வ ஜாக்கிரதையாக டீயை அந்த தம்ளருக்குள் ஊற்றுகிறார் டீக்கடைக் காரர். குடித்து முடித்தப் பிறகு, தம்ளரைக் கழுவி தனியாக வலைக்குள் போட்டுவிட்டு சில்லறையை கைபடாமல் திண்டு மீது வைக்கிறார் அந்த தலித்!

தலித் குடித்த டீ தம்ளரை தனியாக வைத்திருப்பவர்கள், அவர் கொடுத்த சில்லறையை மட்டும் ஒரே கல்லாவில் போடுகிறார்கள்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற காந்தியின் கனவு இன்னமும் கிராமங்களில் டீ தம்ளர்களில் ஊசலாடிக் கொண்டு இருக்கிறது. ஈரோடு, திருச்சி, திண்டுக்கல், தென்னாற்காடு மாவட்ட கிராமங்களில் எந்தவித கூச்சநாச்சமும் இல்லாமல் பரவிக் கிடக்கிறது தீண்டாமைக் கொடுமை! திண்டுக்கல் வட்டாரத்தில் டீக்கடைகளில் மட்டுமல்ல, சலூன்களிலும் தீண்டாமைத் தாண்டவம் தான்!

"முன்னாடி கண்ணாடி, அலுமினிய தம்ளர்னு ரெண்டு தம்ளர் வெச்சிருப்பாக. மேல்சாதிக் காரர்களுக்குக் கண்ணாடி தம்ளர், தலித்துகளுக்கு அலுமினிய தம்ளர். கொஞ்ச நாளைக்கு முன்னால் பெரியார் திராவிடர் கழகம் வந்து போராடினாங்க. எல்லோருக்கும் பொதுவா குடிச்சத் தூக்கிப் போடுகிற பிளாஸ்டிக் கப் வெச்சாங்க. ஆனா, அவுகள்லாம் (உயர்சாதியினர்) பிளாஸ்டிக் கப்புல குடிக்க மாட்டோம்னு சொல்லவும், பழையபடி அவுங்களுக்கு கண்ணாடி தம்ளரே வெச்சுப்பிட்டாங்க. எங்களுக்கு அதே பிளாஸ்டிக் கப்புதான். முன்னாடி அலுமினியம், இப்போ பிளாஸ்டிக் கப் அம்புட்டுதான் வித்தியாசம்!" தன்னை எவரும் கவனித்து விடுவார்களோ என்ற பீதியுடனே பேசுகிறார் சிக்கமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த ஒரு தலித் கூலி விவசாயி. பழனி வட்டாரத்தில் இது சம்பந்தமாக டீக்கடைகளில் பேசத் தொடங்கினாலே கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகத் துரத்தி அடிக்கிறார்கள்.

கோவை மாவட்டம் சித்திரைச் சாவடி கிராமத்தில், அனைவருக்கும் ஒரே மாதிரியாக பிளாஸ்டிக் தம்ளர் தான். 'அட' என்று சந்தோஷப்படுவதற்குள், கன்னத்தில் அறைகிறது அந்த காட்சி! உயர் வகுப்பினர் மட்டும் நாற்காலி, பெஞ்சுகளில் அமர்ந்து டீ குடிக்க, எதிரே தரையில் குந்த வைத்து அமர்ந்தபடி தேநீர் பருகுகின்றனர் தலித்துகள்.

"என்ன பண்ணச் சொல்றீங்க! பாட்டன் பூட்டன் காலத்துல இருந்து பழகிருச்சு. இப்பவாவது பரவாயில்லை. முந்தியெல்லாம் கொட்டாங்குச்சி, நசுங்கிப் போன ஈய தம்ளர்ல டீ ஊத்துவாங்க! இப்ப பிளாஸ்டிக் தம்ளர்ல கொடுக்குறாங்க. சரிசமமா உக்கார வைங்கன்னு கேட்டாச்சு, குடிக்கிற ஒரு வாய் கஞ்சியிலயும் நாமளே மண் அள்ளிப் போட்டுக்கிட்ட மாதிரி ஆயிரும்!" கோபத்தைக்கூட வெளிப்படுத்த முடியாத வேதனை தெறிக்கிறது அந்த ஏழை விவசாயியின் குரலில்!

திண்டுக்கல் பக்கமுள்ள வாகரை பஞ்சாயத்தின் தலைவராக இருக்கும் சின்னானை, அவரது பஞ்சாயத்து அலுவலக இருக்கையில் உட்காரக்கூட ஆரம்பத்தில் அனுமதிக்கவில்லையாம். பெரும் போராட்டத்துக்குப் பிறகுதான், அவரால் அவரது இருக்கையில் அமர முடிந்தது.

காலம் காலமாகப் பண்ணையின் வயல்களில் உழைத்துக் கறுத்த உடல்கள் இப்போதும் ஒரு சிங்கிள் டீக்காக கூனிக் குறுகிக் கிடப்பது பவானி பகுதியில் சகஜம். மேட்டூர் பகுதியில் உள்ள பெரியதண்டா, நீதிபுரம், ஊர் நத்தம், ஒட்டன்காடு, கோவிந்தபாடி, சி.எஸ்.புரம் ஆகிய ஊர்களில் இரட்டை தம்ளர் முறை, சலூன் கடை தீண்டாமை எல்லாம் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாமல் தொடர்ந்து கொண்டு இருக்கும் கொடுமைகள்!

கம்யூனிஸ்ட் கட்சியின் இளங்கோவன், "ஊர்நத்தம் கிராமத்தில் பிள்ளையாருக்கு ஒரு தலித் தண்ணி ஊத்திச் சாமி கும்பிட்டாருனு பஞ்சாயத்தைக் கூட்டி, அவருக்கு அபராதம் போட்டிருக்காங்க. குழாய்த் தண்ணி ரொம்பி வழியுதேனு ஒரு தலித் பொண்ணு, குடத்தைத் தள்ளி வெச்சிருக்கு. அது உசந்த சாதிப் பொண்ணோட குடம்கிறதால, அந்த தலித் பொண்ணை ஊரைவிட்டே தள்ளி வெச்சுட்டாங்களாம். அபராதம்லாம் கட்டித்தான் ஊருக்குள்ள திரும்ப வந்துச்சாம். தலித் பையன்கூட வேற சாதி பொண்ணு காதலிச்சு ஊரை விட்டு ஓடிப் போயிருச்சுன்னா அவ்ளோதான்! எங்கே இருந்தாலும் அந்தப் பொண்ணைத் தேடிப் பிடிச்சுக் கொண்டு வந்து, நாக்குல ப்ளஸ் குறி போல சூடு போட்டு தீட்டு கழிச்சி விட்ருவாங்க. இது இன்னிக்கு வரைக்கும் வழக்கத்துல இருந்துட்டுதான் இருக்கு. தீண்டாமை இல்லைனு சொல்ற அதிகாரி யாரா இருந்தாலும் வரச் சொல்லுங்க. நானே ஸ்பாட்டுக்கு கூட்டிட்டு போய்க் காட்டுறேன். அப்புறம் தெரியும் தீண்டாமை இருக்கா இல்லையான்னு..." என்று கொதித்துப் போய்ப் பேசுகிறார்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் வாசுகியிடம், இது பற்றிப் பேசினோம். "இரட்டை தம்ளர் முறை பற்றி எங்களுக்கு தகவல் வந்தவுடனேயே கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமையைச் சீராக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இது சமூக பிரச்சினை. தலித் மக்களிடம் புகாரை எழுதி வாங்கி சிலரைக் கைது செய்வது மட்டுமே தீர்வாக இருக்க முடியாது. அது நிலைமையை இன்னமும்தான் சிக்கலாக்கும். அனைத்துத் தரப்பு மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம்தான் உண்மையான தீர்வினை எட்ட முடியும்" என்கிறார் வாசுகி.

பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், "தீண்டாமைக் கொடுமை நிகழும் டீக்கடைகளின் முகவரிகளோடு எங்கள் அமைப்புத் தோழர்கள் இந்த இரட்டை தம்ளர் கொடுமையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்கள். தமிழக காவல்துறையில் இருக்கிற மனித உரிமைப் பிரிவினர் வந்து எங்களிடம் அந்த முகவரிகளை வாங்கிப் போய், அனைவருக்கும் பொதுவாக பிளாஸ்டிக் தம்ளராக மாற்றியிருக்கிறார்கள். இது ஒரு சின்ன முன்னேற்றம்தான். சரிக்குச் சமமாக உட்காரும் உரிமை இன்னும் தலித்துகளுக்கு வழங்கப்படவில்லை. இந்த விஷயத்தில் உயர்சாதியினரின் மனப்பான்மை மாற வேண்டும். இதற்காகத் தொடர்ந்து நாங்கள் போராடுவோம்" என்கிறார்.

இரட்டை தம்ளர் ஒழியும் நாள் தான் நமக்கு இரண்டாவது சுதந்திர நாள்! உண்மையான சுதந்திர நாள்!

**- 'ஆனந்த விகடன்' அக். 3**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# முடிவெட்டவும் மறுப்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

45. ஈஸ்வரன் முனியாண்டி விலாஸ், சிந்தலப்பட்டி
46. பழனிச்சாமி சிந்தலப்பட்டி
47. கவுண்டர் டீக்கடை இராமபட்டிணம் புதூர் சத்திரப்பட்டி

**இடையகோட்டை**

48. பெரியசாமி டீக்கடை பி.என்.கல்லுப்பட்டி
49. மலைக்காரர் டீக்கடை பி.என்.கல்லுப்பட்டி
50. நீலியம்மாள் டீக்கடை பி.என்.கல்லுப்பட்டி
51. கனகராஜ் டீக்கடை அம்மாபட்டி கள்ளிமந்தையம்
53. பாப்பாத்தி டீக்கடை சுமைதாங்கி- தேவத்தூர்
54. கணேசன் டீக்கடை புது அத்திக்கோம்பை ஒட்டன்சத்திரம்

**ஆத்தூர் தொகுதி**

**ரெட்டியார்சத்திரம்**

55. செல்லாத்தாள் டீக்கடை செம்மடைப்பட்டி
56. தங்கவேல் டீக்கடை செம்மடைப்பட்டி
57. அய்யர் டீக்கடை புதுச்சத்திரம்
58. பிச்சை டீக்கடை சட்டையப்பனூர்
59. மோகன் டீக்கடை சட்டையப்பனூர்
60. பழனிச்சாமி டீக்கடை சட்டையப்பனூர்

மேற்கண்ட ஊர்களில், கடைகளில் இன்றும் இரட்டைக் குவளை மற்றும் இரட்டை இருக்கை முறைகள் நடைமுறையிலுள்ளன.

தொடர்புக்கு :
**துரை.சம்பத்**
மாவட்டத் தலைவர்
**க.சூ.இரவணா**
மாவட்டச் செயலாளர்
94430 22771 - 9367921334

### பெரம்பலூரில் இரட்டை தம்ளர் முறை உள்ள தேனீர் கடைப் பட்டியல்

**அணை கரை** : வடவந்தக் கரையில் உள்ள முடிவெட்டும் கடைகளில் முடிவெட்டுவதில்லை.

**தேவமங்கலம் :** இராசேந்திரன், சுந்தரமூர்த்தி, தர்மலிங்கம், இராசகண்ணு, வெள்ளையன்.

**த. கீழவெள்ளி :** சேகர், பஞ்சனாதன், பழனிச்சாமி.

**தத்தனூர் மெட்டங்காடு -** தவமணி டீக்கடை

**நயகனை பெரியால்** : கிருஷ்ண மூர்த்தி, செந்தமிழ்ச் செல்வன்.

**பரவாய்** : புத்தர் சிலைக்கு மாலை அணிவிக்கத் தடை. கருப்பையா உணவு விடுதி, கொக்கி தேனீர் கடை வீரமுத்து.

**கோவில் :** அய்யனார் கோவில், செல்லியம்மன் கோவில்,

**காருக்குடி :** சிவலிங்கம், ராமசாமி.

**குறும்பாளையம் :** ராஜேந்திரன் தேநீர் கடை, செல்வராஜ், அய்யர் தேனீர் கடை. பொது நிழற்குடையில் நிற்க, அமரத் தடை.

**கொட்டரை :** மெசகோபால் தேனீர் கடை, சீரணத்தம்மா தேனீர் கடை, அன்பழகன் தேநீர் கடை.

**பரணம்** : பாப்பாசாமி, சேட்டு ஓட்டல், விசுவநாதன், இராசமாணிக்கம், பரமசிவம்.

**குமிழியம் :** அன்பழகன்,செல்வராஜ், வீரகையர், ரமேஷ், மருதம்மா, அஞ்சப்பன்.

**பெரியகுறிச்சி :** சங்கர், பன்னீர், ராமசாமி, முருகேசன், பரமசிவம்.

**சிறுகடம்பூர் :** மதி தேநீர் கடை, இராசேந்திரன், மணி.

**இரும்புலிக்குறிச்சி :** பரமசிவம், ஓட்டு ராமசாமி, பாப்பாக்கடை, பசுபதி - உணவு விடுதி,

**பேரளி -** சின்னதுரை, கலைமணி, சிங்காரவேலு, முத்துசாமி, அய்யாசாமி, குணசேகரன், சேகர், காவேரி

இங்கு நாற்காலியில் அமர்ந்து டீ மற்றும் உணவு சாப்பிட முடியாது. முக்கிய வீதிகளில் சைக்கிளில் செல்ல தடை.

**மருவத்தூர் :** பெரியம்மா, பனாங்கூர் செட்டியார், பிச்சை பிள்ளை - உணவு விடுதி. கண்ணாயிரம், இராசேந்திரன், தங்கராசு - தேனீர் கடை.

அம்மன் குளம் - தலித் மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட் டுள்ளன. ஆண்டு வருவாய் ரூ.20 ஆயிரம்.

வீதிகளில் சைக்கிளில் செல்ல தடை.சிவன் கோயில், அய்யனார் கோயில், பெரு மாள் கோயில்களுக்குள் செல்ல அனுமதி இல்லை. அஞ்சல் அலுவலகம், கிராம நிர்வாக அலு வலர், அலுவலகங்களில் உட்கார்ந்து பேச முடியாது.

**சித்தளி:** கருப்பையா, செல்வராசு, மொட்டையன், ரமேஷ், எம்.எல்.ஏ. கடை.

**மனகதி :** செல்வ பெருமாள், ஜெயராமன், கோவிந்தராசு, இளையராஜா.

**சிறுகுடல் :** தாடி பெரியசாமி.
**வேப்பந்தட்டை :** முனியாண்டி சலூன்.

## மதுரை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் தேர்வு

3.10.2007 புதன்கிழமை பகல் 2 மணிக்கு ஆ. முருகேசன் இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மதுரை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மதுரை மாவட்டக் கழக அமைப்பு உருவாக்கப்பட்டது. மாவட்ட அமைப்பாளர் : விடுதலை சேகர், மாவட்டத் தலைவர் : மா. மாயாண்டி, மாவட்டச் செயலாளர் : ஆ. முருகேசன் ஆகியோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

# சேலம் மாவட்டத்தில் ஒரே நாளில் 12 இடங்களில் கழகம் ஆர்ப்பாட்டங்கள்

சேலம் மாவட்டத்தில் ஒரே நாளில் 13 இடங்களில் கழக சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதுபற்றி மாவட்ட செயலாளர் முல்லைவேந்தன் தரும் செய்தி:

சேலம் மாவட்டத்தில் அக்.12 ஆம் தேதி 12 ஊர்களில் பெரியார் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. மேச்சேரியில் மாவட்ட தலைவர் முல்லை வேந்தன் தலைமையில் தோழர்கள் இளஞ்செழியன், மாரிமுத்து முன்னிலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தோழர்கள் மேட்டூர் கணேசன், மேச்சேரி தங்கராசு, சுந்தரம், கார்த்தி கிருஷ்ண மூர்த்தி, பிரபு, சரவணன், கலைமணி, கிருஷ்ணன், காமராசர் உட்பட ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஓமலூரில் - மாவட்ட செயலாளர் டைகர் பாலன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 22 தோழர்களும், தொளசம்பட்டியில், கழக களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவல்லி அன்பு தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 20 தோழர்களும், சேலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் நகரக் கழகப் பொறுப்பாளர் டேவிட் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 60 தோழர்களும் இளம்பிள்ளை கிராமத்தில் வெள்ளைச்சாமி தலைமையில் செழியன் முன்னிலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 30 தோழர்களும், குஞ்சாண்டியூரில், இளைஞரணி தலைவர் சக்திவேல் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 22 தோழர்களும், கொளத்தூரில் சுந்தரம் தலைமையில், காவை இளவரசன் முன்னிலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 20 தோழர்களும், பண்ணவாடியில் சூரியகுமார் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 25 தோழர்களும், கோவிந்தபாடியில் ஈசுவரன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 25 தோழர்களும், மேட்டூரில் கோவிந்தராசு தலைமையில், நகரத் தலைவர் செ. மார்ட்டின், குமரன் நகர் பகுதியைச் சேர்ந்த சிவக்குமார், கதிரவன் மற்றும் தோழர்களும், தூக்கனாம்பட்டி, பொன்னகர் பகுதியைச் சேர்ந்த தோழர்கள் மொத்தம் 38 தோழர்களும் கலந்து கொண்டனர்.

காவேரி கிராஸ் பகுதியில் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டம் - ஆர்ப்பாட்டம் மேட்டூர் நகரத் தலைவர் செ. மார்ட்டின் தலைமையில் நடைபெற்றது. இதில் குமரன் நகர், தூக்கனாம்பட்டி, பொன்னகர் பகுதியைச் சேர்ந்த தோழர்கள் 32 பேர் கலந்து கொண்டனர். மேலும் காவேரி கிராஸ் பகுதியிலுள்ள தேனீர் கடைகளுக்கு தோழர்கள் சென்று துண்டறிக்கை கொடுத்து இரட்டைக் குவளை தேனீர் கடைகளில் வைக்கக் கூடாது, அனைத்து மக்களும் சாதி வேறுபாடின்றி நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. சந்தை தானம் பட்டியில் சவுந்தரம் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டதில் 17 தோழர்களும் பங்கேற்றனர். சேலம் மாவட்டத்தில் ஒரே நேரத்தில் பெரியார் திராவிடர் கழகம் 12 ஊர்களில் போராட்டம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

"நிறுத்து, நிறுத்து, இரட்டை
குவளைகளை நிறுத்து!

டாஸ்மார்க் கடைகளில் ஒற்றை
கிளாஸ், தேனீர்க்கடைகளில்
மட்டும் இரட்டை டம்ளரா?

வேண்டாம், வேண்டாம்,
தாழ்த்தப்பட்டோருக்கு
தனிச் சுடுகாடு வேண்டாம்.

'சேலம் கவுந்தம்பாடி - திரவுபதியம்மன் கோயிலை தலித் மக்களுக்கு திறந்துவிடு' என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. துண்டறிக்கை, பதாகை, விளம்பரத் தட்டிகள் மூலம் ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்கள் குறித்து விளம்பரம் செய்யப்பட்டிருந்தன.

### திருவண்ணாமலையில்

2.10.2007 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் பெரியார் சிலை அருகில் திருவண்ணாமலை மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக தலைவிரித்தாடும் இரட்டைக்குவளை முறையை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு அ. தமிழ் தாசதுரை தலைமை வகித்தார்.

இரா. அல்லித்து, வழக்கறிஞர் ப. கண்ணன், விழுப்புரம் மாவட்டத் தலைவர் மு.வ. நடராசன், விழுப்புரம் மாவட்ட செயலாளர் தா. சிவா, தமிழ் நாடு இளைஞர் பேரவை எம். வெங்கடேசன், ம. வர்கிசு, அம்பேத்கர் புரட்சி முன்னணி வழக்கறிஞர் இராம. பச்சையப்பன், இளைஞரணி நகர அமைப்பாளர், ம.தி.மு.க. வெற்றி, புரட்சிகர இளைஞர் முன்னணி வழக்கறிஞர் கு. சந்திரசேகர், இரா. புத்தபிரியன், ஆர். தங்கராஜ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி விழுப்புரம் அய்யனார் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கண்டன உரையாற்றினர். இரட்டைக் குவளை நடைமுறையிலுள்ள மோத்தக்கல் கிராமத்திலிருந்து வே. குப்பன், அ. சந்திரசேகர், கு. அன்பு, க. முருகன், மா. ஏழுமலை, ஆ. வெங்கட்ராமன், ரா. முருகன், தே. ராமமூர்த்தி, க. ஜெயகணேசு ஆகிய தோழர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். ●

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857


**கழகம் தொடர்பான செய்திகளைப் படிக்க... பரப்ப...**
**wwwdravidar.org.**

**கழகச் செய்திகள், படங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:**
**periyarmulakkam@yahoo.com**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 11th October 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 அக்டோபர் 18, 2007 புரட்சி 5 முழக்கம் 42 விலை : ரூ.2.50


# இலங்கைக்கு ரகசியமாக இந்தியாவின் ஆயுதங்கள்

இந்தியா இலங்கை அரசுக்கு பாதுகாப்பு ஆயுதங்களை மட்டுமல்ல, விடுதலைப்புலிகளையும் அப்பாவித் தமிழ் மக்களையும் கொன்றொழிக்கும் ஆயுதங் களையும் ரகசியமாக வழங்கி வருவது அம்பலமாகியுள்ளது. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு (அக்.15, 2007) இந்த அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளது. அண்மையில் விமானத்தை சுட்டு வீழ்த்தக் கூடிய ஏவுகணைகளை, இந்தியா, சிறீலங்காவுக்கு அனுப்பியுள்ளது. (40MML-70 - மிக அருகாமையில் விமானத்தை வீழ்த்தக்கூடிய தானியங்கி ஏவுகணை) அத்துடன் ரூ.40,000 டாலர் மதிப்புள்ள ‘எ-70’ நவீன துப்பாக்கிகளையும், இந்தியா அனுப்பி யுள்ளது. தங்களுக்கு மேலும் ஆயுதங்களை அனுப்புமாறு, சிறீலங்கா, இந்தியாவை கோரி இருக்கிறது. “சீனா, பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்கள் வாங்க வேண்டாம், நாங்களே உங்களுக்கு தருகிறோம்” என்று இந்தியா உறுதியளித்துள்ளது. இந்தியா - பாதுகாப்புக்கான ஆயுதங்களை மட்டுமே சிறீலங்காவுக்கு வழங்கி வருகிறது என்று இதுவரை சொல்லப்பட்டு வந்தாலும், (மக்களையும், விடுதலைப்புலிகளையும்) கொன்றொழிக்கக்கூடிய - ஆயுதங்களையும் வழங்கி வருகிறது என்பது தெரிய


Printed from
THE TIMES OF INDIA The Times of India -Breakin
India quietly steps up arms aid to Lanka
15 Oct 2007, 0000 hrs IST, Rajat Pandit, TNN

வந்துள்ளது. சிறீலங்காவில், பாகிஸ்தான், சீனா உதவிகளைத் தடுக்கவே இந்தியா, தனது ஆயுத சப்ளையைத் தீவிரமாக்கி யுள்ளது. பிரதமருக்கான, பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், ‘பாதுகாப்புக் கருவிகளை’ மட்டுமே வழங்கி வருவதாகக் கூறுவது உண்மைக்கு மாறானது என்று அதிகார வட்டாரங்கள் கூறுகின்றன. அதே நேரத்தில், மத்தியில் கூட்டணி ஆட்சியிலுள்ள தி.மு.க. - ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி வருவதால், இந்த ஆயுத உதவிப் பிரச்சினை வெளியே தெரிந்து, சிக்கலை உருவாக்கிடக் கூடாது என்பதில், மத்திய அரசு எச்சரிக்கையுடன் ரகசியமாக செயல்பட்டு வருகிறது என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன் இந்தியாவும் சிறீலங்காவும் இணைந்து “கூட்டு பாதுகாப்புக் குழு” என்ற அமைப்பை உருவாக்கியுள்ளதாக சிறீலங்கா அரசு அறிவித்தது. அதாவது இரு நாட்டு ராணுவ அதிகாரிகள் உளவுத் துறையினர் இணைந்து தமிழர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான அழித்தொழிப்புக்கு திட்டமிட்டு செயல்படுதலே இதன் நோக்கம். ரகசியமாக மேற்கொண்டிருந்த இந்த முடிவை சிறீலங்கா வெளிப்படையாக அறிவித்தவுடன் அதிர்ச்சியடைந்த இந்திய உளவுத் துறை அவசர அவசரமாக மறுப்பு வெளியிட்டது.

அதைத் தொடர்ந்து சிறீலங்கா அரசும், தனது அறிக்கையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்தது. உண்மையில் இது திட்டமிட்ட ஒரு நாடகம் என்றும், இரண்டு அரசுகளும் ‘ராணுவ கூட்டமைப்பு’ ஒன்றை உருவாக்கிக் கொண்டு செயல்பட்டு வருகின்றன என்பதும், இப்போது ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தியின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இந்தியா வின் இந்த நடவடிக்கை உலகம் முழுதும் வாழும் தமிழர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. **(- உள்ளே தலையங்கம்)**

## துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் அறிக்கை: வழக்கறிஞர் போராட்டமும் அரசின் மவுனமும்

வழக்கறிஞர்கள் தொடர்ந்து நடத்தி வரும் போராட்டம் குறித்து கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் விடுத்துள்ள அறிக்கை.

பத்து நாட்களாக நடைபெறும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் போராட்டம் பொது மக்களை பெரிதும் பாதித்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். நீதிமன்ற உத்தரவு பெற்றால்கூட அதை நிறைவேற்றாமல் இழுத்தடிக்கும் அரசு அதிகாரிகள் இருக்கின்றபோது, நீதிமன்றத்தையே அணுக முடியாமல் கடந்த பத்து நாட்களாக வழக்கறிஞர்கள் போராட்டம் செய்வதால் பொது மக்கள் பெரிதும் அவலத்துக்குள்ளாகியுள்ளனர். பொய் வழக்கில் சிறை சென்றவர்கள் ஜாமீனில் வர முடியாது. முன் ஜாமீன் பெற முடியாது. கல்லூரிகளில் தேர்வு எழுத அனு மதிக்கப்படாத மாணவர்கள் நீதிமன்ற உத்தரவு பெற முடியாது. இப்படி எத்தனையோ அவசர வழக்குகள் பத்து நாட்களாக பொது மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக் கிறது. போராட்டத்துக்கான காரணம் மிகவும் அற்பத்தனமானது. ஒரு மருத்துவ மனையில் இரு வழக்கறிஞர்களை ஒரு போலீஸ்காரர் தாக்கியதாக தெரிகிறது. அந்த போலீஸ்காரர் மீது நடவடிக்கை எடுத்து அவரை கைது செய்ய வேண்டு மென்பதுதான் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களின் கோரிக்கை. எத்தனையோ நல்ல நாட்டுப் பிரச்சினைகளுக்காக போராட வேண்டிய வழக்கறிஞர்கள் சமுதாயம் சல்லிக்காசு பெறாத போலீஸ்காரரை கைது செய்ய வேண்டும் என்பதற்காக பத்து நாட்களாக நீதிமன்றத்தை புறக்கணித்துப் போராடுவது மிகவும் வருந்தத்தக்கதாகும். வழக்கறிஞர்கள் பக்கம் நியாயமிருப்பின் இதற்கு சட்டப்படி என்ன பரிகாரம் காண வேண்டுமோ அதைத் தானே கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்ய வேண்டும்?


நாம் அறிந்த வரையில் சில இளைய வழக்கறிஞர்கள் ஒரு குழுவாக சேர்ந்து கொண்டு மற்ற வழக்கறிஞர்களை தடுப்பதை தலைமை நீதிபதியோ, தமிழக அரசோ கண்டு கொண்டதாகவோ, கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. இது வருந்தத்தக்கதாகும். பத்து நாட்களாக ஜனநாயகத்தின் ஒரு தூண் செயல்படாமல் உள்ளது மக்கள் மீது அக்கறைக் கொண்டுள்ள அரசு என்ன செய்ய வேண்டும்? அடுத்த நாளே சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி ஒரு சுமுகமான நிலையை உண்டாக்க வேண்டாமா, மிகுந்த அனுபவமும் அறிவுத்திறனும் கொண்ட முதல்வர் கலைஞர் இதனைப் பார்த்துக் கொண்டு ‘சும்மா’ இருப்பது அரசு அவர்தம் கட்டுப்பாட்டில் இல்லையா?

ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உடனடியாக ஒரு முடிவு ஏற்பட வழிவகை செய்ய வேண்டும். அப்படி உடனடியாக பிரச்சனைக்கு தீர்வு காணவில்லையெனில் பெரியார் திராவிடர் கழகம், மக்களுக்காக போராட்டத்தில் இறங்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக நேரிடும். இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பெரியாரின் லட்சியப் போராளிகள்

தோழர் பன்னீர்செல்வம் - கோவை மாநகர பெரியார் திராவிடர் கழகத்தின் துடிப்பான செயல் வீரர். சட்டக் கல்லூரி மாணவர். தமிழ்நாடு மாணவர் கழகத் தின் அமைப்பாளர்களில் ஒருவர்.

இரட்டைக் குவளை எனும் தீண்டாமைக்கு எதிராக களமிறங்கிய அவர், காமிரா பொருத்தப்பட்ட செல் பேசியுடன் கிராமம் கிராமமாகப் புறப்பட்டார். 143 கிராமங் களில் தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறை நடைமுறைப்படுத்தப் படுவதை கடும் ஆபத்து களுக்கிடையே ரகசியமாகப் படம் பிடித்தார். அந்தப் படங் களில் சிலவற்றை ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில நாளேடு (அக்.4, 2007) முதல் பக்கத் திலேயே வெளியிட்டது. சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவர் பன்னீர்செல்வம், செல்பேசி காமிராவைப் பயன்படுத்தி, தீண்டாமையை நிலை நிறுத்தும் இரட்டைக் குவளை முறையை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார் என்ற தலைப்பில் செய்தி வெளியிட் டுள்ளது. பன்னிரண்டாம் வகுப்பு மாணவனாக இருந்த போதே பெரியார் திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட பன்னீர்செல்வம், கழகப் போராட்டங்களில் முன்னிலையில் நிற்பவர். 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த செய்தியை கேட்டவுடன், அடுத்த சில மணி நேரங்களிலே, தோழர்களுடன் போராட்டக் களத்தில் இறங்கினார். நீதிபதிகள் உருவத்தை பாடையில் படுக்க வைத்து தோழர்களுடன் பாடையைத் தூக்கிக் கொண்டு - நீதிபதிகளுக்கு எதிராக முழக்கமிட்டு, கோவை நகரத்துக்குள் 5 கிலோ மீட்டர் தூரம் வலம் வந்த காட்சியை நகரமே அதிர்ச்சியுடன் பார்த்தது. அதற்குப் பிறகுதான் காவல்துறை அவரை கைது செய்தது. ‘என்.டி.டி.வி.’ இக்காட்சியைப் படம் பிடித்து உலகம் முழுதும் ஒளிபரப்பியது.



தனியார் பொறியியல் கல்லூரிகளில் தாழ்த்தப்பட் டோர், பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடுகளை, உச்சநீதி மன்றம் முழுமையாக ரத்து செய்த அறிவிப்பு வந்தவுடன் - அதே போல், சேலம் ரயில்வே கோட்டம் தடைப் படுத்தப்பட்டது என்ற அறிவிப்பு வந்தவுடன், தன்னைத் தீயிட்டு எரித்து, எதிர்ப்பைக் காட்ட பெட்ரோல் டின்னுடன் கோவை பேருந்து நிலையத்துக்கு வந்த போது காவல் துறையினரால் மடக்கிக் கைது செய்யப் பட்டார். மூட நம்பிக்கை ஒழிப் பிலும் முன்னணியில் நிற்கக் கூடியவர். கழகம் நடத்தும் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலங்களில் - முதுகில் அலகு குத்திக் கொண்டு, கடவுள் மறுப்புடன் கார் இழுத்து வருவார். பிரிக்கால் தொழிற்சாலையில், தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக, 5000 தோழர்களைத் திரட்டிப் போராடியவர். அவர்தான் இப்போது தமிழ்நாடு காவல்துறைக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

“இரட்டைக் குவளை முறை எங்கே

6 ஆம் பக்கம்

**தலையங்கம்**

## உளவுத் துறையின் கபட நாடகம்!

விடுதலை சிறுத்தைகளின் வெளி யீட்டு அணிச் செயலாளர் தோழர்வன்னி அரசு, விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் கடத்துவதாகக் கூறி, தமிழகக் காவல் துறையின் உளவுப் பிரிவு கைது செய்தது. அன்று மாலையே அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். சென்னை துறைமுகத்துக்கு பொதி அஞ்சலில் நார்வே நாட்டிலிருந்து, கோகுலன் என்பவர் வன்னி அரசுக்கு அதிவேகப் படகுகளை செலுத்தக் கூடிய எந்திரங்களை அனுப்பியதாகக் குற்றம்சாட்டிய உளவுத் துறை, இது விடுதலைப் புலிகளுக்கு அனுப்புவதற்காகவே வந்துள்ளது என்ற யூகத்தின் அடிப் படையில் தோழர் வன்னி அரசைக் கைது செய்துள்ளது. "ஆயுதங் களையோ அல்லது வேறு பொருள்களையோ கடத்தக் கூடியவராக இருந்திருந்தால் வன்னி அரசு என்கிற தன்னுடைய பெயரிலேயே, தான் தங்கியிருக்கும் வீட்டு முகவரிக்கே அனுப்பும்படி கோரி இருப்பாரா?" என்று விடுதலை சிறுத்தைகள் பொதுச்செயலாளர் தோழர் திருமாவளவன் கேள்வி எழுப்பி யுள்ளார். நியாயமான கேள்வியாகும் இது.

"விசாரணையின்போது, கடத்தலில் ஈடுபட்டதாக ஒப்புக் கொள்ளும்படியும், திருமாவளவனின் தூண்டுதலில்தான் அவ்வாறு செயல்பட்டதாகவும் வாக்குமூலம் தரும்படி மத்திய உளவுத் துறையினர் வன்னி அரசைக் கட்டாயப்படுத்தியுள்ளனர்" என்ற அதிர்ச்சியான தகவலையும் தோழர் திருமாவளவன் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நடக்கும் தி.மு.க. ஆட்சியின் தோழமைக் கட்சி மீது, இத்தகைய பழி சுமத்தி, தமிழக அரசுக்கு நெருக்கடி தருவதற்கு உளவுத்துறை சதித் திட்டம் தீட்டுகிறது என்ற தோழர் திருமாவளவனின் குற்றச் சாட்டைப் புறக்கணித்துவிட முடியாது. இது உளவுத் துறையின் கைவந்தக் கலையாகும். விடுதலைப்புலிகள் மீதான தடையைத் தொடர்ந்து நீடிக்கவும், அவ்வப்போது, மத்திய அரசுக்கு இது போன்ற வழக்குகள் தேவைப்படுகின்றன.

ஆயுதக் கடத்தல் என்றால் சட்டப்படி அது குற்றம் தான். ஆனால், அந்த வழக்குகள் பொய்யாகவே புனையப்படுகின்றன. அதே நேரத்தில், இந்திய அரசு என்ன செய்கிறது? முறையான ஒப்பந்தங்கள் ஏதுமின்றி, அரசின் கொள்கை முடிவுகள் ஏதுமின்றி அமைச்சரவை ஒப்புதலின்றி – இந்தியா, சிறிலங்காவுக்கு 'ரகசியமாக' ஆயுதங்கள் வழங்கி வருகிறது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற நாளேடுகளே இதை அம்பலப் படுத்தியுள்ளன. உண்மையில் இதுவும் சட்டவிரோதமாக ஒரு அரசே நடத்தும் 'கடத்தல்' தானே!

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் ஒரு இயக்கத்தைச் சார்ந்த வன்னி அரசுக்கு சட்டப்படி, கட்டணம் செலுத்தி பெயர் முகவரி கொடுத்து கப்பலில் அனுப்பப்பட்ட படகு எந்திரம் இந்தியப் பார்ப்பன ஆட்சியின் பார்வையில் ஆயுதக் கடத்தலாகிறது? அது தேச விரோதமாம்!


எந்தச் சட்டமோ ஒப்புதலோ இன்றி இந்தியாவின் ஆளும் பார்ப்பன–பனியா உளவுத் துறைக் கும்பல் அண்டை நாட்டுக்கு தமிழர்களை கொன்றொழிக்கும் ஆயுதங் களை ரகசியமாக 'கடத்துவது' தேச பக்தியாம்!

பார்ப்பான் வகுத்ததுதான் இந்த நாட்டின் சட்டம், தர்மம், தேசபக்தி என்றால், நடப்பது 'மனுதர்ம' ஆட்சி, இல்லாமல் வேறு என்ன?

தோழர் வன்னி அரசு மீது தொடர்ந் துள்ள பொய் வழக்கை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும். இலங்கைக்கு, ரகசியமாக ஆயுதம் அனுப்பும் இந்திய அரசிடம் தமிழக அரசு விளக்கம் கேட்டு, இனப் படு கொலைக்கு துணைப் போகும் துரோகத்தை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

# புதுவையில் வேதாந்திக்கு 'சவப்பாடை' ஊர்வலம்: கழகத்தினர் கைது

புதுவை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ராமர் பாலம் என்ற பெயரில் தமிழ்நாட்டுக்கும், தமிழருக்கும் எதிரான பார்ப்பன-இந்து மதவெறி சக்திகளுக்கு சாவுமணி அடித்து சவப்பாடை ஊர்வலம் நடை பெற்றது. 28.9.2007 வெள்ளிக்கிழமை காலை பெரியார் திடலிலுள்ள சிங்காரவேலர் சிலையில் தொடங்கியது. புதுவை மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன் தலைமை தாங்கினார். தமிழக முதல்வர் கலைஞருக்கு கொலை மிரட்டல் விடுத்த விசுவ இந்து பரிசத்தை சேர்ந்த பா.ஜ.க. முன்னாள் எம்.பி. ராம்விலாஸ் வேதாந்தியை கடுமையான சட்டத்தின் கீழ் கைது செய்து



சிறையிலடை, இந்து பார்ப்பன மதவெறி சக்திகளான பா.ஜ.க., இந்து முன்னணி, விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள், சிவசேனாவை தடை செய் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேதாந்தியின் உருவ பொம்மை பாடை கட்டி தூக்கி செல்லப்பட்டு காமராசர் சிலை அருகே காவல்துறை எதிர்ப்பை மீறி கொளுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் பல்வேறு அமைப்புத் தோழர்கள் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் சுமார் 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

# பக்தர்களைக் காப்பாற்றாத கடவுள்கள்

குஜராத் மாநிலம் பஞ்ச் மகால் மாவட்டத்தில் பவகாத் என்ற - கடல் மட்டத்திலிருந்து 850 மீட்டர் உயரத்திலுள்ள மலையின் மீது மகாகாளி கோயில் உள்ளது. நவராத்திரி யன்று, பக்தர்கள் மலை ஏறி தரிசிப்பது வழக்கமாம். கடந்த 14 ஆம் தேதி மலை மீது 2 லட்சம் பக்தர்கள் திரண்டன ராம். அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 12 பக்தர்கள் பலியாகிவிட்டனர். 25 பக்தர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டம் வீரவநல்லூர் அருகே உள்ள பொட்டல் கிராமத்திலுள்ள பத்ரகாளியம்மன் கோயி லுக்கு புதிதாக முன் மண்டபம் ஒன்றை கட்டும்போது, மண்டபம் இடிந்து ஊர் பஞ்சாயத்து தலைவர் உட்பட நான்கு பேர் பலியாகி விட்டனர். இது கடந்த 15 ஆம் தேதி மட்டும் வந்த செய்தி. ஒவ்வொரு நாளும் இத்தகைய செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. கடவுளுக்காக கூடிய பக்தர்களை மரணத்திலிருந்து காப்பாற்ற கடவுளே வரவில்லை. இவர்கள் பகுத்தறிவாளர்களாக இருந்தால், இத்தகைய மரணங்களை சந்திக்கத் தேவையில்லை. நாம் நடத்தும் பகுத்தறிவுப் பிரச்சாரம், இவர்களைக் காப்பாற்ற முயலு கிறது. ஆனால் பார்ப்பன இராமகோபாலன் களோ உயிர்வாழும் 'இந்து'க்களைக் காப்பாற்றாமல் இல்லாத 'ராமனை'க் காப்பாற்றக் கிளம்பி விட்டார்கள்! இன்னமும் தங்களை 'இந்து' என்று நம்பிக் கொண்டிருப்போர் சிந்திப்பார்களா?

# இராமனை கேலி செய்யும் நாட்டுப்புறப் பாடல்கள்!

இராமாயணம் வரலாறு அல்ல; அது புராணம். நடந்த கதையுமல்ல, காலம் காலமாக செவி வழியாகச் சொல்லப்பட்டு, பிறகு வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வகையில் எழுதப்பட்ட கதை. சமஸ்கிருதத்தில் வால்மீகி எழுதிய இராமாயணத்தை மட்டும் பார்ப்பனர்கள் பிடித்துக் கொண்டு - வால்மீகி இராமாயணத்தைப் பரப்புவதில் தீவிரங்காட்டி செயல்பட்டார்கள். காரணம் - அது பார்ப்பன மேலாண்மையை அழுத்தமாக வலியுறுத்துகிறது என்பதுதான். வால்மீகி இராயாணத்திலும் ராமனைக்கூட - சுயமரியாதையும், தன்மானமும் உள்ள பெண்கள் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள். தன்னிடம் உண்மையான 'பதிவிரதையாக' நடந்து கொண்ட சீதையை இராமன் சந்தேகித்தான்; சீதையை அவமதித்தான்; இந்த ராமன் எப்படி முழுமையானவனாக - ஒழுக்கசீலனாக - வணங்கத்தக்கவனாக இருக்க முடியும் என்று படித்த பெண்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இராமனைக் கடுமையாகக் குறை கூறும் பல கிராமியப் பாடல்கள்கூட இருக்கின்றன.

மராட்டிய பெண் எழுத்தாளர் சஹிதேஷ்பாண்டே இராமாயணம் என்பதே ஒரு கற்பனைதான் என்று கூறுகிறார். "அதை ஒரு நல்ல கதை என்று வேண்டுமானால் கூறலாமே தவிர, உண்மையான கதையல்ல; ராமன், மிகச் சிறந்த மனிதனும் அல்ல; சீதையை மிக மோசமாக நடத்திய ராமனை எப்படி முழுமையான, நேர்மையான மனிதன் என்று கூற முடியும்? அறிவைக் கொண்டு சிந்திக்கிற எவரும், இப்படித்தான் கேட்க முடியும்" என்கிறார் தேஷ் பாண்டே.

ராமனை பெண்கள் எதிர்ப்பதற்கு நியாயமான காரணங்கள் உண்டு.

இலங்கையிலிருந்து சீதையை மீட்டு வந்த பிறகு, யாரோ, பொது மக்களில் சிலர் சீதையின் மீது சந்தேகத்தை எழுப்பினார்கள் என்று ராமனும், சீதையை சந்தேகிக்கிறான். சீதையை தீயில் இறங்கி கற்பை நிரூபிக்கச் சொல்கிறான். உடனே தீயில் இறங்கி, 'அக்கினி பிரவேசம்' செய்து சீதை தான் கற்புடையவள் என்பதை நிரூபித்த பிறகும்கூட, ராமன், சீதையை கைவிட்டுவிடுகிறான். ராமன் பொறுப்பற்ற தந்தையாகவும் இருக்கிறான் தனது மகன்களான லவன், குசன் இருவரையும் சீதையே காட்டில் வளர்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விடுகிறான்.

தன்மானமுள்ள இன்றைய பெண்கள் - ராமனின் இந்த இழி செயலை கடுமையாக விமர்சிக்கிறார்கள். ஹேமா ராமா கிருஷ்ணன் என்பவர் ராமனை - பெண்ணுரிமைப் பார்வையில் கடுமையாக விமர்சித்து, ஒரு நாடகத்தை தயாரித்துள்ளார். நாடகத்தின் பெயர் 'புகலிடம்' (Sanctuary) என்பதாகும். நாடகத்தின் இறுதியில் இத்தகைய சந்தேகப் பிராணியுடன் தன்னால் வாழ முடியாது என்று சீதை தற்கொலை செய்து கொள்கிறாள். ராமனின் மனைவியாக இருந்ததால் - சீதை சந்தித்த துயரங்களை விளக்கும் ஒரு வீடியோ படம் ஒன்று 'Sita Sings the Blue' என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டு வருகிறது. பல பெண் எழுத்தாளர்கள் ராமனை கடுமையாக விமர்சித்து குற்றக் கூண்டில் நிறுத்தியுள்ளனர். பெண்கள் பிரச்சினை பற்றி ஆழமாக பல கட்டுரைகள் நூல்களை எழுதியுள்ள நவநீதா தேவ்சென் - ராமன் பரிசுத்தமானவன் என்பதை கேள்விக்குட்படுத்துகிறார்.

"இன்றைக்கும், பீகார், மே.வங்காளம், மகாராஷ்டிரா, ஆந்திரா கிராமங்களில், விவசாய வேலை பார்க்கும் பெண்கள், ராமனை கேலி செய்யும் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். சீதைக்காக நியாயம் கேட்கின்றன அந்தப் பாடல்கள்" என்கிறார் சென்.

எழுத்தாளரும், பதிப்பாளருமாகிய ஊர்வசி புட்டாலியா, "ராமனை அவரவர் தங்களுக்கு வசதியாகப் பயன்படுத்து கிறார்கள். அந்த வகையில் பா.ஜ.க. தனது அரசியல் நலனுக் காக ராமனை கதாநாயகனாக்குகிறது" என்று கூறுகிறார்.

**- 'அவுட்லுக்' இதழிலிருந்து (அக்.1, 2007)**

## சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

செப்டம்பர் 17, சுயமரியாதை உணர்வூட்டிய தந்தை பெரியார் பிறந்த நாளில் சங்கராபுரத்தில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்க வேண்டி தமிழக அரசின் சட்டத்துறை அமைச்சகத்தை வலியுறுத்தி விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் காலை 11 மணியளவில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ப. கண்ணன் தலைமை வகித்தார். ந. அய்யனார் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் மு.வ. நடராசன், மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வே. செந்தில், திருவண்ணாமலை மாவட்ட அமைப்பாளர் அ.தமிழ்தாசதுரை ஆகியோர் கருத்துரை வழங்கினர். அ.முருகன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத் திற்கு முன்பு தந்தை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு பெரியார், அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப் பட்டது.

# இராமனே அழித்துவிட்ட பாலத்துக்கு இராமசீடர்களே, ஏன் போராடுகிறீர்கள்?

## பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கேள்வி

*சூலூரில் 23.9.07 அன்று நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் - பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆற்றிய உரை:*

பரபரப்பான சூழலில் தலைவர் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பெரியார் ஏன் வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் திராவிட இன உணர்வு கொண்ட அனைவரும் சிந்திக்கும் நாளாக இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது. எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் அதைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஒரு பக்கம் முதல்வர் கலைஞருடைய தலையைக் கொண்டு வந்தால் எடைக்கு எடை தங்கம் கொடுப்பேன் என்று ஒரு சாமியார் பேசுகின்றார். பேசுவதற்குக் காரணம் முதல்வர் கலைஞர் சேலத்தில் ஆற்றிய உரை. அந்த வகையிலே இராமர் பாலத்தை வைத்து அரசியல் துவக்கியுள்ள சங்பரிவார்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். காரணம் இன்றைக்கு இந்த சூழலிலே இராமரைப் பற்றி நாங்கள் பேசினால் இந்தியா முழுதும் அண்ணன் போலீஸ் கந்தசாமி சொன்னதுபோல அதிர்ந்திருக்காது. முதல்வர் கலைஞர் பேசியவுடன் இந்தியா முழுதும் "அதிர்துல்ல" என்று அவர்கள் சொன்னது போல இன்றைக்கு அதிர்கின்றது. இராமரைப் பற்றி முதல்வர் சொன்ன கருத்துக்களை அறிவுப்பூர்வமாக பகுத்தறிவுப்பூர்வமாக அவர்களால் மறுக்க இயலவில்லை. நாம் ஊர்வலத்தில் முழக்கமிட்டு வந்தோம், என்ன முழக்கம்? "இராமருக்கு சக்தியிருந்திருந்தால் அவர் கடவுள் எல்லா வல்லமையுடைய சர்வ வல்லமையுடைய அவதாரமாக இருந்தால் அவன் கட்டின பாலம் இது வரைக்கும் இருந்திருக்க வேண்டும். சாதாரணமா, நம்ம பொறியாளர்கள் சிவா அவர்கள் காண்ட்ராக்ட் எடுத்து கட்டிய பாலம்கூட நூறு வருடம் நிற்கிறது. ஆனால் இராமர் கட்டுன பாலத்தை மட்டும் தேட வேண்டியிருக்கிறது. *(சிரிப்பு, கைதட்டல்)*

ஆர்.எஸ்.எஸ்.க்கு நன்றி சொல்ல வேண்டாமா? இப்போது இராமாயணத்தை மீண்டும் நாங்கள் படிக்கத் தொடங்கி விட்டோம். சிந்திக்க தொடங்கிவிட்டோம். இராமன் காட்டுக்கு துரத்தப்படுகிறான். ராமன் பிறந்த ஊர் அயோத்தின்னு ஒரு பக்கம் சொல்றாங்க. இராமர் பிறந்த ஊர் அயோத்தி என்றால் காட்டுக்கு போ என்று சொன்ன பிறகு நாட்டுக்கு வடக்கே இமயமலைக்குத்தானே இராமன் போயிருக்க வேண்டும்? எதற்கு தெற்கு நோக்கி வந்தான்? தெற்கே இராமருக்கு என்ன வேலை? தெற்கே இராமேசுவரத்திற்கு எதற்கு இராமன் வந்தான்? அதனால் தான் ஆராய்ச்சியாளர்கள் சொன்னார்கள், இராமாயணம் உண்மையல்ல. இது ஆரியர், திராவிடர் போராட்டம்! கற்பனைக் கதை. அங்கே இராமர் பாலம் கட்டினார் என்கிறான் இராமாயணத்தில், அதே இராமாயணத்திலே இராவணன் வந்து இங்கே சீதையை தூக்கிட்டுப் போனான் என்று சொல்லுகிறான். இராவணன் வருகிற போது பாலமே இல்லை. இராவணன் எப்படி வந்தாரு, கடல்லே பாலமே இல்லாம இராவணன் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார். தமிழ்நாட்டிற்கு வந்தவரு, அயோத்திக்கு வந்தவரு புஷ்ப விமானத்தில் வந்திருக்கிறாரு. அப்பவே இராவணன் புஷ்ப விமானம் கண்டுபிடித்து இருக்கிறாரு. கப்பல் ஓட்டிய தமிழன். இன்றைக்கு விமானம் ஓட்டுகிறான், அதே இலங்கையில். அதனால் அன்றைக்கே இராவணன் புஷ்ப விமானம் கண்டுபிடித்திருக்கிறான். இராவணனை அரக்கன்னு சொல்றான். அந்த அரக்கன் புஷ்ப விமானத்தில் வந்தான். சர்வ வல்லமைப் படைத்தக் கடவுளுக்கோ நீந்தக் கூட தெரியலீங்க. நம்ம குற்றாலீசுவரன் என்ற 12 வயசுப் பையன் சாதாரண சின்னப் பையன் நம்ம தலைமன்னாரிலிருந்து இலங்கைக்கு நீந்தியே போயிருக்கிறான். ஆனால் கடவுள் இராமனால் நீந்தக்கூட முடியவில்லை. கடவுளுக்கு நீந்தக்கூட தெரியாதா? *(கைதட்டல்)*

ராமன் கட்டிய பாலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூப்பாடு போடுகிறவர்களைப் பார்த்துக் கேட்கிறோம், ராமன், வானரப் படைகளுடன் இலங்கைக்குப் போய் இராவணனுடன் சண்டை போடுகிறான். ராமன் தம்பி இலட்சுமணன், அடிபட்டு காயமடைகிறான். உடனே காயத்துக்கு மருந்து போட, மருந்தைக் கொண்டுவர, அனுமார் தமிழ்நாட்டுக்கு திரும்புகிறான். நமக்கு ஏதாவது நோய்க்கு மருந்து வேண்டும் என்று மூலிகை வைத்தியர்களிடம் கேட்டால் - நம்ம வைத்தியர்கள் ஒரு பாட்டிலில் அரக்கு வைச்சு மருந்து தருவாங்க. ஆனா அனுமான், தமிழ்நாட்டுக்கு வந்து சஞ்சீவி மலையை அப்படியே தூக்கிட்டுப் போனான்னு, ராமாயணம் கூறுகிறது. சஞ்சீவி மலையிலிருந்து மூலிகையை எடுத்து லட்சுமணனுக்கு சிகிச்சை செய்ய, ஊட்டி மலை போல, சஞ்சீவி மலையையே அனுமார் தூக்கிட்டுப் போனாராம். நீங்ககூட படத்தில் பார்த்திருப்பீர்கள்.



அனுமார் மலையை தூக்கிக் கொண்டு பறப்பது போன்ற படத்தை, நமது 'ஏபிடி பார்சல்' சர்வீஸ் லாரிகளில் வரைந்து வைத்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். சஞ்சீவி மலையை அனுமார் தூக்கிக் கொண்டு போவார். அனுமாரையும், சஞ்சீவி மலையையும் சேர்த்து, நமது 'ஏபிடி பார்சல்' கொண்டு செல்லும் லாரியில் நம்ம ஊர் லாரி டிரைவர் ஏற்றிக் கொண்டு பறக்கிறார். *(சிரிப்பு, கைதட்டல்)*. நாங்கள் என்ன கேட்கிறோம் என்றால், தமிழ்நாட்டிலிருந்து, அனுமார் தூக்கிச் சென்ற சஞ்சீவி மலையை, திரும்பும்போது அனுமான் தமிழ்நாட்டுக்குக் கொணடு வந்து, தமிழ்நாட்டில் வைக்க வேண்டுமா, இல்லையா? ஏன் வைக்க வில்லை. இந்திய 'அமைதிப்படை' ஈழத்துக்குப் போய் புலிகளிடம் உதைப்பட்டு திரும்பி வந்ததுபோல், ராமன் சேனையும் திரும்பி வரும்போது, தமிழர்களின் சொத்தான, சஞ்சீவி மலையையும் திரும்பக் கொண்டு வரவேண்டுமல்லவா? அது தமிழர்களால் பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் அல்லவா? முதலில் பா.ஜ.க.வும், இந்து முன்னணிகளும், இலங்கைக்குப் போய், சஞ்சீவி மலையைத் திருப்பிக் கொண்டு வரட்டும். ஏன், சஞ்சீவி மலையைக் கேட்க மறுக்கிறாய்? இராமன் இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது கடலைக் கடப்பதற்கு, குரங்குகளுடன் சேர்ந்து கட்டிய பாலத்தை இராமனே அழித்துவிட்டானாம். எப்படி? ஒரு வில்லை எடுத்து விட்டானாம், பாலம் அழிந்து விட்டதாம். இது என்ன நம்ம சிங்காநல்லூர் பாலமா? கடலில் கட்டிய பாலம். அதை ஒரே வில்லால் அழிச்சுட முடியுங்களா? சரி அப்படியே இருக்கட்டும். பாலத்தை ராமனே அழிச்சுட்டான்ல. அவனே வேண்டாம்னு சொன்ன பாலத்துக்கு, நீ ஏன் கூப்பாடு போடுற?

இந்த இராமாயணம் திராவிடர்களாகிய நம்மை - தமிழர்களை அரக்கர்கள் என்று இழிவுபடுத்துகிறது. இந்த இழிவை நியாயப்படுத்தும் ஓணம் பண்டிகை கேரளாவில் கொண்டாடப்படுகிறது. அந்தப் பண்டிகை தினத்தன்று, சேலம் இரயில்வே கோட்டம் உரிமை கோரி நாம் முழு வேலை நிறுத்தம் அறிவித்தோம் என்பதற்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், ஓணம் பண்டிகையின்போது முழு அடைப்பு நடத்தலாமா? என்று கேட்கிறார்கள்.

பெரியாருடைய இராமாயணக் குறிப்புகள் நூல் இங்கே விற்கப்படுகிறது. இராமாயணப் பாத்திரங்கள் புத்தகம் இங்கே இருக்கிறது. திருவாரூர் தங்கராசு எழுதிய இராமாயணம் நாடகம் நூல் இங்கே இருக்கிறது. படித்துப் பாருங்கள். இராவணனுடைய சிறப்புக்கள் தெரியும். இராவணனை அழிப்பதற்கு தேவர்கள் எல்லாம் போய் விஷ்ணுவிடம் கேட்கிறார்களாம். உடனே விஷ்ணு சொல்றாராம், இராமனாக அவதாரம் எடுத்து வருகிறேன் என்று. அப்போது குரங்கு வந்ததாம். அந்தக் குரங்குகள் தேவர்களாம். ஊட்டி மலைக்கு மேலே போகும்போது பார்த்தீர்களேயானால் ஒரு குரங்கு அடிபட்டுன்னா, பக்கத்திலேயே ஒரு கோயில் கட்டிடுவான். புதைக்க மாட்டான். காரணம் அது தேவர்களாம். அதனால் அந்த குரங்கனுமார்க்கு கோயில் கட்டுகிறார்கள்.

இராவணன் பெண்களை மதித்தான். அந்த கதை, நம்ம சினிமாக் கதைதானுங்க. அன்றைக்கு டி.வி. இல்ல, அதனால ஒரே கதையை பல இலட்சம் வருசமா பேசிகிட்டு இருந்திருக்கிறார்கள். அதனால மக்கள் கிட்ட பதிஞ்சுப் போச்சு. இப்ப இருக்கிற மாதிரி ஏராளமான சேனல்கள் அப்போது இல்லை. இப்போ, ஒரு டி.வி.லே விளம்பரம் பண்றாங்க. சோதனை ஒளிபரப்பு, சோதனை ஒளிபரப்புன்னு 15 ஆம் தேதி வரைக்கும் அந்த டி.வி.க்கு சோதனை ஒளிபரப்பு. 15 ஆம் தேதிக்கு மேலே மக்களுக்கு சோதனை *(சிரிப்பு)*. இந்த டி.வி. அத்தனையும் அன்றைக்கு இல்லை. அதனாலே ஒரே கதையை தெருவுக்கு தெரு வீட்டுக்கு வீடு உடுக்கை அடிச்சுப் பாடினான். அதனால தான் நம்ம மக்கள் எல்லாம் யாராவது கதை சொன்னா, "சொந்த வருகையைச் சொல்றானா, இவன் இராமாயணத்தை ஆரம்பிச்சிட்டாம்பா" என்பார்கள். அந்த அளவுக்கு நம்ம மக்கள் இராமாயணத்தை புரிந்திருக்கிறார்கள். இராமாயணத்தை தமிழ்நாட்டில் ஏற்க மாட்டார்கள். சூலூர்ல இராமனுக்கு கோயில் இருக்கிறதா? கோயமுத்தூர்லே ஒரே ஒரு கோயில் இருக்கு. பார்ப்பான் இருக்கிற இராம் நகர்ல மட்டும் ஒரு மூலையில் வெச்சு இருக்கிறான். வேறு எங்கேயுமே கோயில் இருக்காது. காரணம் என்ன? வீடுகளில் இராமன் பட்டாபிஷேகம் படத்தை மாட்ட மாட்டார்கள். கல்யாணத்தில் வைக்க மாட்டார்கள் காரணம் என்ன? கல்யாணம் செய்துவிட்டு காட்டுக்குப் போக வேண்டியது வந்திடும் என்ற பயம். கல்யாண வீட்ல இராமர் படம் வைத்தால் காட்டுக்குப் போக வேண்டியது வந்துவிடும் என்று வைக்க மாட்டார்கள். திருமணத்தில் ராமன் சீதையைப் போல் வாழுங்கள் என்று வாழ்த்த முடியுமா? தமிழக மக்கள் இராமாயண கதையை ஏத்துக்கிறது இல்லை. *(தொடரும்)*

### லட்சுமணன் தொடங்கி வைத்த 'ஈவ்டீசிங்'

*சூர்ப்பனகை லட்சுமணன் மீது ஆசைப்பட்டாளாம். அதற்காக லட்சுமணன், சூர்ப்பனகையின் மூக்கையும், மார்பையும் அறுத்து விட்டானாம். இன்றைக்கு தமிழ் சினிமாவில்கூட என்ன நடக்கிறது? தளபதி, சின்ன தளபதிகள் எல்லாம் சினிமாவுக்கு வந்து விட்டார்கள். இந்த சினிமாவில்கூட, கதாநாயகர்கள் என்ன வசனம் பேசுகிறார்கள்? 'நீ ஒரு பெண் என்பதற்காகத் தான் பார்க்கிறேன், திரும்பிப் போய்விடு' என்று கதாநாயகன் வசனம் பேசுவார். வில்லனைப் புரட்டிப் புரட்டி போட்டு அடிக்கும் கதாநாயகன், பெண் என்றால், அடிக்க மாட்டார். ஆனால், கடவுள் அவதாரக் கதையான ராமாயணத்தில், சூர்ப்பனகையை ஒரு பெண் என்றும் பாராமல், மூக்கை அறுக்கிறான் லட்சுமணன். இது என்ன? 'ஈவ்டீசிங்', அந்த 'ஈவ் டீசிங்' தான், இவ்வளவு போராட்டத்துக்குமே காரணமாக இருந்திருக்கிறது. இராமாயண காலத்தில் - லட்சுமணன் தொடங்கி வைத்த 'ஈவ்டீசிங்' இன்று வரை ஒழிய மறுக்கிறது. ஒரு பெண் என்றும் பாராமல், மூக்கை, மார்பை அறுத்த லட்சுமணன், கடவுள் அவதாரமா? இவன் வணங்கத் தக்கவனா-*

**- கோவை இராமகிருட்டிணன் உரையிலிருந்து**

### வந்த மடல்

தமிழர்களின் 150 ஆண்டுகால கனவாகிய சேது கால்வாய் (தமிழன் கால்வாய்) திட்டப்பணிகள் இந்தியாவின் முதல் பிரதமர் நேரு அவர்களின் காலத்தில் துவங்குவதாக இருந்தது. சேது கால்வாயினால் இலங்கைக்கு வருவாய் பாதிக்கும் என சிங்கள தலைவர்கள் கேட்டுக் கொண்டதினால் சேது கால்வாய் திட்டத்தை நிறுத்திவிட்டார் நேரு. இப்போது சேது கால்வாய் திட்டப்பணிகள் முழு விச்சில் நடைபெறுகையில், இராமர் பாலம் என்ற பொய்யான கதைகளை கூறி தடை செய்துவிட்டனர், மதவாத சக்திகள். தமிழர்கள் எந்தத் துறையிலும் முன்னேறிவிடக் கூடாது என்பதில் வடநாட்டவர்கள் குறியாக உள்ளனர். ஆரிய திராவிடப் போர் என்பதைவிட ஆரிய தமிழினப் போர் என்றுதான் சொல்ல வேண்டும். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டில் இடம்பெற்றிருந்த 'வா, ராமா, வா' என்ற பகுதியை படிவம் எடுத்து மக்களின் பார்வைக்கு வைத்துள்ளேன், எங்களின் புத்தகக் கடை முன்பு. 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டைத் தொடர்ந்து படித்து வருகிறேன்.

**சோ. மு. சண்முகம், ஆத்தூர், சேலம்.**

# களப்பணியில் கழகச் செயல் வீரர்கள்

*தமிழகம் முழுதும் கழகச் செயல் வீரர்களின் களப்பணித் தொகுப்பு:*

### உடுமலை மடத்துக்குளம் பகுதிகளில்

தந்தை பெரியார் 129 ஆவது பிறந்த நாளையொட்டி உடுமலைப்பேட்டை, மடத்துகுளம் நகர ஒன்றியப் பகுதிகளில் கழகக் கொடியேற்று விழா கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. கருமலையப்பன் தலைமையில் 7.10.2007 ஞாயிறன்று நடைபெற்றது. காலை 10 மணிக்கு உடுமலைப்பேட்டை மத்திய பேருந்து நிலையம் எதிரில் ரமேஷ் கழகக் கொடியேற்றினார். தொடர்ந்து குமரலிங்கத்தில் பீட்டர், கொழுமத்தில் நாட்டுத்துரை, ருத்திரா பாளையத்தில் மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு. சிவானந்தம், மடத்துக்குளம் நால்ரோடு பகுதியில் ஜோத்தம்பட்டி மோகன், மடத்துக்குளம் பேருந்து நிலையத்தில் காமராஜ், கணியூரில் உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ. விசு, கடத்தூரில் கிளைக் கழக செயலாளர் அய்யப்பன், காரத் தொழுவில் இரா. மோகன், இந்திரா நகரில் காரத் தொழுவு கிளைச் செயலாளர் மயில்சாமி, சின்னவீரம் பட்டியில் கிளைத் தலைவர் சு.தமிழ்வேந்தன் ஆகியோர் கழகக் கொடியை ஏற்றி வைத்தனர். பெரியார் பிறந்த நாளை விளக்கி ஆங்காங்கே துண்டறிக்கை விநியோகம் செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் கழக களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந. பிரகாசு, உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், ஒன்றியப் பொருளாளர் சு. அரிதாசு, மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கதிரவன், சின்னவீரம்பட்டி கிளைச் செயலாளர் சிவக்குமார், ருத்திராபாளையம் மயில்ராசு உட்பட இருபதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடியில்

பெரியார் திராவிடர் கழகம் தஞ்சை சாதியொழிப்பு மாநாட்டு தீர்மானப்படி தேனீர் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு தனி குவளையில் தேனீர் வழங்கும் சாதி வெறியர்களின் இரட்டைக் குவளை ஒழிப்புக் கண்டன ஆர்ப்பாட்டம் தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தூத்துக்குடி 1-ஆம் கேட், காந்தி சிலையருகே 3.10.07 மாலை 6 மணியளவில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில், ஆழ்வை ஒன்றியச் செயலாளர் நாத்திகன் இ. சேதுராமசாமி முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை புரட்சிகர இளைஞர் முன்னணி பொறுப்பாளர் தமிழரசன் தொடங்கி வைத்தார். தூத்துக்குடி மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, ஆதித் தமிழர் பேரவை துணை பொதுச்செயலாளர் க. கண்ணன், தூத்துக்குடி மாவட்ட யெலாளர் ச.சா.பாலசுப்பிரமணியன், ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் ரா.வே. மனோகர் ஆகியோர் கண்டன உரைக்குப் பின் பெரியார் திராவிடர் கழக மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் பால்.பிரபாகரன் ஆர்ப்பாட்டத்தை விளக்கி உரையாற்றினார். ஆதி தமிழர் பேரவை இளைஞரணி செயலாளர் சு.க. சங்கர் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார். தூத்துக்குடி நகர இணைச் செயலாளர் செ. செல்லத்துரை நன்றி கூறினார்.




### பெரியார் படத்தின் மீது தார்பூசி அவமரியாதை: கழகம் ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி வடக்கு கோட்டையன் தோப்பில் தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பெரியார் படத்துடன் கூடிய அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு பலகையில் தினம் ஒரு பொன்மொழி எழுதப்பட்டு வந்தன. சேது கால்வாயை தடை செய்யும் நோக்கோடு இந்துத்துவா சக்திகள் செய்யும் பித்தலாட்டத்தையும், கலைஞரை விமர்சித்து தலைக்கு தங்கம் எனும் அறிவிப்பை வெளியிட்ட வேதாந்தியைக் கண்டித்தும் வாசகம் எழுதப்பட்டிருந்தது. 24.9.07 அன்று விசமிகள் அறிவிப்பு பலகையின் மீது உள்ள பெரியார் படத்தில் பெயிண்டை ஊற்றி சென்று விட்டனர். 25.9.07 காலையில் வழக்கம்போல் வாசகம் எழுத வந்த தோழர் இதனைக் கண்டு கழகப் பொறுப் பாளர்களுக்கு உடனடியாக தகவல் தந்தார். உடனடியாக மாவட்டச் செயலாளர் ச.கா.பாலசுப்பிரமணியன், தூத்துக் குடி நகரச் செயலாளர் பால். அறிவழகன், நகர இணைச் செயலாளர் செ. செல்லத்துரை, தலைவர் கோ.அ.குமார், துணைத் தலைவர் சா.த.பிரபாகரன், மாவட்டத் துணைச் செயலாளர் க. மதன், துணைத் தலைவர் வே. பால்ராசு, யாழ்வேந்தன், அறிவு பித்தன், விடுதலை சிறுத்தைகள் நகரச் செயலாளர் ஆறுமுக நயினார், தி.மு.க. முன்னாள் பஞ்சாயத்து தலைவர் பிலோமின்ராஜ், மைக்கல்ராஜ், கருப்பசாமி மற்றும் வடக்கு கோட்டையன் தோப்பு பொதுமக்கள், விடுதலைச் சிறுத்தைகள், தி.மு.க., பெரியார் தி.க. தோழர்கள் திரண்டனர். தார் பூசிய கயவர்களை கைது செய்ய வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் ச.கா.பாலசுப்பிர மணியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். இது குறித்து மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் தொலைபேசியில் காவல்துறை ஆய்வாளரை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இல்லையேல் தொடர் போராட்டங்கள் நடைபெறும் எனத் தெரிவித்தார். உறுதியாக நடவடிக்கை எடுப்போம் என காவல்துறை உறுதியளித்தனர். ஆனால் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. எனவே அனைத்துக் கட்சியினரையும் அழைத்து போராட்டம் நடத்த தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் தயாராகி வருகிறது.

### தோழர் வே. ஆனைமுத்து

தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தந்தை பெரியாரின் 129 ஆவது பிறந்த நாள் பொதுக் கூட்டம் தூத்துக்குடி புதுக்கோட்டையில் 25.9.07 மாலை 6.30 மணிக்கு நடை பெற்றது. கூட்டத்திற்கு தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, ச.கா. பாலசுப்பிர மணியன் வரவேற்புரையாற்றினார். தூத்துக்குடி மாவட்டத் துணைத் தலைவர் வே. பால்ராசு, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சி துணைப் பொதுச்செயலாளர் இரா. பச்சமலை, தி.மு.க. தலைமை கழகப் பேச்சாளர் புதுக்கோட்டை செல்வம், கவிஞர் தமிழேந்தி, ஆதித் தமிழர் பேரவை மாநில இளைஞரணி செயலாளர் சு.க. சங்கர் ஆகியோர் உரைக்குப்பின் பெரியார் திராவிடர் கழக மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன், சேது கால்வாய் திட்டத்திற்கு தடைபோடும் இந்துத்துவ சக்திகளை கண்டித்தும், தூத்துக்குடி வடக்கு கோட்டையன் தோப்பில் அறிவிப்பு பலகையிலுள்ள பெரியார் படத்தின் மீது தார் பூசிய கயவர்களை உடனடி யாக கைது செய்ய வலியுறுத்தியும் தவறும் பட்சத்தில் மாபெரும் போராட்டத்தை அரசு சந்திக்க வேண்டியது வரும் என எச்சரிக்கை விடுத்தார். இறுதியாக மார்க்சிய பெரியாரிய பொதுவுடமை கட்சி பொதுச்செயலாளர் வே. ஆனைமுத்து பெரியாரிய கொள்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். பெரியார் இயக்கம் இந்த மக்களுக்கு செய்த நன்மை என்ன? என தொடங்கி இராமன் பாலம் எனும் மோசடியையும் தோலுரித்தார். வகுப்புரிமையின் அவசியத்தையும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் தனது அறியாமையை விட்டொழித்து விட்டு பெரியார் காட்டிய வழியில் வரவேண்டும் என அழைப்பு விடுத்தார். இறுதியாக தூத்துக்குடி நகரத் தலைவர் கோ.அ.குமார் நன்றி கூறினார்.

### பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம்

ஆகஸ்டு 18 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 7 மணி அளவில் தூத்துக்குடி தாளமுத்து நகர் முதன்மைச் சாலையில் தூத்துக்குடி நகரக் கழகத்தின் சார்பில் பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நகரக் கழகத் தலைவர் கோ.அ.குமார் தலைமை வகித்தார். ஆழ்வார் திருநகரி ஒன்றியத் தலைவர் சேது ராமசாமி முன்னிலை வகித்தார். மாவட்டத் தலைவர் பொறியாளர் சி. அம்புரோசு, மாவட்டத் துணைத் தலைவர் வே. பால்ராசு, மாவட்டச் செயலாளர் பால சுப்பிரமணியன், ஆதித் தமிழர் பேரவைத் துணை பொதுச்செயலாளர் கண்ணன், ஆதித் தமிழர் பேரவை மாநில இளைஞரணி செயலாளர் சு.க. சங்கர் ஆகியோர் உரைக்குப்பின், கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் சிறப்புரையாற்றினார். தூத்துக்குடி நகரக் கழக துணைத் தலைவர் சா.த. பிரபாகரன், மாரீஸ்வரி தம்பதியருக்கு ஆண் மகவு பிறந்ததை முன்னிட்டு தோழர் பிரபாகரன் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். தோழர் பால். அறிவழகன் நன்றி கூறினார்.

### பெரம்பலூர் கிராமங்களில் தடைகளை தகர்த்து - கழகம் பிரச்சாரம்

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் தேனீர் கடைகளில் இரட்டைத் தம்ளர் முறையும், உண வகங்களில் கீழே அமர்ந்துதான் சாப்பிட வேண்டும், முக்கிய வீதிகளில் சைக்கிளில் செல்ல தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கு இன்றைக்கும் அனுமதி மறுக்கப்படு கிறது. காந்தி பிறந்த நாளில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்று அதிகாரிகள் உறுதி மொழி எடுத்துக் கொண்டாலும், அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு அதிகாரிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில் இரட்டை தம்ளர் முறை உள்ளது என்பதை ‘பெரியார் திராவிடர் கழகம்’ சார்பில் அங்கேயே சென்று ஆய்வு செய்து இரட்டை தம்ளர் உள்ள கடைகளையும், உணவு விடுதியில் நாற்காலியில் அமர்ந்து உணவருந்த மறுக்கப்படும் கடைகளின் பெயர்ப் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளித்து இவைகளை ஒழிப்பதற்கான பணியை தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று மனு அளித்தோம். மனுவை ஏற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் இரட்டை தம்ளர் ஒழிப்புப் பிரச்சாரப் பணியை மேற்கொள்ளும் இவர்களுக்கு பலத்த பாதுகாப்பு தருமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டார். அதன்பேரில், “அதி விரைவு படை” காவலர்கள் பாதுகாப்பு நல்கினர்.

சித்தளி பேரளி, மருவத்தூர் ஆகிய கிராமங்களுக்கு இரட்டை தம்ளர் முறையை ஒழிப்போம், உடைப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய பேனரோடு மூன்று கிராமங்களிலும் இனிவரும் காலங்களில் இரட்டை தம்ளர் முறையை பின்பற்றினால், பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ஆதாரபூர்வமாக வன்கொடுமை பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய மனு அளிப்போம் என்று பிரச்சாரம் செய்தனர். தலைமை - இரா. இலட்சுமணன், மாவட்ட அமைப்பாளர். பங்கேற்றோர் : சி.பி.ஐ.எம். பொதுக்குழு உறுப்பினர் செல்லதுரை மற்றும் பெரியார் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன், பிரம்மதேசம் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.என்.ஆர். சீனிவாசன், கந்தானத்துரை, முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பேரளி

பேரளி கிராமத்தில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தெருக்களில் சைக்கிளில் செல்ல தலித் மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதைக் கண்டித்து அனைத்திந்திய மாதர் சங்கத் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சுபாஷினி அலி, தலித் மக்களை சைக்கிளில் செல்ல வைப்போம் என்று போராட பேரளி கிராமத்திற்கு சென்றபோது அவ்வூர் சாதி வெறியர்களான உடையார் சமூகத்தினர் மாட்டு வண்டியை குறுக்கே நிறுத்தி தடை ஏற்படுத்தினர். மேலும் அவ்வூரி லுள்ள ஆண்களும், பெண்களும் நூற்றுக்கணக்கானோர் திரண்டு அரிவாள், கம்பு, மிளகாய் பொடியை தூவு வதற்கும் தயாராய் நின்றனர். இதை அறிந்த மாவட்ட எஸ்.பி. ஐநூறுக்கும் மேற்பட்ட காவலர்களை வரவழைத்து பேச்சு வார்த்தை நடத்தியும் மாநிலங்களவை உறுப்பினரை குறிப்பிட்ட எல்லைக்கு மேல் அனுமதிக்கப்படவில்லை. பிறகு ஒதுக்குப்புறமான வீதியில் சைக்கிளில் செல்ல வைத்தனர். இதே ஊரில் காந்தி பிறந்த நாளான அக்.2 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் இரவு 8 மணிக்கு பிரச்சாரம் ஆரம்பித்து, எவ்வித எதிர்ப்பு மின்றி இரண்டு மணி நேரம் நடைபெற்றது. சிலருக்கு அதிர்ச்சியாகவும், சிலருக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது.

### மருவத்தூர்

மருவத்தூர் கிராமத்தில் இரட்டை தம்ளர் முறை இல்லை என்றாலும், முக்கிய தெருக்களில் சைக்கிளில் செல்லத் தடை, நிழற்குடை மற்றும் பாலக்கட்டைகளில் அமரவும், உணவகங்களில் நாற்காலியில் அமர்ந்து சாப்பிட வும் தடை. மேலும் தலித் மக்களின் பயன்பாட்டிலிருந்த குளத்தை அபகரித்து கொண்டனர். அடிக்கடி சாதி சண்டைகள் நடக்கும் கிராமமாக இருந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொடி கம்பம் 3 முறை வெட்டி சாய்க்கப்பட்டது. திருமாவளவன் அவ்வூரில் கொடியேற்றி வைத்ததையும் அகற்றி விட்டனர். இப்படியெல்லாம் இருக்கும் மருவத்தூர் கிராமத்தில் சற்று பயத்தோடும் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் நமது தோழர்களும், காவல்துறையினரும் இருந்த போதிலும் அவ்வூரில் பிரச்சாரம் இரண்டு மணி நேரம் நடைபெற்றது. *

# ஈரோடு, சேலம் மாவட்டங்களில் எழுச்சியுடன் பெரியார் விழா

ஈரோடு மாவட்டத்தில் செப்டம்பர் 17-ல் பல்வேறு பகுதிகளில் தந்தை பெரியாரின் 129 ஆவது பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெற்றன.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறைச் சென்ற அர்ச்சுனனின் சொந்த ஊரான கூதாம்பி என்னும் குக்கிராமத்தில் கழகக் கொடியேற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன. 30-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள் பின்தொடர அய்யா படம் அலங்கரித்து வைக்கப்பட்ட வேனுடன் ஊர்வலம் அங்கிருந்து தொடங்கியது.



ஈரோடு மாவாட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையிலும் பெரியார் பகுத்தறிவாளர் கழக அமைப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் சோமசுந்தரம், கீழ்வாணி சுந்தரம், மாவட்டத் துணைதலைவர் வேலுச்சாமி, மாநில நிதிக்குழு உறுப்பினர் பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையிலும் புறப்பட்ட வாகன ஊர்வலம், சிறுவலூர், கொளப்பளூர், அம்மன் கோவில் பகுதி, கும்மிக்கருக்கு, வேட்டைக்காரன் கோயில், மொடச்சூர் ஆகிய இடங்களில் கழகக் கொடியை ஏற்றி வைத்தும், இனிப்புகள் வழங்கியும், ‘சிந்தனைக்கும் சில துளிகள்’ என்ற துண்டறிக்கைகளை ஆயிரக்கணக்கில் பொது மக்களுக்கு வழங்கியும் சிறப்பித்தனர்.

கோபி நகரில் ஊர்வலம் நுழைந்ததும் கடும் காற்றுடன் கனத்த மழை பெய்தது. தோழர்கள் அனைவரும் மழையில் நனைந்து கொண்டே ஊர்வலத்தை தொடர்ந்து மேற்கொண்டு, கொடியேற்று விழாக்களை நடத்தினர். கொடியேற்றிய இடங்களில் எல்லாம் கொள்கை உரைவீச்சுகள் தொடர்ந்தன.

குமாரபாளையம் குமரனின் “சமர்பா” குழுவினர் ஊர்வலத்தில் கலந்து கொண்டு எழுச்சிப் பாக்களை இசைத்தனர்.

கோபி நகரத்தில் பல பகுதிகள், ல.கள்ளிப்பட்டி, சோதி நகர், கரட்டடிபாளையம் உள்ளிட்ட மொத்தம் 35 இடங்களில் கழகத்தின் புதிய கொடியேற்றப்பட்டன. நிறைவாக தாசம்பாளையத்தில் கொடியேற்றத்துடன் வாகன ஊர்வலம் முடிவு பெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தோழர்களுக்கு பெ. தங்கசாமியின் இல்லத்தில் சிறப்பான புலால் விருந்து அளிக்கப்பட்டது.

விழாவில் ஈரோடு மாவட்ட அமைப்பாளர்கள் சதுமுகை பழனிச்சாமி, வீ. இரகுநாதன், மாவட்ட இளைஞரணித் தலைவர் ந. தாமோதரன், இணைச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார், பகுத்தறிவாளர் கழக நிர்வாகிகள் தண்டபாணி, நேதா ஆசைத்தம்பி, நிவாசு கோபி நகரத் தலைவர் செ. நாகப்பன், அமைப்பாளர் குணசேகரன், செயராமன், ஈசுவரமூர்த்தி, கூல் சிட்டி செகநாதன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் அளுக்குளி, கூடக்கரை, கிளாகுளம், எலத்தூர், கூதாம்பி, கொளப்பளூர், அருவங்கொரை, சிறுவலூர், காசிபாளையம், புதுரோடு, கெம்மநாயக்கன் பாளையம் ஆகிய கிளைகளிலிருந்தும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**ஈரோட்டில்**

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகில் உள்ள பெரியார் சிலைக்கு கழக மாவட்ட அமைப்பாளர் குமரகுருபரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது.

தமிழக அரசு சார்பில் ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணா நினைவு இல்லத்தில் பெரியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பெரியார் படத்துக்கு தமிழக கைத்தறித்துறை அமைச்சர் என்.கே.கே.பி. ராஜா மலர் தூவி மரியாதை செலுத்தினார். பெரியார் சிலைக்கு மாலையும் அணிவித்தார். மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பெரியார் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அ.தி.மு.க. சார்பில் நகர அ.தி.மு.க. செயலாளர் மார்க்கெட் ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்டச் செயலாளர் பெரியசாமி, ஈரோடு மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாவட்டத் தலைவரும், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி, பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் மாநிலப் பொதுச்செயலாளர் சென்னியப்பன், தலித் மக்கள் உரிமைக்கழகம் சார்பில் சக்திவேல், அம்பேத்கர் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அதன் துணைச் செயலாளர் அருண்பெருமாள் ஆகியோர் தத்தமது ஏராளமான பொறுப்பாளர்களுடன் ஊர்வலமாக வந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பித்தனர்.

ஈரோட்டில் கழகம் சார்பில் வாகனத்தில் அய்யா படம் அலங்கரித்து, இரு சக்கர வாகனங்களின் அணி வகுப்பாக நகர் முழுதும் எடுத்துச் செல்லப்பட்டது. ஒலி பெருக்கி மூலம் கொள்கைப் பாடல்கள் ஒலிக்கப்பட்டன. கழகக் கம்பங்களில் புதிய கொடிகள் ஏற்றப்பட்டன. அனைத்து இடங்களிலும் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கிக் கொண்டாடப்பட்டது. குமரகுரு, முருகானந்தம், சங்கர், சிவா, இரா. சுப்பிரமணி, மாது, லெமூரியன், சண்முகம், முருகேசன், விமல்குமார் உள்ளிட்ட தோழர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**தாராபுரம் -** குமார் தலைமையில் கழகக் கொடியேற்றிவைத்து நகர் முழுவதும் இனிப்புகள் வழங்கி விழா கொண்டாடப்பட்டது.

**காங்கயம் -** பாண்டியன் தலைமையில் அய்யாவுக்கு விழா எடுக்கப்பட்டது.

**கிளாகுளம், சேவூரில்** செந்தில்குமார் தலைமையில் கழகக் கொடியேற்றப்பட்டு, பள்ளிகளில் இனிப்பு மற்றும் எழுதுபொருள்கள் வழங்கப்பட்டன.

**கூடக்கரை, எலத்தூர், நம்பியூர்** ஆகிய ஊர்களில் அருளானந்தம், கலைச்செல்வன், செல்வக்குமார், அழகிரி முன்னிலையில் அய்யா விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**சத்தியமங்கலம், கெம்மநாயக்கன் பாளையம் சதுமுகையில்** மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிசாமி, மூர்த்தி முன்னிலையில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் கழகக் கொடியேற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.

**புதுரோட்டில்** சிதம்பரம் தலைமையில் சிறப்பாகக் கொடியேற்றம், இனிப்பு வழங்கும் நிகழ்ச்சிகளுடன் விழா நடைபெற்றது.

**காசிபாளையத்தில்** பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகம் சார்பில் பவானி டெக்ஸ்டைல்ஸ் ஆலை அருகில் மிகச் சிறப்பாக அய்யா விழா கொண்டாடப்பட்டது. கழகப் பேச்சாளர் வேலுசாமி, நிர்வாகிகள் கருப்பண்ணன், செயக்குமார், செல்வன் உள்ளிட்டோர் திரளாகப் பங்கு பெற்றனர்.

**குருவரெட்டியூரில்** மாவட்டத் தலைவர் நாத்திகசோதி தலைமையில் இனிப்புகள் வழங்கி, கொடியேற்றப்பட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

**கவுந்தபாடி** மதியழகன் தலைமையில் கொடியேற்றப்பட்டு விழா நடைபெற்றது.

**தொகுப்பு : “தமிழ்த்தேனி”**

## சேலம் மாவட்டத்தில்

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்த நாள் விழா 17.9.07 காலை முதல் மாலை வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கொடியேற்றம், இரு சக்கர வாகன ஊர்வலம், குடும்ப விருந்து என சிறப்பாக கொண்டாடப்பட்டது. சேலம் மாவட்டத்தில் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஏற்காடு ஒன்றியத்தில் பெருமாள் தலைமையிலும், கொளத்தூர் ஒன்றியத்தில் ஒன்றியத் தலைவர் சூரியகுமார் தலைமையிலும், மேட்டூர் சுற்றுவட்டார பகுதிகளை ஒருங்கிணைத்து களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி சீ. அன்பு தலைமை யிலும், மாவட்டம் முழுவதும் உள்ள மற்ற பகுதிகளை ஒருங்கிணைத்து மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் தலைமையிலும் தனித்தனியாக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பெரியார் பிறந்த நாள் சிறக்க மாவட்டம் முழுவதும் பல வண்ண சுவரொட்டிகளும், ஆயிரக்கணக்கான துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

### மேச்சேரி

17.9.07 காலை 7 மணிக்கு மேச்சேரி பேருந்து நிலையம் அருகிலுள்ள கொடிக் கம்பத்தில் மேச்சேரி பகுதி பொறுப்பாளர் இளஞ்செழியன் கழக கொடியினை ஏற்றினார். சேலம் மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் டைகர் பாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேச்சேரி பகுதி தோழர்கள் கிருட்டிண மூர்த்தி, கார்த்தி, பிரபு, சுந்தரம், தங்கராசு ஆகிய தோழர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

### மல்லியகுந்தம்

மேச்சேரி ஒன்றியம் மல்லியகுந்தம் பேருந்து நிலையம் அருகில் உள்ள கொடிக்கம்பத்தில் கழகத் தோழர் மல்லியகுந்தம் மாரிமுத்து கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் டைகர் பாலன் மற்றும் மேச்சேரி பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர். காலை முதல் இயக்கப் பாடல்கள் உரைவீச்சு ஆகியவைகள் ஒலிபரப்பப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாரிமுத்து சிறப்பாக செய்து இருந்தார். பொது மக்களுக்கு இனிப்புகளும், துண்டறிக்கைகளும் வழங்கப்பட்டன.

### பாரப்பட்டி

சேலம் மாவட்டம் ஓமலூர் ஒன்றியம் பாரப்பட்டியில் பெரியார் பிறந்த நாள் விழா 17.9.07 காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் சிறப்பாக கொண்டாடப் பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் டைகர்பாலன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் கழகக் கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றினார். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (பாரப்பட்டி பகுதி தோழர்கள் 20 பேர் கடந்த மாதம் திராவிடர் கழகத்திலிருந்து விலகி பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது). இப்பகுதி தோழர்களுக்கு பெரியார் திராவிடர் கழகத்தின் தனித்தன்மை பற்றி பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி விளக்கி உரையாற்றினார். கொடியேற்று விழா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிந்தாமணியூர் ரவி தலைமையில், பாரப்பட்டி பகுதி தோழர்கள் முருகேசன், அழகிரி, அமர், இளங்கோ, ராமு, முனுசாமி, தமிழ்மணி, முரளி, சுரேசு உட்பட அனைத்து தோழர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

### செம்மாண்டம்பட்டி

சேலம் மாவட்டம் ஓமலூர் ஒன்றியம் செம்மாண் டம்பட்டியில் பெரியார் பிறந்த நாள் விழா 179.07 காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கழகக் கொடியினை சின்னதுரை ஏற்றி வைத்தார். மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் டைகர் பாலன் ஆகியோருடன் மேச் சேரி பகுதி தோழர்கள் தனி தனி வாகனத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தோழர்களுக்கு சிந்தாமணியர் ரவி காலை சிற்றுண்டி வழங்கி சிறப்பித்தார்.

17.9.07 காலை 10 மணிக்கு சேலம் மாநகரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் கழக கொடியினை ஏற்றி வைத்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். மாவட்ட செயலாளர் டைகர் பாலன், மாநகர அமைப்பாளர் பாலு, விசு, அம்மாபேட்டை செந்தில், கோபி, ஜங்சன் பகுதி தங்கராசு, ராபர்ட், தாதகப்பட்டி இராஜசேகர், மணியரசன், கதிரேசன், ஆசைத்தம்பி, சிவக்குமார், டேவிட், செந்தில், எளம்பிள்ளை பகுதி சரவணன்,

6 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# மேட்டூரைக் குலுக்கிய வாகனப் பேரணி

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாப்பாபட்டி சவுந்திரராசன், சதீஷ், குட்டி, சவுந்தர், முருகேசன், மணிமாறன், கருப்பூர் சக்திவேல் என தோழர்கள் திரளாக 20க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களில் கலந்து கொண்டனர். மாநகர அமைப்பாளர் பாலு தனது மாருதி மினி வண்டியை சுற்றிலும் பெரியாரின் பல்வேறு கோணங்களிலான படங்களை கட்டிக் கொண்டு கொடியேற்ற விழா ஊர்வலத்தில் கலந்து கொண்டது சிறப்பாக இருந்தது.

### சேலம் மாநகரம்

பெரியார் சிலை மாலை அணிவிப்புக்குப் பின் சேலம் மாநகரத்திலுள்ள கொடிக் கம்பங்களில் பகுதிவாரியாக தோழர்கள் இரு சக்கர வாகனம் மற்றும் மகிழுந்துகளில் ஊர்வலமாக சென்று கொடி ஏற்றினர். சேலம் அம்மாபேட்டையில் செந்தில், பென்சன் வேலு தெருவில் டேவிட், அருணாசலம் தெருவில் காமராஜ், தாதகாபட்டி பில்லு கடையில் தங்கராசு, தாதகாப்பட்டி பெரியார் படிப்பகத்தில் ஓமலூர் சக்திவேல், தாதகா பட்டி கேட்டில் சந்திரன், அன்னதானப்பட்டியில் கதிரேசன், உத்திரப்பன் நகரில் நிறுவப் பட்டிருந்த பெரியார் பொன்மொழிப் பலகையை மாவட்டத் தலைவர் முல்லை வேந்தன் திறந்து வைத்தனர். இந்த பொன் மொழிப் பலகை தி.மு.க. பகுதி பொறுப் பாளர் செந்தூர் கார்த்தி அன்பளிப்பாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### இரும்பாலை

சேலம் மாநகரத்தில் கொடியேற்று விழாவை முடித்து இரு சக்கர வாகனத்தில் மதியம் 1 மணிக்கு இரும்பாலை சென்றடைந்தனர். இரும்பாலை மோகன் நகர் நுழைவு வாயில் அருகிலுள்ள கொடிக் கம்பத்தில் கழகக் கொடியினை இரும்பாலை பழனிசாமி ஏற்றனிார்.

### கே.ஆர்.தோப்பூர்

அடுத்ததாக தோழர்கள் கே.ஆர். தோப்பூர் சென்றடைந்தனர். கண்ணன் பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

### பவளத்தானூர்

மதியம் 2 மணிக்கு இரு சக்கர வாகன ஊர்வலம் தாரமங்கலம் அருகிலுள்ள பவளத்தானுரை சென்றடைந்தது. அங்கு தோழர்கள் தனசேகர், சரவணன், மாரியப்பன் ஆகியோர் காலை முதலே பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து ஒலி பெருக்கி மூலம் பகுத்தறிவு பாடல்களை, உரைவீச்சுகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தனர். தாரமங்கலம் ஒன்றிய பொறுப்பாளர் சரவணன் கழகக் கொடியினை ஒலி முழக்கங்களிடையே ஏற்றி வைத்தார். ஊர்வலத்தில் அனைவருக்கும் குளிர்பானம் வழங்கினர். பொது மக்களுக்கு இனிப்புகளுடன் ஏராளமான துண்டறிக்கைகளும் வழங்கப்பட்டன.

### எளம்பிள்ளை

மதியம் 3 மணிக்கு தோழர்கள் எளம் பிள்ளை நோக்கி பயணித்தனர். எளம் பிள்ளை பகுதி முத்துமாணிக்கம் தலைமையில், ஊர்வல தோழர்களை 15-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் எளம் பிள்ளை நகர எல்லையில் வரவேற்றனர். நல்லனம்பட்டியில் கோகுலக்கண்ணன் கொடியேற்றி புதிய பொன்மொழிப் பலகை திறந்து வைத்தார். பெத்தாம்பட்டியில் பெரியார் பெருந் தொண்டர் ஊஞ்சக்காடு செழியன் கழகக் கொடியை ஏற்றி வைத்து, புதிய பொன்மொழிப் பலகை திறந்து வைத்தார். முருங்கப்பட்டியில் கோவிந்தராசு கழகக் கொடியை ஏற்றி வைத்து பொன் மொழிப் பலகை திறைந்து வைத்தார். லகுவம்பட்டியில் சிவக்குமாரும், பாப்பாபட்டியில் முத்து மாணிக்கமும் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர். எளம்பிள்ளையில் கடுமையான மழையினையும் பொருட்படுத்தாது தோழர்கள் அனைவரும் நனைந்து கொண்டே ஊர்வலமாக இருசக்கர வாகனத்தில் சென்று நிகழ்ச்சிகளை நடத்தினர். மாலை 4 மணிக்கு தோழர்கள் அனைவருக்கும் முத்துமாணிக்கம் இல்லத்தில் பிரியாணி உணவு அளிக்கப்பட்டது. மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் டைகர் பாலன் ஆகியோருடன் மேச்சேரி முதல் எளம்பிள்ளை வரை இரு சக்கர வாகன ஊர்வலம், கொடியேற்று விழாவில் கலந்து கொண்ட அனைத்து பகுதி தோழர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு, சிறப்பு உணவளித்து சிறப்பித்த எளம் பிள்ளை தோழர்களுக்கு நன்றி கூறி நிகழ்ச்சி நிறைவு செய்யப்பட்டது.



### மகுடஞ்சாவடி

மகுடஞ்சாவடி ஒன்றிய பேருந்து நிலையத்தில் சண்முகம், ஊஞ்சக்காட்டில் பெரியார் பெருந்தொண்டர் செழியன் ஆகியோர் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

### கங்காணிப்பட்டி

தாரமங்கலம் ஒன்றியம் கங்காணிப் பட்டியில் புதியதாக இயக்கத்தில் சேர கல்லூரி மாணவர்கள் உட்பட இளைஞர்கள் விருப்பம் தெரிவித்து மாவட்ட தலைவர் முல்லைவேந்தனை சந்தித்தனர். அவர்களுக்கு பெரியார் பிறந்த நாள் விழா சம்பந்தமான செய்திகளை தெரிவித்து துண்டறிக்கை, ஒலி நாடாக்கள், பெரியார் சுவரொட்டி வழங்கப்பட்டது. அதை கங்காணிப்பட்டி கிருட்டிணன், செல்வராசு உள்பட மற்ற தோழர்களும் மாவட்டக் கழகம் சார்பாக வெளியிட்ட சுவரொட்டிகளை அலங்கரித்து ஒலிப்பெருக்கி அமைத்து கழகச் செய்திகளை பொது மக்களுக்கு ஒலிபரப்பினர். மேலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தனர். மாலை 6 மணிக்கு மாவட்ட பொறுப்பாளர்கள் கங்காணிப் பட்டிக்கு சென்று தோழர்களை சந்தித்தனர். அங்கு தோழர்கள் அனைவரும் அடுத்த ஆண்டு கொடியேற்றத்துடன் பெரியார் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண் டாடுவதாக உறுதியளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**செய்தி தொகுப்பு : முல்லைவேந்தன்**

# பன்னீர்செல்வம் திரட்டிய ஆதாரங்கள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது? ஆதாரம் காட்ட முடியுமா?" என்று கேட்ட காவல்துறைக்கு, இதோ ஆதாரங்கள் என்று பதிலளித்துள்ளார். படங்களை வெளியிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு - அந்த செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது."

'செல் கேமிரா'க்கள் இளைஞர்களின் நவீன நாகரீகத்துக்கான அடையாளங்கள் மட்டுமல்ல. சில நேரங்களில் சமூக சீர்கேடுகளுக்கு எதிரான ஆயுதமாகவும் பயன்படுகிறது. தகவல் தொழில்நுட்பப் பிரிவில் படிக்கும் மாணவர்கள் இந்த காமிராக்களைப் பயன்படுத்தி, குறும்படம் தயாரிக்கிறார்கள் என்றால், என்.பன்னீர் செல்வம், கிராமங்களில் நிலவும், தீண்டாமைக்கு எதிராக, இந்த 'செல் கேமிராவை'ப் பயன்படுத்தியிருக்கிறார்.

சட்டக் கல்லூரியில் இரண்டாவது ஆண்டு படிக்கும் பன்னீர்செல்வம், கடந்த 3 மாதங்களில் தமிழ்நாடு முழுதும் 300 கிராமங்களில் வலம் வந்து, தலித் மக்களுக்கு எதிரான பல்வேறு வடிவங்களிலான தீண்டாமைகளை, தனது கையடக்க கேமிராவுக்குள் பதிவு செய்துள்ளார். சாதி இந்துக்கள் கண்ணெதிரே, தலித் மக்கள் செருப்பு போட்டு நடக்கக் கூடாது. சைக்கிளில் போகக் கூடாது. பல கிராமங்களில் இவர்கள் முடி வெட்டிக் கொள்வதற்கு, வெகுதூரம் போக வேண்டியிருக்கிறது. உள்ளூர் முடிதிருத்தும் கடைகளில் அவர்களுக்கு முடிவெட்டப்படுவதில்லை. இவர்களுக்கு தனியாக சுடுகாடுகள், தேனீர்க்கடைகளில் தனிக் குவளைகள் என்று பட்டியலிடுகிறார் பன்னீர்செல்வம். செல்பேசியில் பேசிக் கொண்டிருப்பது போல் நடித்து, இந்தத் தீண்டாமைகளை அவர் படம் பிடித்துள்ளார். "எனக்குத் தெரியும், இது மிக ஆபத்தான வேலை. என்னைக் கண்டுபிடித்துவிட்டால், சாதி வெறியர்கள் என்னை அடித்தே கொன்று விடுவார்கள். இந்த ஆபத்துகள் எனக்குத் தெரியும். ஆனாலும், தீண்டாமை ஒழிப்பில் எனக்குள் இருந்த ஆவேசமும், உறுதியும், என்னை இதில் ஈடுபட வைத்தது. வழக்கு தொடர வேண்டுமானால், உறுதியான ஆதாரங்கள் வேண்டும் என்று காவல்துறையினர் கேட்கிறார்கள். இதோ ஆதாரங்களை, எனது காமிராவுக்குள் திரட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்" என்கிறார். கே320 வகையிலான 'சோனி எரிக்கன்' கோமிராவை அவர் பயன்படுத்தியுள்ளார். படங்கள் எடுத்து முடித்தவுடன், அருகிலுள்ள கணினி மய்யங்களுக்குச் சென்று அந்தப் படங்களை கணினிக்கு மாற்றி, குறுந்தகட்டில் பதிவு செய்துள்ளார். அண்மையில் கோவை மதுக்கரை அருகேயுள்ள திருமலையம்பாளையம் பகுதியிலுள்ள அஞ்சல் நிலையத்துக்குள் தலித் மக்கள், அனுமதிக்கப்படாததை இவர் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து, அந்தப் பெண் அஞ்சலக அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். தொண்டா முத்தூர் ஒன்றியத்தில் வெள்ளிமலைப் பட்டினம், ஜகீர்நாயக்கன்பாளையம் ஆகிய ஊர்களில், தேனீர்க் கடைகளில் இரட்டை தம்ளர் முறை இருப்பதை அவர் படம் பிடித்தார், பிறகுதான் காவல்துறையே ஒப்புக் கொண்டு, 11 வயது தலித் சிறுவன் தந்த புகாரின் அடிப்படையில் காவல்துறை வழக்கு பதிவு செய்தது" என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு எழுதியுள்ளது.

### செய்தி எதிரொலி

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு கழகத் தோழர் பன்னீர்செல்வம் எடுத்த படங்களையும், செய்தியையும் வெளியிட்டதைத் தொடர்ந்து, அந்தந்த ஊர்களுக்கு விரைந்து காவல்துறை நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது என்ற செய்திகள் கிடைத்துள்ளன. தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் உள்ள கரடிமலை, நரசிங்கபுரம், வெள்ளிடைமலை ஆகிய ஊர்களில், இரட்டைக் குவளை இருந்த 15 தேனீர்க் கடைகளை காவல்துறையினர் மூடி விட்டனர். வெள்ளரிக்கம் பாளையம் கிராமத்தில், இரட்டை தம்ளர் வைத்திருந்த நான்கு தேனீர்க் கடை உரிமையாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளதோடு, 15 பேர் மீது விசாரணை நடக்கிறது. இரண்டு பேர் தலைமறைவாகி விட்டனர். இதே ஒன்றியத்தில் - தலித் மக்களுக்கு முடிவெட்ட மறுக்கும் தோளம்பாளையம் கிராமத்திலுள்ள முடிவெட்டும் நிலையம் முன், போராட்டம் நடத்த கழகம் தயாராகி வருகிறது. பெரியார் திராவிடர் கழகம் தொடங்கி வைத்த தீண்டாமை எதிர்ப்புப் போராட்டம் வெற்றிகளை குவித்து வருகிறது.

தீண்டாமைக்கு எதிரான பெரியார் திராவிடர் கழகத்தின் சாதி எதிர்ப்புப் போராட்டத்தை பல நூறு பன்னீர் செல்வங்கள் உறுதியாக முன்னெடுப்பார்கள். இவர்கள் பெரியாரின் லட்சியப் போராளிகள்.


**- நமது செய்தியாளர்**

*('குமுதம் ரிப்போர்ட்டர்' இதழும் (அக்.10) இதே போன்று - தோழர் பன்னீர்செல்வம் பற்றி கட்டுரை வெளியிட்டுள்ளது.)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 18th October 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 அக்டோபர் 25, 2007 புரட்சி 5 முழக்கம் 43 விலை : ரூ.2.50


## டெல்லி செங்கோட்டை மீது நடந்த தாக்குதல்

# ‘ரா’ சதி அம்பலமாகிறது

*டெல்லி செங்கோட்டை மீது 2002 ஆம் ஆண்டு தாக்குதல் நடந்தது. இதில் முகம்மது ஆரிப் என்ற பாகிஸ்தான் நாட்டுக்காரருக்கு டெல்லி உயர்நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்துள்ளது. உண்மையில் ஆரிப் - ‘ரா’ உளவு நிறுவனத்துக்காக பாகிஸ்தானில் செயல் பட்டவர். டெல்லி வந்த அவர், ‘ரா’ உளவு நிறுவன அதிகாரியின் வீட்டில் தங்கியிருந்தார். செங்கோட்டை யில் தாக்குதல் நடப்பதற்கு முன்பு - சிறப்புப் பிரிவு போலீசார் முகம்மது ஆரிப்புடன் தொடர்பில் இருந்தனர் என்ற திடுக்கிடும் தகவல்களை ‘டெகல்கா’ வார ஏடு (அக்.13) புலனாய்வு செய்து அம்பலப்படுத்தியுள்ளது.*

டெகல்கா வெளியிட்டுள்ள செய்தி விவரம்:

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி டெல்லி செங்கோட்டையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. லஷ்கர்-இ-தொய்பா என்ற அமைப்புதான் இத்தாக்குதலை நடத்தியதாக போலீசார் கூறினர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஆரிப் என்பவரும் அபு சமல் என்பவரும் இச்சம்பவத்திற்காக கைது செய்யப் பட்டனர். இவ்விருவரில் அபு சமல் என்பவரை டெல்லி ஸ்பெஷல் செல் போலீசார் ‘என்கவுண்டர்’ மூலம் கொன்று விட்டனர்.

முகம்மது ஆரிப் மீது நடத்தப்பட்ட விசாரணைகள் நியாயமாக நடத்தப்படவில்லை என்பதையும், அதில் என்னென்ன முறைகேடுகள் நடந்துள்ளன என்பதையும் டெகல்கா சுட்டிக் காட்டியுள்ளது.

1. முகம்மது ஆரிப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். இந்திய அரசுக்கான ‘ரா’ உளவுத் துறையுடன் தனக்குத் தொடர்பு இருந்ததாகவும் அவர்கள் மூலமாக தான் இந்தியாவுக்கு வந்ததாகவும் கூறியுள்ளார்.
2. சஞ்சீவ் குப்தா என்பவர் முகம்மது ஆரிபை இந்தியாவில் நெயின்சிங் என்பவரின் வீட்டில் தங்கிக் கொள்ளும்படி சொல்லி அனுப்பியுள்ளார். இந்த நெயின்சிங் ‘ரா’ அமைப்பில் பணிபுரிபவர் உளவு அதிகாரி வீட்டில் தங்கும்படி ஆரிபை ஏன் அனுப்பி வைக்க வேண்டும் என்ற கேள்விக்கு போலீசார் பதிலளிக்க முடியவில்லை.
3. ‘ரா’ உளவுத் துறை அதிகாரி நெயின்சிங் நீதி மன்றத்தில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. இவரை அரசு சாட்சி என்று ஸ்பெஷல் செல் போலீசார் கூறினர். ஆனால், டெல்லி உயர்நீதிமன்றம் - ‘அரசாங்கத்தின் உளவுத் துறையில் பணிபுரியும் ஒருவர் (நெயின் சிங்) நிச்சயமாக அரசு சாட்சியாக செயல்பட முடியாது என்றும், உளவுத் துறையில் பணியாற்றும் ஒருவருக்கு தன் வீட்டில் குடியமர்த்தப்பட்ட நபர் (ஆரிப்) அன்னிய நாட்டினர் என்பதோ அவர் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு வந்துள்ளார் என்பதோ தெரியாது என்பதை எப்படி ஏற்க முடியும்’ என்றும் காவல் துறையைக் கடுமையாகச் சாடியுள்ளது.
4. ஸ்பெஷல் செல் ஆய்வாளர்கள் ஆர்.எஸ்.பாஷின் மற்றும் வேத பிரகாஷ் என்ற இருவரையும் ‘ரா’ அதிகாரி நெயின் சிங் முகம்மது ஆரிபுக்கு அறிமுகப்படுத்தி யுள்ளார்.

   எனவே ஸ்பெஷல் செல் போலீசாருடன் தொடர்பு கொண்ட ஒரு நபர் (ஆரிப்) எவ்வாறு டெல்லி செங்கோட்டையைத் தாக்க சதித் திட்டம் தீட்ட முடியும்? அவர்களுக்கு இந்த உண்மை தெரியாமல் ஆரிப் எப்படி தாக்குதலை நடத்தியிருக்க முடியும்?
5. செங்கோட்டைத் தாக்குதலுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்கிறார் ஆரிப். ஸ்பெஷல் செல் போலீசார் வேண்டுமென்றே தன்னை இந்த வழக்கில் குற்றவாளியாகச் சேர்த்து விட்டனர் என்றும் ஆரிப் கூறியுள்ளார்.
6. மேலும் ஒரு முக்கியமான தகவலையும் ஆரிப் தெரிவித்துள்ளார். அதாவது ஆரிபின் செலவுக்காக, சஞ்சீவ் குப்தா ஏழு லட்ச ரூபாய் பணம் அனுப்பி யுள்ளார். ஆனால் இதனை ‘ரா’ அதிகாரி நெயின் சிங்கிற்கு அனுப்பியுள்ளார்.

   நெயின்சிங் இதனை முதலில் மறுத்துள்ளார். பிறகு சஞ்சீவ் குப்தாவின் ஆலோசனையின் பேரில் எச்.டி.எஃப்.சி. வங்கியில் ஆரிப் பேரில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

   எனினும் இவரது செக் புத்தகம் நெயின் சிங் கையில் தான் இருந்துள்ளது. ஆரிப் அடிக்கடி பணம் கேட்டதால் நெயின்சிங் தன்னை இந்த வழக்கில் சேர்த்துவிட்டார் என்று ஆரிப் தெரிவித்துள்ளார்.
7. ஆரிபின் இரண்டு செல்போன் எண்களில் (98112 78510, 98112 42154) பதிவான அழைப்புகளைத்தான் முக்கிய ஆதாரம் என்று போலீசார் கூறுகின்றனர். இதில் போலீசார் ஏதோ தில்லுமுல்லு செய்துள்ளனர்.

   இரண்டு எண்களும் ஆரிபின் ஒரே செல்போனில் பயன்படுத்தப்பட்டதுபோல் போலீசார் ‘செட்டப்’ செய்தனர் என்று டெகல்கா புலனாய்வில் தெரிய வந்துள்ளது.
8. ஆரிப் கைது செய்யப்பட்ட நேரம் முதல் தகவல் அறிக்கையிலும் (எப்.ஐ.ஆர்), கைதுக்கான அறிக்கை யிலும் ஒரே மாதிரியாக இல்லை. செங்கோட்டையிலும், ஆரிபின் வீட்டிலும் தடயங்களை சேகரித்தபோது பொது மக்கள் யாரும் அதற்கு சாட்சியாக இல்லை. ஒரு தலைமைக் காவலர் ஏ.கே.47 துப்பாக்கி கிடைத்ததாகக் கூறினார். இன்னொருவரோ அதனை ஏ.கே.56 எனக் குறிப்பிட்டுள்ளார்.
9. தாக்குதல் நடத்தியவர்கள் செங்கோட்டைக்குள் எந்த கேட் வழியாக வந்தார்கள் என்பதிலும் முரண்பாடான தகவல்களைக் கூறியுள்ளனர். கறுப்பு ஆடை அணிந்த இருவர் வந்தனர் என்றுதான் கூறப்பட்டது.
10. ஸ்பெஷல் செல் இன்ஸ்பெக்டர் மூல்சந்த் சர்மா என்பவர், நான் இரவு 10.45 மணிக்கு சம்பவம் நடந்த இடத்து (செங்கோட்டை)க்கு வந்தேன். அங்கு உயர் அதிகாரிகளும் இருந்தனர். லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர் என்று நான் அறிந்து கொண்டேன்’ என்று கூறியுள்ளார்.

எந்த விசாரணையும் நடப்பதற்கு முன்பே, லஷ்கர்-இ-தொய்பாதான் தாக்குதல் நடத்தியது என்று இவருக்கு எப்படித் தெரியும்?

இதுபோன்ற பல அதிர்ச்சியான தகவல்களை டெகல்கா அம்பலப்படுத்தியுள்ளது.

ஆக - செங்கோட்டையில் நடந்த தாக்குதலை ‘ரா’ உளவு நிறுவனமே திட்டமிட்டு நடத்தியுள்ளது இதிலிருந்து தெரிகிறது. நாடாளுமன்றத்தில் நடந்த தாக்குதலும், இதை ஒத்ததாகவே இருப்பதை டெகல்கா ஆதாரங்களுடன் விளக்கியுள்ளது.

**(‘ரா’ உளவுத் துறையின் ஊழல் முறைகேடுகள்பற்றி விரிவான மற்றொரு கட்டுரைத் தொடர் விரைவில் ‘புரட்சிப் பெரியார் முழக்கத்தில்’ வெளி வருகிறது.)**

## “எண்ணற்ற பகீர்களைப் பேசுகிறது!”

***கழக வெளியீடான ‘ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி’ நூலைப் பாராட்டி, ‘குமுதம்’ ஏட்டில் பாமரன் எழுதியிருப்பதாவது:***

*இனிமே பொண்டாட்டிக்குக் கடுதாசி போடறதுன்னாகூட எங்களைக் கேட்காம போடக் கூடாது என்கிற ரீதியில் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது சி.பி.ஐ. எதற்காம்?*

*இந்திய உளவுப் பிரிவான ‘ரா’ அமைப்பின் முன்னாள் அதிகாரி வி.கே.சிங் எழுதிய புத்தகத்தால் வந்துள்ள வம்பிற்காகத்தான். இந்த முன்னாள் அதிகாரி எழுதிய இந்திய உளவுத் துறையின் ரகசியங்கள்* (Secretes of RAW) *என்கிற புத்தகம் தான் இன்றைய சர்ச்சைகளுக்கே மூல காரணம்.*

*அப்படி அதில் என்னதான் இருக்கிறது?*

*நாட்டைக் காக்கிறோம் என்கிற போர்வையில் உளவுத் துறையில் பெருக்கெடுத்து ஓடுகிற ஊழல்களையும், மலிந்துவிட்ட ஒழுங்கீனங்களையும் அக்கக்காக அலசுகிறதாம் இப்புத்தகம்.*

*அமெரிக்காவுக்கு உளவு சொன்ன அதிகாரி ரபீந்தர் சிங்கை ‘எஸ்கேப்’ ஆகவிட்டது... ரகசிய செயல்பாடுகளுக்காக ஒதுக்கிய நிதியில் ஆட்டைப் போட்டு அமெரிக்காவில் மகளைப் படிக்க வைத்தது... என ஆப்பு மேல் ஆப்பு வைக்கிறது வி.கே.சிங்கின் இந்தப் புத்தகம்.*

*இதற்கு சற்றும் குறையாமல் நம்மவர் ஒருவர் தமிழில் கொண்டு வந்திருக்கும் புத்தகம் ஒன்று ஓசைப்படாமல் பல உண்மைகளைப் போட்டு உடைத்திருக்கிறது. விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘ஈழப் பிரச்சனையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி’ என்கிற நூல் பல்வேறு திடுக்கிடும் விஷயங்களை எடுத்து வைக்கிறது.*

*1990-ல் தி.மு.க. ஆட்சியின் போது தமிழக அரசு பற்றிய உளவுத் துறை அறிக்கையினை பிரதமர் வி.பி.சிங்குக்கே கொண்டு செல்லாமல் மறைத்தது...*

*இந்திரா காலத்திய வெளியுறவுக் கொள்கையை காற்றில் பறக்கவிட்டு ராஜீவுக்கு தவறான வழிகாட்டுதல்களைக் கொடுத்தது...*

*ஈழத் தமிழர்களின் கவலையை ஓரளவாவது புரிந்திருந்த பார்த்தசாரதியை நீக்கிவிட்டு பண்டாரி என்கிற அதிகாரியை நியமித்தது... என எண்ணற்ற பகீர்களைப் பேசுகிறது இப்புத்தகம்.* **உளவுத் துறை பற்றி இவ்வளவு விரிவாக தமிழில் வந்த நூல் அநேகமாக இதுவாகத்தான் இருக்கும்.** *இப்படி சகல திசைகளிலும் சந்தி சிரித்துக் கொண்டிருக்கும் நேரமாய்ப் பார்த்து மன்மதக் குற்றச்சாட்டில் சீனத்துச் சிட்டு ஒன்றுடன் சிக்கி திருப்பி அழைக்கப்பட்டிருக்கிறார் ரவிநாயர் என்கிற ரா உளவுத் துறை ஆசாமி. தேசபக்திக்கு முன்னர் தேசபக்தியாவது வெங்காயமாவது. என்ன செய்ய...*

*நாயோடு படுத்தா உன்னியோடதான் எந்திரிக்கணும்.*

***‘குமுதம்’ அக்.23***

# இராமாயணம் எத்தனை இராமாயணம்!

இராமாயணத்திலே வெவ்வேறு கதைகள் உண்டு. ஒவ்வொரு இராமாயணமும் ஒவ்வொரு கதையைச் சொல்கிறது. இதோ அந்தக் கதைகளின் தொகுப்பு.

இந்துக்களின் வடமொழியில் எழுதப்பட்ட இராமாயணங்களின் பட்டியலே நீண்டது. சமண இராமாயணம், வால்மீகி இராமாயணம், வசிஷ்ட இராமாயணம், ஆனந்த இராமாயணம், அத்யாத்ம இராமாயணம், லகு இராமாயணம், அற்புத இராமாயணம், பார்த்துவாஜ இராமாயணம், சோர இராமாயணம், பால இராமாயணம், இரகு வம்ச இராமாயணம், போதாயன இராமாயணம், அக்னிவேஸ்ய இராமாயணம், யோக வசிட்ட இராமாயணம், சஸ்கிரத இராமாயணம் – இவைகள் குறிப்பிடத் தகுந்தவைகள் மட்டும். இன்னும் பட்டியல் நீண்டு கொண்டு போகும். இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதமான கதைகள் கூறப்படுகின்ற வினோதத்தைப் பார்க்கலாம்.

சமணர்கள் கன்னட மொழியில் எழுதியுள்ள இராமாயணங்களின் பட்டியல் பம்ப இராமாயணம், குமுதேந்து இராமாயணம், ஜைன இராமாயணம், இராமவிஜயதரிசம், இராமகதாவதாரம், திரிசஷ்டி மகாபுருகுண அலங்காரம், ஜீவ சம்போதனை – இப்படிப் பட்டியல் நீண்டு போகும். இன்னும் பவுத்த இராமாயணம், கிறிஸ்துவ இராமாயணம், கம்பராமாயணம் – இப்படிப் பலவகை.

ராமனும், சீதையும் கணவன் மனைவியாக ஒரு இராமாயணம்! அவர்களே சகோதர சகோதரிகளாக ஒரு இராமாயணம்! சீதை ராமனின் சகோதரியாக இருந்தும், அவளையே திருமணம் செய்து கொண்டதாக ஒரு இராமாயணம்! ராமன் மகா வீரனாக ஒரு இராமாயணம்! ராமன் குஷ்டரோகியாக ஒரு இராமாயணம்! இப்படிக் குழப்பங்கள், முரண்பாடுகள், மாறுபாடுகள். இவைதான் இராமாயணம்!

பவுத்தத்திலேயே பல இராமாயணக் கதைகள் உள்ளன. அதில் புத்தர் தனது சீடர்களைப் பார்த்துக் கூறியதாகக் கீழ்க்கண்ட கதை கூறப்படுகிறது.

இராமனின் சகோதரி சீதை!

1) காசி நாட்டை ஆண்ட தசரதனின் பதினாயிரம் மனைவிகளில் மூத்த மனைவிக்கு ராமன், லட்சுமணன், சீதை ஆகியோர் பிறந்தனர்.

2) மூத்த மனைவி இறந்த பிறகு இன்னொரு மனைவியை ராணியாக்கியதும், அவனுக்குப் பரதன் பிறந்தான்.

3) பரதன் தாய், தசரதன் கொடுத்த வரத்தைக் காட்டி பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று கூறுகிறாள் (ராமனைக் காட்டுக்கு அனுப்புமாறு கூறவில்லை)

4) இவனால் தனது மூத்த மனைவியின் மக்களுக்கு ஆபத்து வரலாம் என்று அஞ்சிய தசரதன் அவர்களைக் காட்டுக்கு அனுப்பினான். சோதிடன் தசரதனுக்கு 12 ஆண்டுகள் ஆயுளை நிர்ணயிக்க, 12 ஆண்டுகள் கழித்து, தான் இறந்த பிறகு வந்து நாட்டை ஆளுங்கள் என்று தசரதன் கூறுகிறான்.

5) தசரதன் 9 ஆண்டுகளில் இறக்கவே பரதனுக்கு முடிசூட்ட ஏற்பாடுகள் நடந்தன. அமைச்சர்கள் ஆலோசனைப்படி பட்டாபிஷேகத்திற்கு ராமனை அழைக்க பரதன் காட்டுக்கு வருகிறான்.

6) தனது தந்தை இறந்த செய்தி கேட்டு ராமன் கலங்கவில்லை. சீதை, லட்சுமணன் ஆகியோர்களிடம் தந்தை இறந்த செய்தியை தண்ணீரில் நிற்க வைத்து (அப்போதுதான் அதிர்ச்சி அடைய மாட்டார்களாம்) கூறவே, அவர்கள் மயக்கமுற்றனர். ராமன் மட்டும் அதிர்ச்சியடையாததற்குக் காரணம் ஏன் என்று பரதன் கேட்க, சாவு என்பது இயற்கை என்று ராமன் உபதேசம் செய்கிறான். (இது புத்தமதக் கொள்கை, அதைப் பரப்பவே இந்தக் கதை என்பது விளங்கும்)

7) இராமன் தன்னுடைய சகோதரி சீதை, சகோதரன் லட்சுமணன் ஆகியோரை பரதனோடு நாட்டுக்கு அனுப்பி தான் மட்டும் தந்தைக்கு வாக்குறுதி அளித்தபடி 12 ஆண்டுகள் கழித்து வருவதாகவே கூறுகிறான். (செருப்பைக் கொடுத்து அனுப்பவில்லை) ராமன் நாடு திரும்பிய பிறகு சீதையை நாட்டுக்கு அரசியாக்கினான்.

சூத்ரநிபாதம் என்ற புத்தர் அறிவுரைகளைக் கூறும் நூலில் ராமன் ஒரு குஷ்டவியாதி படைத்தவன் என்றும், அங்கு புத்தர் அறிவுரைகளைக் கேட்டதும் அவனுக்குக் குஷ்டம் நீங்கியது என்றும் கூறப்பட்டுள்ளது.

ப்ரியை என்பவளை அவளது சகோதரர்களே திருமணம் செய்து கொண்டதாகவும், சில காலத்தில் அவளுக்கு குஷ்ட வியாதிவர காட்டுக்கு அனுப்பப்பட்டாள் என்றும், அங்கு ராமன் புத்தர் அறிவுரைகளைக் கூறி அவள் குஷ்டத்தை நீக்கி, அவளையே திருமணம் செய்து கொண்டதாகவும் இதில் கூறப்படுகிறது. (சீதைக்குப் பதில் ப்ரியை இங்கு வருகிறாள்) இந்த பவுத்த இராமாயணத்தில் ராமன் ராட்சதர்களோடு யுத்தம் நடத்தும் கதைகள் எதுவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேலும் வால்மீகி இராமாயணத்தில் புத்தரைப் பற்றிய சான்றுகள் வருகின்றன. இராமனைப் பார்க்க வந்த பரதனிடம் இராமன் கேட்கும்போது பவுத்தன் சார்வாகன் முதலிய நாஸ்திகர்களுடன் பழகாமல் இருக்கிறாயா? புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய சம்பிரதாயப் பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல் கேவலம் தர்க்கத்தைப் பிரயோகித்து அவை இகத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள் பவுத்தர்கள் என்று ராமன் பரதனுக்கு எச்சரிக்கை செய்கிறான். (அயோத்தியா காண்டம் 100வது சருக்கம் 574வது பக்கம். சி.ஆர். சீனிவாச அய்யங்கார் மொழி பெயர்ப்பு)

இதிலிருந்து இரண்டு விவரங்கள் தெரிகின்றன. வால்மீகி இராமாயணத்துக்கு முன்பே பவுத்த இராமாயணக் கதை நிலவி வந்தது என்பது ஒன்று. பவுத்த இராமாயணத்தில் இல்லாத இராம இராவண யுத்தம், திராவிடர்களை இழிவுபடுத்துவதற்காக பின்னால் திட்டமிட்டு சேர்க்கப்பட்டுள்ளது என்பது மற்றொன்று.

# கண்டிப்பதில் தயங்கலாமா?

‘இராமாயணம் என்பது நடந்த கதையல்ல. அதற்கு எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை’ என்று அறிவியல் கண்ணோட்டத்தில் - தொல்பொருள் - அகழ்வாராய்ச்சித் துறை உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ள கருத்தை, தேவையில்லாத கருத்து என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது. அறிவியல் உண்மையை வெளிப்படுத்துவதைக்கூட தேவையற்றது என்கிறது, மார்க்சியம் பேசும் கம்யூனிஸ்ட் கட்சி. இப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பிரகாஷ்காரத் என்ன கூறுகிறார்? இராமாயணம் மாந்தகுல வளர்ச்சியைக் கூறும் காவியம் என்கிறார்.

ராமன் ‘மச்சாவதாரம்’ எடுத்து வந்ததாக மீன் உருவெடுத்து வந்ததாகக் கூறுவது மனித இன தோற்றத்தைக் குறிக்கிறதாம். அமீபியாதான் மனித வளர்ச்சியில் முதல் உயிர்த் தோற்றம். எனவே அதை ‘மச்சாவதாரம்’ என்றார்களாம். கடலில் இருந்து நிலத்துக்கு உயிர் வந்தக் கட்டத்தைக் குறிப்பதுதான் ராம அவதாரமாம். அதனால்தான் நிலத்தில் ராமனாக அவதரித்தாராம். அடுத்து விலங்காக நரசிம்மவதாரம் எடுத்து வருகிறாராம். இப்படி, ராமாயணத்துக்கு விஞ்ஞான முலாம் பூசி - அது மனித குல வளர்ச்சியைக் குறிக்கும் காவியம் என்கிறார்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர். சூத்திர இழிவு ஆரிய தர்மம் - பெண்ணடிமை - பற்றி எல்லாம் இராமாயணம் பேசுவதை மக்களிடம் எடுத்துக் கூறாமல், விஞ்ஞான மூலம் பூசுகிறார்கள். கம்பராமாயணத்திலே பொதுவுடைமைத் தேடிய கம்யூனிஸ்டுகளும் உண்டு. பெரியார் ராமாயண எதிர்ப்பு நடத்தியபோதெல்லாம் அதற்கு மாறாக இப்படி குறுக்குசால் ஓட்டியதால்தான் - இப்போது, அயோத்திராமன் தமிழ்நாட்டுக்கு இறக்குமதியாகும் நிலை வந்துவிட்டது. இதற்குப் பிறகும்கூட புராண - இதிகாசப் புரட்டுகளையும், அதன் உள்ளடக்கத்தையும் கண்டித்துப் பேசாமல், விஞ்ஞான மூலம் பூசிக் கொண்டிருக்கலாமா?

**- சூலூர் கூட்டத்தில் கோவை இராமகிருட்டிணன் உரையிலிருந்து**

# அன்னதானப்பட்டி ஆயுதப்படை அலுவலகத்தில் கணபதி பூசையாம்!

தமிழ்நாட்டில் காவல்நிலையங்கள் பூஜை மடங்களாக மாறி வருகின்றன. இதுபற்றி ஏராளமான செய்திகள் வந்தும், காவல் துறையைப் பொறுப்பில் வைத்துள்ள தமிழக முதல்வர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சேலம் அன்னதானப்பட்டியிலுள்ள ஆயுத போலீஸ் படை அலுவலகத்தில் பிள்ளையார் கோயிலைக் கட்டி, அதற்கு காவலர்கள் கணபதி பூசையும் செய்து வருகிறார்கள். இதை சுட்டிக்காட்டிய சேலம் மாவட்டப் பெரியார் திராவிடர் கழகத் தோழர் இரா. இராசாவிடம் பொய் வழக்கு போடுவோம் என்று மிரட்டுகிறார்கள். இது பற்றி கழகத் தோழர் இரா. ராசா எனும் டேவிட் தமிழக முதல்வருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

“அய்யா, 15.10.2007 திங்கள் காலை 6.30 மணியளவில் சேலம் அன்னதானப்பட்டியில் உள்ள ஆயுதப்படை அலுவலகத்தில் பிள்ளையார் கோவில் வைத்து கணபதி பூசை நடத்தி வந்தனர். அந்த செய்தியை கேள்விப்பட்டு நான் அங்கே சென்று பார்த்த பொழுது சில காவலர்கள் பூசையில் கலந்து கொண்டு கீழே தரையில் அமர்ந்து இருந்தனர். தமிழக அரசு ஆணைப்படி அரசு அலுவலகங்களில் கடவுள் படமோ அல்லது கடவுள் சிலைகளையோ வைத்து பூசை பண்ணக் கூடாது என்று கூறினேன். அதற்கு அங்கிருந்து 50-க்கும் மேற்பட்ட காவலர்கள் என்னை சூழ்ந்து, இது எங்களின் உரிமை இதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தால் உன் மீது பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளிவிடுவோம் என்றும், இதைப் பற்றி எங்கு வேண்டுமானாலும் புகார் செய்து கொள். உங்கள் கருணாநிதியிடம்கூட சென்று புகார் செய்து கொள் என்று மிரட்டுகின்றனர். இங்கிருந்து செல்கிறாயா அல்லது சிறைக்குச் செல்கிறாயா என்று மிகவும் மோசமாக பேசினார்கள். உடன் நான் அங்கிருந்து வெளியேறி விட்டேன். நமது நாடு மதச்சார்பற்ற நாடு. அதனால்தான் அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களோ, கடவுள் சிலைகளோ இருக்கக் கூடாது என்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால் அரசு ஆணையைக் காக்கப் பாடுபடுவோம் என்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டு பணிக்கு வரும் காவலர்கள் பணிக்கு வந்தபின் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். அவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக் காட்டினால் மிரட்டி பொய் வழக்குப் போடுவோம் என்று பயமுறுத்துகிறார்கள். இதை நான் தங்களின் மேலான பார்வைக்கு கொண்டு வருகிறேன் என்று கடிதத்தில் எழுதியுள்ளார்.

# ஏற்காட்டில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற பெரியார் விழா

16.9.07 ஞாயிறு காலை 10 மணிக்கு பெரியார் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாணவ மாணவியர்களுக்கான “பேச்சுப்போட்டி”, பொதுமக்களுக்கான கட்டுரைப்போட்டி “பெரியார் யார்” என்ற தலைப்பில் அரசியல் கட்சித் தோழர்கள் பங்கேற்ற உரைவீச்சு ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

மாணவ, மாணவிகளுக்கானப் பேச்சுப் போட்டியில் சாந்தினி முதல் பரிசும், மணிகண்டன் இரண்டாம் பரிசும், பிரியா மூன்றாம் பரிசும் பெற்றனர்.

பொது மக்களுக்கான கட்டுரைப்போட்டி நடைபெற்றதில் 40 பேர் கலந்து கொண்டனர். இதில் சி. அனிதா முதல் பரிசினை வென்றார். அவருக்கு வண்ண செல்பேசி பரிசாக வழங்கப்பட்டது. 39 நபர்களுக்கு பெரியார் திராவிடர் கழக வெளியீடுகள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. இறுதியாக அனைத்துக் கட்சியினர், முற்போக்கு இயக்கத்தினர், “வெண்தாடியுடன் வீரமாய் தோற்றமளிக்கும் இந்த பெரியார் யார்?” என்ற உரைவீச்சு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பெரியார் திராவிடர் கழக ஏற்காடு ஒன்றிய செயலாளர் தமிழ்சிவா வரவேற்புரையாற்றினார். பஞ்சாயத்துத் தலைவர், தி.மு.க. அ.தே.பாலு, தி.மு.க. நகர இளைஞரணி துணை அமைப்பாளர் கி.பாபு, அ.தி.மு.க. மாவட்ட பிரதிநிதி அந்தோணி, காங்கிரஸ் வட்டார செயலாளர் ரெக்ஸ் ஸ்டாலின், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாவட்ட தாலுக்கா கிளை செயலாளர் கிருட்டிணமூர்த்தி, விடுதலை சிறுத்தை கட்சியின் வடக்கு மாவட்ட செயலர் குறிஞ்சி வேந்தன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக குமாரசாமி, ம.தி.மு.க. சார்பாக நகர செயலாளர் பத்மநாபன், பெரியார் தி.க. சார்பாக பெருமாள் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியாக சரவணன் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுற்றது. நிகழ்ச்சியின் துவக்கத்தில் து.நேரு நடத்திய ‘ஏமாற்றாதே! ஏமாறாதே!’ என்ற தந்திர நிகழ்வு பொதுமக்களிடம் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்து வரவேற்பைப் பெற்றது.

மிகவும் வித்தியாசமான அணுகுமுறையோடு நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி பெருமாள் தலைமையில், ஏற்காடு ஒன்றிய அனைத்துப் பகுதி தோழர்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. மற்ற பகுதி தோழர்களுக்கு முன்னுதாரணமான நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

# இராமர் அரசியல் – தமிழகத்திலே எடுபடாது!

## பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் விளக்கம்

*சூலூரில் 23.9.07 அன்று நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் - பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆற்றிய உரை (கடந்த இதழ் தொடர்ச்சி):*


இராமாயணத்திலே ஏகப்பட்ட இராமாயணம் இருக்கிறது. கம்ப இராமாயணம், வால்மீகி இராமாயணம், பவுத்த இராமாயணம்னு இருக்கிறது. அண்ணா ஒருமுறை இந்தோனேசியா நாட்டுக்குப் போனாராம். அங்கே போய் கோயிலிலுள்ள சிற்பங்களை பார்க்கிறபோது அங்கே ஒரு படத்தில் இராமாயணக் கதையை வரைந்து வைத் திருந்தார்களாம். நம் ஊரில் இராவணனுக்கு பக்க வாட்டிலே பத்து தலை. அங்கே இந்தோனேசியாவிலே அடுக்குப் பானை மாதிரி மேலே தலைகளை அடுக்கி வைச்சிருந்தாங்கலாம் ஏன் தெரியுமா? அவன் கொஞ்சம் பிற்காலத்தில் கதை எழுதியிருக்கிறான். அவன் யோசிச்சிருப்பான். பின்னாளில் பெரியார் மாதிரி ஒருத்தர் வருவாரு. கேள்வி கேட்பாரு. இராவணன் பத்து தலையோடு இருந்தா புரண்டு எப்படிடா படுப்பான்? புரண்டு படுத்தா எப்படி இருக்கும்னு நினைச்சுப் பாருங்க. பத்துத் தலையோட படுத்தா கால் அந்தரத்திலே நிக்கும் புரண்டு படுக்க முடியாது. அதனாலே புரண்டு படுக்கிற மாதிரி அடுக்குப் பானை மாதிரி வெச்சுட்டான், பத்து தலையை. ஊருக்கு ஊர் இராமாயணம் இருக்குதுங்க. அன்றைக்கு கதை எழுத தெரியலை, இதை எழுதி வெச்சிருக்கான்.

அதே மாதிரி வால்மீகி இராமாயணத்தில் இராவணன் சீதையை தூக்கிட்டுப் போகும் போது தன்னுடைய மடி மேல் வெச்சு தூக்கிட்டுப் போனான்னு எழுதியிருக் கிறான். ஆனால் வால்மீகி இராமாயணக் கதைப்படியே, இராவணன் எவ்வளவு ஒழுக்கமானவன் என்றும் பதிவாகியிருக்கிறது. என்னன்னு கேட்டா இராவணனுக்கு தன்னை விரும்பாத பெண்ணை அவன் தொட்டால் அவன் தலை சுக்கு நூறா உடைந்துவிடும் என்று ஒரு வரம் பெற்றிருப்பதாக வால்மீகி இராமாயணம் சொல்லுகின்றது. இராவணன் தன்னை விரும்பாத பெண்ணைத் தொட்டால் தலை சுக்கு நூறா உடைந்திடுமாம். அவன் சீதையை தன் மடி மேலேயே வெச்சு தூக்கிட்டு போயிருக்கான். பத்து தலையில ஒரு தலைகூட சுக்கு நூறாப் போகல்ல. அப்ப சீதை விரும்பித்தான் அவனோட போயிருக்காள். விரும்பாம போயிருந்தா தலை வெடிச்சிருக்குமில்லையா? இது எல்லாம் நான் சொல்லலீங்க. நமக்கு பெரியார் சொல்லிக் கொடுத்தது. புத்தகத்தில் எழுதி வெச்சிருக்காரு. படிச்சிட்டுத்தான் கேட்கிறோம். அதோடு மட்டுமல்ல, அங்கே கொண்டு போய் சீதையை பாதுகாப்பாக வெச்சுருக்கிறான் இராவணன். ஆனால் கம்ப இராமாயணத் தில் என்ன எழுதியிருக்கிறான்? கதையே ‘ரீடேக்’ எடுக்கும்போது, இயக்குனர் எரிச்சரிக்கையாக இருப்பதுபோல் கம்பன் எழுதியிக்கிறான். இராவணன் சீதையை வீட்டோடு பெயர்த்து எடுத்துப் போனதாக எழுதி வெச்சுட்டான் கம்பன்.

தோழர்களே, இதை எதற்கு கூறுகிறோம்? இவர்கள் அரக்கன் என்று சொல்லுற இராவணனால், சீதையைத் தூக்கிக் கொண்டு, பாலமே இல்லாமல் இலங்கைக்குப் போக முடிகிறது. சாதாரண குரங்கு, பாலமே இல்லாமல், சீதையிடம் தூது போக முடிகிறது. ஆனால், கடவுள் அவதாரம் என்று கூறுகிற இராமனுக்கு மட்டும், இலங்கைக்குப் போக, பாலம் வேண்டியிருக்கு? இதுதான் கடவுள் அவதாரத்தின் சக்தியா?

சீதையை - இலங்கையில் பார்த்துவிட்டு வந்த அனுமான், ராமனிடம் வந்து, சீதையைப் பார்த்தேன். அவள் அப்பழுக்கில்லாதவளாக இருக்கிறாள் என்று, கற்புக்கு சான்றிதழ் தருகிறான். அதை அனுமார், எப்படி கண்டுபிடித்தார் என்றுதான் தெரியவில்லை. இராவணன், சீதையைத் தொடவே இல்லை என்று அனுமான் ராமனிடம் கூறுகிறான். கம்பராமாயணம்தான் இப்படி கூறுகிறது. அவ்வளவு நேர்மையானவனாக இராவணன் இருந்திருக்கிறான். ஆனால், ராமனின் யோக்கியதை என்ன? திரும்பி வந்த சீதையின் கற்பில் சந்தேகப்பட்டு, தீயில் குளித்து, கற்பை நிரூபிக்க வேண்டும் என்று உத்தரவு போடுகிறான்.

அவ்வளவு வல்லமை படைத்த - அவதாரத்துக்கு தனது மனைவி கற்புடையவளாக இருந்தாளா, இல்லையா என்பதை தனது ‘ஞானதிருஷ்டியால்’ அறிந்து கொள்ள முடியாதா? இன்றைக்கு, நம்மிடம் ‘செல்போன்’



இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இலங்கைக்கும் - ஈழத்துக்கும் செல்பேசியில் பேச முடியும். இன்று சிங்கள ராணுவத்துக்கும் புலிகளுக்கும் நடந்த சண்டையில் எத்தனை ராணுவத்தினர் செத்தார்கள் என்பதை, ஒவ்வொருநாளும் கேட்டுத் தெரிய முடியும். சாதாரண மனிதர்களாகிய நமக்கே இந்த வாய்ப்பை அறிவியல் விஞ்ஞானம் உருவாக்கித் தந்திருக்கிறது. ஆனால், கடவுள் அவதாரம் ராமனுக்கு இலங்கை யில் தனது மனைவி கற்புடன் இருந்தாளா, இல்லையா என்பதைக்கூட கண்டறியும் சக்தி இல்லை. சீதைக்கு - பெண்ணுரிமை சிந்தனை இருந் திருந்தால், “நீயும், என்னைப் பிரிந்து தானே இருந்தாய்? நீ கற்புடன் இருந்தாய் என்று நான் எப்படி நம்ப முடியும்? நீயும், நெருப்பில் இறங்கு” என்று சொல்லியிருப்பாள். ஆனால் அப்படிக் கேட்கவில்லை. காரணம் ராமாயணமே பெண்ணடிமையை வலியுறுத்தும் கதை.

ஏன் பெரியார் இராமாயணத்தை எதிர்த்தார்? சம்பூகன்னு ஒரு ‘சூத்திரன்’ தவம் பண்றான். உடனே அக்ரகாரத்துப் பார்ப்பனர்கள் எல்லாம் ஓடி வந்து அக்ரகாரத்தில் ஒரு குழந்தை செத்துப் போய்விட்டது என்று இராமர் இடத்திலே சொல்லுகிறார்கள். இராமா, உன்னுடைய ஆட்சியிலே அக்கிரமம் நடக்குது என்னுடைய அக்ரகாரத்தில் ஒரு சிசு செத்துப் போச்சு என்கிறார்கள். தவம் செய்யக் கூடாது என்றால் படிக்கக் கூடாது என்பதுதான் அர்த்தம். கல்வி கற்கக் கூடாது. இதுதான் அர்த்தம். சூத்திரன்னா யார் யாரையோ நினைச்சுக்காதீங்க. இன்னக்கி இந்து முன்னணி, பி.ஜே.பி.க்கு பின்னால் போற துடிக்கிறாங்களே அந்த பார்ப்பனரல்லாத அத்தனை பேரும் ‘சூத்திரர்’ தான். சூத்திரன் படிக்கக் கூடாதுன்னு இராமாயணத்தில் சொன்னான். அதை ஒரு சூத்திரன் மீறினான். உடனே இராமன் வாளை உருவினான். சம்பூகனின் தலையை வெட்டி வீழ்த்தினான். அவன் தலை கீழே விழுகிறது. அக்ரகாரத்தில் செத்துப் போன பார்ப்பனக்குஞ்சு எழுந்து உட்கார்ந்திடுச்சு. கதையா இராமாயணத்தில் இருக்கிறது. இதனால் தான் பெரியார் அந்த இராமனையும், இராமாயணத்தையும் கொளுத்தினார்.

இப்போது ‘தினமணி’ பத்திரிகையெல்லாம் எழுதுகிறது, இராமர் பக்தர்கள் இனி கருணாநிதிக்கு ஓட்டுப் போட மாட்டார்கள். கருணாநிதி வாக்குகளை இழக்கப் போகிறார் என்று எழுதுகிறது. அய்யா, இந்த நாட்டிலே இராமர்க்கு இந்து மதக்காரனுக்குத்தான் மக்கள் ஓட்டு போடுவாங்க என்றால், 50 வருடமா, பா.ஜ.க. தானே ஆட்சில இருக்கனும். போன தேர்தலில் ஒரு சீட் கூட வரலையே இராம பக்தர்கள். பி.ஜே.பி. ஒரு சீட் கூட வரலையே. அயோத்தியிலே கோயில் கட்றேன்னு சொன்னார்கள். யாராவது ஓட்டுப் போட்டீங்களா? போடலையே. சேலத்திலே 1971லே என்ன நடந்தது? ஊர்வலத்தில் எங்கள் தோழர்கள் மேலே செருப்பு வீசியது, ஒரு பார்ப்பனக் கூட்டம். உடனே எங்கள் தோழர்கள் அந்த செருப்பை எடுத்து இராமர் படத்தை அடிச்சிட்டே வந்தாங்க. அன்றைக்கு கலைஞரே பயந்தார். ஏன்னா, சோவிலிருந்து எல்லோரும் தேர்தலில் இதையே மய்யமாக வைத்து தி.மு.க.வுக்கு எதிராக பிரச்சாரம் செய்தார்கள். இராமரை செருப்பால அடித்தவருக்கா ஓட்டு அப்படின்னு பிரச்சாரம். கழுத்தில மாட்டிகிட்டே வீடு வீடா பிரச்சாரம் நடந்தது. பெரியார் படத்தை செருப்பால் அடிப்போம்னு சொன்னாங்க. அப்ப பெரியார் சொன்னாரு, நீங்க வெளியில போய் என் படத்தை வாங்கிடாதீங்க. செருப்பும், படமும் பெரியார் மாளிகையிலேயே கிடைக்கும். குறைந்த விலையில் கிடைக்கும். அதிக விலைக்கொடுத்து ஏமாறாதீங்க என்று அறிக்கைவிட்டார். இதுதாய்யா பெரியாரு! ஏன்னா தனது படத்தை செருப்பாலடித்தது பற்றி கவலையே படவில்லை. தன்னுடைய கருத்து சரியானது என்று ஆழமாக பதிந்து போனதால் எந்த எதிர்ப்பைப் பற்றியும் கேவலத்தைப் பற்றியும் கவலைப்படவில்லை அவர். ‘இந்து’ப் பத்திரிகையிலிருந்து, சோவிலிருந்து பிரச்சாரம் பண்ணினாங்க. கடைசியில் ஓட்டுப் பெட்டியைத் திறந்தார்கள். பெரியார் செருப்பில் அடிச்சது ஒரே ஒரு இராமனைத்தான். ஆனால் சேலத்திலே. இரண்டு இராமர்கள் வெற்றி பெற்றார்கள். சேலம் நகரத்தில் மட்டும் ஜெயராமன், ராஜாராமன்னு இரண்டு பேர் தி.மு.க.விலே நின்று வெற்றி பெற்றார்கள். அதோடு மட்டுமல்ல, அதற்கு முன்னாடி தேர்தலில் 164 சீட்டுதான் தி.மு.க. ஜெயிச்சது. இராமனை செருப்பால் அடித்தப் பிறகு நடந்த தேர்தலில் 1971-ல் 184 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. ஆகவே ‘தினமணி’ பத்திரிகையெல்லாம் தி.மு.க.வை மிரட்ட வேண்டாம்.

தோழர்களே இன்றைக்கு பார்ப்பான் பூரா புறப்பட்டுட்டான். எல்லா பார்ப்பானும் புறப்பட்டுட்டான். தி.மு.க. தலைவருடைய தலையைக் கொண்டு வந்தால் எடைக்கு எடை தங்கமாம். அங்கிருந்து ஒரு சாமியார் அறிவிக்கின்றான். ஆனால் தோழர்களே பெரியோர்களே நாம் கேட்கிறோம் உண்மையிலே அந்த சாமியாருக்கு துணிவு இருந்தால் தமிழ்நாட்டில் வந்து சொல்லு. அதை எங்கோ மூலையில் இருந்து கிட்டு சொல்லாதே. இங்கே வா. சொல் லிட்டு நாங்க எடைக்கு எடை யாருக்கும் தங்கமே கொடுப்பதில்லை. எங்கள் தோழர்கள் ஜெயிலுக்குப் போனாகூட சால்வைகூட போட மாட்டோம். எங்க கொள்கைக்காக. கட்சிக்காக போகின்றவர் களுக்குக்கூட ஒரு பைசா கூட தர மாட்டோம். சொந்த சோத்தை தின்னுகிட்டு, சொந்த உழைப்பிலே கொள்கைக்காக உழைக்கின்ற கூட்டம் இந்த கூட்டம். இந்தக் கூட்டம் தங்கத்திற்காக அல்ல, கொள்கைக்காக இங்கே இந்த உயிரையும் கொடுத்து, இந்த கொள்கையைக் காப்பாற்றுகின்ற கூட்டம் இந்த கூட்டம் இருக்கின்ற வரைக்கும் பி.ஜே.பி. இந்து முன்னணி ஆர்.எஸ்.எஸ்சோ தமிழ்நாட்டில் பருப்பு வேகாது.

இந்துக்களுக்காக நிற்பவர்களாக இருந்தால் உயர்கல்வி நிறுவனத்திலே 27 சதவீதம் கூடாது என்று பார்ப்பான் பூராவும் வரிஞ்சு கட்டிட்டு எழுதுறானே, கொளத்தூர் மணியுடைய பையனுக்கா, என்னுடைய பையனுக்கா அல்லது தங்கவேலுக்கோ, செல்வராசுக்கோ, அண்ணன் கந்தசாமியோட குடும்பத்திற்கா? இல்லை தோழர்களே, செட்டியாருக்கு, கவுண்டருக்கு, நாடாருக்கு, தேவருக்கு உயர்கல்வி நிறுவனங்களிலே 27 சதவீதம் இடஒதுக்கீடு வேண்டும் என்று அர்ஜுன் சிங் உத்தரவு போடுறாரு. உடனே இந்தப் பார்ப்பான் நீதிமன்றம் போய் தடுத்து நிறுத்துறான். இந்த உச்சநீதிமன்றம் பார்ப்பனக் கூடாரமாக இருக்கின்ற காரணத்தால் நமக்கு எது எல்லாம் நல்லதோ அதை எல்லாம் தடுக்கிறது. சேது சமுத்திரத் திட்டம் நமக்கு நன்மை பயக்கக் கூடியது. இந்த நாட்டிற்கு நன்மை பயக்கக் கூடியது. 27 சதவீதம் இடஒதுக்கீடு கேட்டால் ஒரு வருடம் பொறுக்க மாட்டீங்களா என்று கேக்கிறான். அதே உச்சநீதிமன்றம் பத்து வருசமா 69 சதவீதம் இடஒதுக்கீடு கூடாதுன்னு சொல்லி விசயன் என்கிற வழக்கறிஞர் போட்ட வழக்கிற்காக வருசா வருசம் மருத்துவக் கல்லூரியிலே பார்ப்பனர்களுக்கு இடஒதுக்கீடு தந்துட்டு இருக்கிறாங்க. அவனைப் பார்த்து கேக்கல; தீர்ப்பு வருகிற வரைக்கும் பொறுக்க முடியாதான்னு? நாம் இதைத் தட்டிக் கேட்கும் துணிவு பெற வேண்டும். தனியார் துறையிலே இடஒதுக்கீடு கிடையாது. நாங்கள் தான் போராடுகிறோம். இன்றைக்கு சேலம் கோட்டத்திற்காகப் போராடியது பெரியார் திராவிடர் கழகம். 52-லேயே பெரியார் பேசினார். அவர் வழியிலே நாங்கள் போராடினோம். அந்த இரயிலை விட்டா நாங்களா போகப் போகிறோம். உங்களுக்காகத்தான் அடுத்த மாசம்

4 ஆம் பக்கம்

### திருப்பதி உண்டியலும் – டாஸ்மாக்கும்

*நாத்திகப் பிரச்சாரம் எல்லாம் தோத்துப் போயிருச்சி. இவர்கள் பிரச்சாரம் செய்ய செய்யத்தான் பக்தி வளர்ந்துகிட்டே போகிறது என்று ஒரு பிரச்சாரம் நடக்கிறது. பக்தி வளருதுன்னு சொன்னா அய்யா நேற்றைக்கு புரட்டாசி சனிக்கிழமை, உடனே திருப்பதியிலே இத்தனை கோடி உண்டியலிலே வந்துச்சு என்கிறார்கள்.*

*இந்த மார்ச் மாதம் அரசாங்கம் ஒரு அறிக்கை கொடுக்கும். அரசு நடத்தும் மதுபானக் கடைகள் டாஸ்மாக்ல எத்தனை கோடி வந்தது என்று கணக்கு தருவார்கள். அதுவும் பெருகிக் கொண்டு தானே போகிறது. டாஸ்மாக்லேயும் தான் வருமானம் பெருகுது. போன வருடத்தைவிட இந்த வருடம் டாஸ்மாக்லே பல கோடி கூடுதல் வருமானம். இத்தனைக்கும் கள்ளச் சாராயம் வேறு ஒரு பக்கம் நடக்குது. அது இல்லாமே டாஸ்மாக்லே இத்தனை கோடி வருதே பக்திப் பெருகிய லட்சணமா இது? ஒரு இன்டர்நெட்டை வெச்சுக்கிட்டு 200 பெண்களை திருமணம் பண்ணியிருக்கிறானே ஒருத்தன். பக்தி வளர்ந்திருக்கா. உன்னோட பக்தியின் இலட்சணம் தெரியுதே. உன்னோட முதல் கடவுள் காக்கும் கடவுளாம். நம்மையே காப்பாற்றும் கடவுளாம். அவருக்குப் பக்கத்திலே இரண்டு பேர் துப்பாக்கி வெச்சுகிட்டு நிக்கிறான். காக்கும் கடவுளுக்கு முன்னாடி இரண்டு பேர் துப்பாக்கியோட நிக்கிறாரு. காக்கும் கடவுளையே துப்பாக்கியோடு காக்க வேண்டியிருக்கு.*

**- சூலூர் கூட்டத்தில் கோவை இராமகிருட்டிணன் உரையிலிருந்து**

# சீர்காழியில் அடைமழையாய் கழகப் பணிகள்

*சீர்காழியில் பெரியார் திராவிடர் கழகம் எழுச்சியுடன் ஆற்றிவரும் களப்பணிகளின் தொகுப்பு:*

சீர்காழியில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 15.9.2007 அன்று மாலை 6 மணிக்கு பழைய பேருந்து நிலையம் அருகில் தந்தை பெரியாரின் போர்வாள் நடிகவேள் எம்.ஆர்.ராதா நூற்றாண்டு விழா, தந்தை பெரியார் 129வது பிறந்த நாள் மிகவும் எழுச்சியுடன் நடந்தது. நிகழ்ச்சிக்கு நகரத் தலைவர் பெரியார் செல்வம் தலைமை வகிக்க, நகர அமைப்பாளர் அனந்தராசு வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் சோம.ராசராசன், மாவட்ட துணைச் செயலாளர் காத்திருப்பு செ. குமார், மாவட்ட தலைவர் இரா. பரசுராமன் கருத்துரை வழங்கினர். சிற்பிராசன் 'மந்திரமா, தந்திரமா' மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சியுடன் நடைபெற்றது. இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

15 நாட்களாக கழகத் தோழர்கள் இரவு பகலாக உழைத்து மாநாடு போல் கூட்டத்தை நடத்தினர். சீர்காழி முழுக்க கொடிகள், பேனர்களால் அலங்கரிக்கப்பட்டு சீர்காழி நகரமே விழாக் கோலம் பூண்டது. இறுதியாக அண்ணாமலை பல்கலைக் கழக மாணவரணி அமைப்பாளர் பா. அருண் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவடைந்தது.

### கழகத்தில் புதிய தோழர்கள்

15.9.2007 அன்று மாலை 5 மணிக்கு கொள்ளிடம் ஒன்றியம் அரசூர் பகுதியில் கழக கொடியேற்று விழா நடைபெற்றது. புதிதாக 15 தோழர்கள் கழகத்தில் இணைந்தனர். கொள்ளிட ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் காருகுடி ச. கார்த்திகேயன் தலைமையில் கொள்ளிட ஒன்றிய அமைப்பாளர் அ. கார்த்திகேயன், மாணவரணி செயலாளர் தங்கமணி ஆகியோர் முன்னிலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாவட்ட தலைவர் பரசுராமன், சிற்பி சி. ராசன் ஆகியோர் கழக கொடியேற்றி வைத்தார்கள். அதைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இறுதியாக கொள்ளிட ஒன்றியத் தலைவர் நந்த. ராசேந்திரன் நன்றி கூறினார். 50க்கும் மேற்பட்ட கருஞ்சட்டையுடன் கழகத் தோழர்கள் திரண்டு இருந்தனர். அரசூர் பகுதியில் இருநது சீர்காழி பொதுக்கூட்ட மேடை வரை கழகத் தலைவர், சீர்காழி கொள்ளிடம் நகரம் ஒன்றியம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

17.9.2007 அன்று சீர்காழியிலுள்ள அய்யா சிலைக்கு கழக மாவட்டத் தலைவர் இரா. பரசுராமன் மாலை அணிவித்தார். கழகக் கொடியை மா.பெ.பொ.க. கருப்பையா கொடியேற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து கழகத் தோழர்கள் உரையாற்றினார். நிகழ்ச்சியில் சீர்காழி ஒன்றிய தலைவர் விஜயகுமார், மாணவரணி தலைவர் ராமமூர்த்தி, மாணவரணி செயலாளர் ரகுநாத், நகரத் தலைவர் பெரியார் செல்வம், நகர அமைப்பாளர் க. அனந்தராசு, கொள்ளிட ஒன்றிய செயலாளர் பாக்கியராஜ், ஒன்றிய அமைப்பாளர் காருகுடி கார்த்திகேயன், சுரேசு, இளவரசன், அன்பு, செழியன், முத்து அன்பழகன், பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### குருதிக் கொடை

சீர்காழியில் சென்ற ஆண்டு அய்யா பிறந்த நாளையொட்டி குருதி சோதனை முகாம் சிறப்பாக நடத்தப்பட்டது. சீர்காழி, சிதம்பரம், மயிலாடுதுறை, காரைக்கால், புதுவை ஆகிய பகுதிகளில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு கழகத் தோழர்கள் குருதிக் கொடை வழங்கி வருகிறார்கள். பெரியார் குருதிக்கொடை ஆரம்பிக்கப்பட்டு 17.9.2007 அன்று ஓராண்டு நிறைவடைகிறது. இந்த ஓர் ஆண்டில் கழகத்தின் சார்பில் 48 யூனிட் குருதிக் கொடை வழங்கப்பட்டுள்ளது.

### சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் கோயிலா?

சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் அரசு ஆணைக்கு எதிராக கோயில் கட்டப்பட்டு வந்தது, கழக முயற்சியால் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டமைப்பான மதவெறி எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் 2004 ஆம் ஆண்டு வட்டாட்சியர்க்கு மனு கொடுக்கப்பட்டு, கோயில் கட்டும்பணி நிறுத்தப்பட்டது. பல மாதம் கழித்து இரவோடு இரவாக கோயில் கட்டும் பணி நடந்ததை சுட்டிக் காட்டி உடனடியாக கோயில் கட்டும் பணி நிறுத்தப்பட்டது. 3 ஆண்டுகள் கழித்து கோயில் கட்டும் பணி தொடர்ந்தது. பிள்ளையார் சிலையும் கோவிலுக்குள் வைக்கப்பட்டது. இதைக் கண்ட கழகத் தோழர்கள் வட்டாட்சியரை சந்தித்தபோது பொருப்பில்லாத பதிலை வட்டாட்சியர் அளித்தார். உடனடியாக சீர்காழி பெரியார் செல்வம் 7.9.2007 அன்று மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் முதல்வரின் தனி பிரிவு ஆகியோருக்கு கழகத்தின் சார்பில் மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் கோயிலை அகற்றக் கோரி கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

### அரசு மருத்துவமனை சீர்கேட்டை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

சீர்காழி அரசு மருத்துவமனை சீர்கேட்டைக் கண்டித்து 18.8.2007 அன்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டிருந்தது. துண்டறிக்கை பொது மக்களிடம் கொடுக்கப்பட்டு வந்தது. மருத்துவமனையை கழகத் தோழர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வந்தனர். கழக துண்டறிக்கையைக் கண்டு சட்டமன்ற உறுப்பினர் பேச்சு வார்த்தை நடத்தி, கழகத்தின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டன. புதிய மருத்துவர் செவிலியர் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சில கோரிக்கைகளை நிறைவேற்ற காலக்கெடு கேட்டத்தைத் தொடர்ந்து, கழகத்தின் சார்பில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### நாடி சோதிட வழக்கு விசாரணை

சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நாடி சோதிட மோசடி வழக்கு நடைபெற்று வருகிறது. நாடி சோதிட மோசடியை அம்பலப்படுத்தும் விதமாக சீர்காழி கழகத் தோழர்கள் நாடி சோதிடத்தை தடை செய்யக்கோரி பரப்புரை செய்து வருகின்றனர். இந்த வழக்கின் முதல் விசாரணை 6.9.2007 நடைபெற்றது. இவ்வழக்கின் முக்கிய சாட்சியான சீர்காழி பெரியார் செல்வம் நீதிமன்றத்தில் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் நாடி சோதிட மோசடி பற்றி விளக்கம் அளித்தார். வழக்கு 11.10.207 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### தெருமுனை பிரச்சாரம்

சீர்காழியில் 5.1.2006 அன்று ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதை விளக்கி காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை புதிய பேருந்து நிலையம் தென்பாதி, மருத்துவமனைசாலை, மணிகூண்டு, கடைவீதி, கொள்ளிட முக்கூட்டு, வடக்கு வீதி, பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. பிரச்சாரத்தில் மாவட்ட துணை தலைவர் சோம. ராசராசன், பெரியார் செல்வம் உரை நிகழ்த்தினர். கழகத் தோழர்கள் கடை கடையாகச் சென்று ஈழத்தில் பட்டினியால் வாழும் தமிழர்களுக்கு உணவு சேகரித்தனர். 25 மூட்டை அரிசி, 5000க்கு மதிப்புள்ள மருந்து பொருட்கள் சேகரிக்கப்பட்டு, தமிழ் ஈழ ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளர்களிடம் கொடுக்கப்பட்டது. பிரச்சார வாகனத்தில் இந்த நிகழ்ச்சியில் கழக நகர செயலாளர் பிரபாகரன், ரகுநாத், பாக்கியராஜ், சந்தோஷ், நரேசு குமார், இன்பசேகர் ஆகியோர் 15 நாட்களுக்கும் மேல் உழைத்து உணவுப் பொருட்களை சேகரித்தனர்.

### பேரணி ஆர்ப்பாட்டம்

சீர்காழியில் 28.9.2007 அன்று காலை 11 மணியளவில் தமிழக முதல்வர் கலைஞருக்கு கொலை மிரட்டல் விட்ட பார்ப்பன பயங்கரவாதியை கைது செய்யக் கோரியும், பார்ப்பன பயங்கரவாத அமைப்புகளை தடை செய்ய கோரியும் கண்டன பேரணி சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் துவங்கியது. பேரணிக்கு கழக மாவட்டத் தலைவர் இரா. பரசுராமன் தலைமை வகித்தார். இந்தப் பேரணிக்கு மா.பெ.பொ.க., பெரியார் தி.க., ம.தி.மு.க. ஆகிய அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன. பேரணியில் ராமன் புரட்டை அம்பலப்படுத்தி, முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் விடுதலை முன்னணி அம்பிகாபதி தலைமையேற்றார். ஆர்ப்பாட்டத்தில் வி.வி.மு. வட்ட செயலாளர் ஸ்டாலின், மா.பெ.பொ.க. மாவட்ட செயலாளர் முத்து அன்பழகன், தமிழர் உரிமை இயக்க அமைப்பாளர் பேராசிரியர் முரளிதரன், பெரியார் பகுத்தறிவு மைய தலைவர் நாக.ரகுபதி, பெரியார் தி.க. மாவட்ட துணைத் தலைவர் சோம. ராசராசன், மாவட்ட துணை செயலாளர் காத்திருப்பு செ. குமார், நகர தலைவர் சீர்காழி பெரியார் செல்வம், ஒன்றியத் தலைவர் இரா.விசயகுமார், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற மாவட்ட செயலாளர் அன்பு ராசப்பா ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழக நகர செயலாளர் பிரபாகரன், மா.பெ.பொ.க. நகர செயலாளர் கருப்புச்சட்டை செயராமன் மற்றும் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பேரணியில் கலந்து கொண்டனர். இறுதியாக தமிழ்நாடு மாணவர் கழகத்தின் கொள்ளிட ஒன்றிய அமைப்பாளர் காருகுடி ச. கார்த்திகேயன் நன்றியுரையாற்ற நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**செய்தி தொகுப்பு:**
**பெரியார் செல்வன்**

## கரூரில் பகுத்தறிவுப் பிரச்சாரம்

கரூரில் தி.மு.க. தோழர்களும், பகுத்தறிவாளர்களுமான பரமத்தி சண்முகம், வழக்கறிஞர் மணிராசு உட்பட தோழர்கள் 'பகுத்தறிவு மன்றம்' என்ற அமைப்பின் வழியாக தொடர்ந்து பகுத்தறிவுப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த செப்.18, 19 தேதிகளில் பகுத்தறிவு மன்றத்தில் சார்பில், மூடநம்பிக்கை ஒழிப்பு விளக்கக் கூட்டங்கள் கரூரில் எழுச்சியுடன் நடந்தன. செப்.19 ஆம் தேதி தோழர் கீகசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். செப்டம்பர் 20 ஆம் தேதியன்று, மேட்டூர் இளவரசன் லிட்டில் ஏஞ்சல் ஆங்கில பள்ளியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களிடையே 'மந்திரமா-தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தினார். கரூர் பகுத்தறிவாளர் மன்றம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சிகளில் கழகத் தோழர்கள் கரூர் தனபால் (மாவட்ட கழகத் தலைவர்), கழகத்தினர், தி.மு.க. தோழர்கள் ஏராளமாக பங்கேற்றனர்.

கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க முயன்ற ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு உரிய விளக்கங்கள் மூலம் பதிலடி தரப்பட்டது.

## திருநெல்வேலியில்

17.9.07 இல் தந்தை பெரியாரின் 129 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு திருநெல்வேலி - தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பாளை பேருந்து நிலையம் சந்திப்பிலுள்ள பெரியார் சிலைக்கு நெல்லை மாநகர் மாவட்டச் செயலாளர் பொ. பொன்ராசு தலைமையில், மாவட்டப் பொருளாளர் க.மா. அமைதிராசன் முன்னிலையில் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பால்.பிரபாகரன் மாலையணிவித்தார். அதன் பின் பாளை சந்தை திடலிலுள்ள தாமிரபரணி படுகொலையில் உயிர்விட்ட ஜான் பூபால் ராயன் நினைவு கொடிக்கம்பத்தில் மாவட்டப் பொருளாளர் அமைதிராசன் கொடியேற்றி வைத்தார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அய்யப்பன் கோவிலுக்கு போகப் போறீங்க. அந்த இரயில் அதற்குத்தான் போகும். திருப்பதிக்கு நேற்று போயிருப்பீங்க. அந்த இரயில் அதற்குத்தான் போகும். ஆனாலும் உரிமை நம்முடையது. அதே அய்யப்பக் கோயிலில் இருக்கிற மலையாளிகள் நீங்களும் இந்துக்கள்னு தானே என்று கூறி, தமிழ்நாட்டிற்கு சேலம் கோட்டம் வரட்டுமே என்று சொல்கிறார்களா? இல்லையே!

கேரளாவில் இருக்கிற கம்யூனிஸ்ட்டாக இருந்தாலும், பி.ஜே.பி.யாக இருந்தாலும் காங்கிரஸ்காரராக இருந்தாலும் தான் மலையாளி என்ற உணர்வோடு சேலம் கோட்டத்தை எதிர்க்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து அடுத்த மாசம் போகப் போறீங்களே அரிகர புத்திர அய்யப்பனைத் தேடி. அந்த 'அய்யப்பன்' இந்தக் கோட்டத்தை தமிழ் நாட்டுக்கு கொடுக்கலாம்னு சொல்லலையே. இந்துதான், நீங்களும் இந்துதானே ஏய்யா தரலை? நேற்றுப் போய் திருப்பதியிலே போய் கொட்டினீங்களே, கோவையில் இருந்து போய்த்தான் அதிகமாக கொட்டுகிறான்.

ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நீரை, தமிழகத்துக்கு விட மறுக்கிறான். பாலாறுக்குக் குறுக்கே அணை கட்டுகிறான். ஆந்திரா இந்து - தமிழ்நாட்டு இந்து பயனடையட்டுமே என்ற நினைக்கிறானா? கேரளா இந்து, முல்லைப் பெரியாறு அணையை உயர்த்தி, தமிழ்நாட்டு இந்துக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீரை வழங்க முன் வருகிறானா? உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டாலும் கேட்க மறுக்கிறானே? இந்து உணர்வு எங்கே போனது? ஆந்திரா, கேரளா, பா.ஜ.க. இந்துவாவது, தமிழ்நாட்டு இந்துக்களின் நியாயமான உரிமைக்கு குரல் கொடுக்கிறானா? இல்லையே!

'இந்துக்களே, ஒன்றுபடுவீர்!' என்று உங்களிடையே முழக்கமிட்டு வருகிறவர்களைப் பார்த்து, நீங்கள் இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டும். யாரையும் புண்படுத்துவதற்காக நாங்கள் இந்தக் கருத்துக்களை கூறவில்லை. நாம் பண்படுவதற்காக, நம்மை சுரண்டாமல் இருப்பதற்காக நம்மீது சுமத்தப்படும் இழிவுகளிலிருந்தும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் விடுபடுவதற்காகத்தான், இதை எல்லாம் சுட்டிக் காட்டுகிறோம். (நிறைவு)

**தொகுப்பு:பொள்ளாச்சி பிரகாசு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 25th October 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.